
# சாமுவேல் பவுல் ஐயர்
# வாழ்க்கை வரலாறு



எஸ்.ஜி. தானியேல்

# சாமுவேல் பவுல் ஐயர் வாழ்க்கை வரலாறு

எஸ்.ஜி. தானியேல்

கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்
சென்னை

*Published by*
THE CHRISTIAN LITERATURE SOCIETY
Post Box 501, Park Town, Chennai-600 003

**SAMUEL PAUL IYER VALZHKAI VARALARU**
by **S.G. Daniel**
in Tamil

© CLS
*First Printed at K.R. Press, Chennai,* 1903
*First Printed by C.L.S. in* 1999

Printed at The C.L.S. Press, Vepery, Chennai-600 007—L6670

# பதிப்புரை

'என் மகனே தேவன் உன்னை வாலாக்காமல் தலையாக்கு வார். நீ கீழாகாமல் மேலாவாய்' என்று தன் தந்தையின் மூலமாக ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்ட கனம் சாமுவேல் பவுல் ஐயரவர்கள், 1844-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15-ஆம் நாள் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த பாட்டக்கரை என்னும் ஒரு கிராமத்தில் பிறந்தவர். படிப்படியாக முன்னேறி கிராமத் தலைவராகவும், உபதேசியராகவும் இருந்த சாமுவேல் பவுல் ஐயர் 1871-ஆம் ஆண்டு குருப் பட்டத்திற்கென்று தேர்ந் தெடுக்கப்பட்டார். இவரின் ஊழியங்களை மலை ஊழியம், நகர ஊழியம், நாட்டுப்புற ஊழியம் என்று மூவகையாகப் பிரிக்கலாம். ஐயர் எந்தெந்த திருச்சபையில் பணிபுரிந்தாரோ அந்தந்த இடங்களில் சபையின் அங்கத்தினர்கள் பெருகவே செய்தார்கள்.

ஆண்டவரின் வார்த்தைகளை எடுத்துரைத்து பிரசங்கிப் பதில் வல்லவரான இவர் இருநூறுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். இவற்றில் ஆவிக்குரிய புத்தகங்களும், மொழி பெயர்ப்பு நூல்களும், சிறுவர்களுக்கான நூல்களும், முஸ்லீம் களுக்காக எழுதப்பட்டுள்ள நூல்களும் அடங்கும். முப்பதுக் கும் மேற்பட்ட ஒற்றைத்தாள் பிரதிகளையும் எழுதியுள்ளார் ஐயர். மனக்கவலை மேற்கொண்ட சமயங்களில் எழுதிய தியான விண்ணப்பம் வெகு அருமையானது. எகோவா, சரீர

மில்லாதவர், பகுக்கப்படாதவர் என நானூற்று நாற்பத்தைந்து தியானங்களை நம்முடைய அன்றாடக தியானத்தில் பயன் படுத்தக்கூடிய வகையில் அவர் எழுதியுள்ளதும் ஒரு சிறப்பு. தியானத்தில் பயன்படுத்தும் சில ஞானப்பாட்டுக்களையும் எழுதியுள்ளார். கிறிஸ்தவ இலக்கியத்தின் பல்வேறு துறை களில் தம்முடைய தனி ஆற்றலை வெளிப்படுத்திய ஐயருக்கு அக்கால ஆங்கிலப் பேரரசு '**ராவ்சாகிப்**' என்னும் பட்டத்தை வழங்கியது.

இந்நூலாசிரியர் எஸ்.ஜி. தானியேல் அவர்கள் ஐயரின் மருமகன். கல்வித்துறையில் வல்லுநராக விளங்கியவர். சென்னை சைதாப்பேட்டையிலுள்ள அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பணியாற்றியதோடு பல அரிய நூல் களையும் அவர் எழுதியுள்ளார். பிற மொழியாளர்கள் தமிழ் கற்றுக் கொள்வதற்குத் துணையாக அவர் எழுதிய நூல் கிறிஸ் தவ இலக்கியச் சங்கத்தின் வெளியீடாக மலர்ந்து இன்றளவும் பல மறுபதிப்புக்களைக் கண்டுவருகிறது. திரு. எஸ்.ஜி. தானி யேல் அவர்கள் தம்முடைய மாமனாரைப் போலவே கர்த்த ருடைய ஜெபத்திற்கு விளக்க நூல் ஒன்றையும் எழுதியுள்ளார். அவர் ஐயரவர்களை நன்கு அறிந்தவராக இருந்ததால் அவரு டைய வாழ்க்கை வரலாற்று நூலை முக்கியக் குறிப்புகள் எதனையும் விட்டுவிடாமல் தொகுத்து எழுதியுள்ளார்.

கிறிஸ்தவ இலக்கியச் சங்கம் சாமுவேல் பவுல் ஐயரின் **மோட்சப் பிரயாணம், ஆத்துமநேசரின் அங்க மகத்துவம், தியானச் சோலை, தியான ஆலயம், உங்களோடு ஒரு நிமிடம், கர்த்தருடைய ஜெபம், புதிய ஏற்பாட்டுப் புருஷர்** ஆகிய நூல்களை மறுபதிப்பு செய்து வெளியிட்டுள்ளது. ஐயரவர் களின் நூலுக்கு வாசகர்களிடையே மிகுந்த வரவேற்பு உண்டு.

சாமுவேல் பவுல் ஐயரின் வாழ்க்கை வரலாற்று நூலை கிறிஸ்தவர்கள் அனைவரும் வாங்கிப் படித்து பயன் பெறுவார்கள் என்ற நம்பிக்கையோடு அதனை உங்களுக்கு வழங்குகிறோம்.

*2-3-99*
சென்னை

**ஸ்வீட்லின் பிரபாகரன்**
*தமிழ்ப் பதிப்பாசிரியர்*
*கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்*

# முகவுரை

தமிழ்க் கிறிஸ்தவர்களுக்கு உபயோகமாக அநேக புஸ்தகங்களை உண்டுபண்ணின காலஞ்சென்ற கனம். சாமுவேல் பவுல் ஐயருடைய ஜீவிய சரித்திரத்தை ஆதியோடந்தமாய் அறிய வேண்டுமென்று அவருடைய சிநேகிதரில் அநேகர் விரும்பினபடியால் இச்சிறு புஸ்தகம் அவர் பின் வைத்துப் போன டயரிகள், குறிப்புகள் மற்றும் ரிப்போர்ட்டுகள், கடிதங்கள் முதலிய பல ஆதாரங்களைக் கொண்டு எழுதப்பட்டது.

எஸ்.ஜி. தானியேல்

சென்னை
ஜூன், 1903

# பொருளடக்கம்


பக்கம்

**அதிகாரம் I. இளமைப்பிராயம் 1844-1863**

| | |
|---|---|
| பிறந்த தேதியும் இடமும் .. .. | 1 |
| அவருடைய தகப்பனார் தானியேல் பவுல் ஐயரைப் பற்றி சிலகுறிப்புகள் .. .. | 1 |
| தானியேல் பவுல் ஐயரின் பிரசங்கதிறமை .. .. | 3 |
| தானியேல் பவுல் ஐயரின் அந்தியகாலம் .. .. | 4 |
| தானியேல் பவுல் ஐயரின் மரணநேரம் .. .. | 5 |
| தானியேல் பவுல் ஐயர் மக்களுக்கிட்ட ஆசீர்வாதம் .. .. | 5 |
| சாமுவேல் பவுல் ஐயரின் ஆரம்ப பயிற்சி .. .. | 6 |
| மெஞ்ஞானபுரம் போர்டிங் பள்ளிக்கூடம் .. .. | 6 |
| பாளையங்கோட்டை சி.எம்.எஸ். பிரிப்பரேண்டை கல்விச்சாலை .. .. | 7 |
| வட திருநெல்வேலியில் தேசாந்திரப் பிரசங்கி .. .. | 7 |

**அதிகாரம் II. குருப்பட்டத்திற்கு முந்தின தேவ ஊழியம் 1863-1874**

| | |
|---|---|
| ரீடரும் உபாத்தியாயரும் .. .. | 8 |
| ஜே. தோமாஸ் ஐயர் அவரை சென்னபட்டணம் அனுப்ப யோசித்தது—இடையூறுகள் .. .. | 9 |
| சென்னபட்டணம் வந்து சேர்ந்தது .. .. | 10 |
| சென்னபட்டணத்தில் W.T. சத்தியநாதன் ஐயர் .. .. | 10 |
| சத்தியநாதன் ஐயரின்கீழ் உபதேசியார் .. .. | 11 |
| P. சிமியோன் ஐயர் மூத்தமகளை மணம் புரிந்தது .. .. | 11 |

பக்கம்


கனம் சார்ஜென்று அத்தியட்சர் P. சிமியோன்
ஐயரைப் பற்றிச் சொன்னது .. .. 12
R.C. மெக்டானல்டு ஐயர் கையின்கீழ்
விசாரணை உபாத்தியாயராயிருந்தது .. .. 13
பட்டம் பெறுவதற்குமுன் செய்துகொண்ட
விசேஷித்த ஆயத்தம் .. .. 14
அவருடைய டயரியிலிருந்து சில குறிப்புகள் .. .. 16
உதகமண்டலத்திற்கு மாற்றப்பட்டதும் உதவிக்
குருப்பட்டம் பெற்றதும் .. .. 17

அதிகாரம் III. *குருத்தொழில் 1874-1900*
உதகமண்டலத்தில் குருவாயிருந்தது .. .. 18
உவைநாடு மிஷன் .. .. 19
கள்ளிக்கோட்டை மிஷன் .. .. 19
குன்னூர் மிஷன் .. .. 19
வேலைக்காரர் மிஷன் .. .. 20
தேசாந்தரப் பிரசங்கவேலை .. .. 20
சென்னை C.M.S. வடசேகரம் .. .. 20
சென்னை C.M.S. வடசேகரசபையார்
பயணோபசாரப் பத்திரம் .. .. 21
சென்னை C.M.S. வடசேகரமிஷன்
உத்தியோகஸ்தர் வந்தனோபசாரப் பத்திரம் .. .. 25
வட திருநெல்வேலிக்கு மாற்றுதல் .. .. 27
அங்கே தேசாந்தர வேலை .. .. 28
வட திருநெல்வேலி சர்ச்சு கவுன்சிலுக்குப்
பிரதி முதலாளி .. .. 28
முதல் தவச உற்சவம் .. .. 28
நற்போதகத்தின் முக்கிய பத்திராதிபர் .. .. 28
மரணசகாய பண்டின் ஜெனரல் செக்கரட்டரி .. .. 28

பக்கம்

| | |
|---|---|
| சாக்ஷியாபுரம் கோவில் பெரிதாக்கப்பட்டது .. .. | 28 |
| கிளீனர்ஸ் யூனியன் முதலாளி .. .. | 28 |
| சாக்ஷியாபுரம் வட்டம் மிஷன் ஆசாமிகள் இவருடைய வேலையைப்பற்றி புகழ்ந்து பேசுதல் .. .. | 29 |
| சென்னை அத்தியக்ஷர் வேதாகமப்பந்தயப் பரீட்சைக்கும் குருப்பட்டம் பெற ஆயத்தப் படுபவர்களுக்கும் சோதனைக் கர்த்தா .. .. | 30 |
| கனம் சென்னை அத்தியக்ஷருக்கு ஆனரெரி சாப்ளன் .. .. | 30 |
| கனம் மோர்ளி அத்தியக்ஷருக்கு ஆனரெரிசாப்ளன் .. .. | 30 |
| மிஷனரி சங்கக்கூட்டங்களுக்குப் பிரதிநிதி .. .. | 30 |
| தமிழ் ஞானப்பாட்டு, ஜெபப்புஸ்தகம் திருப்புதலின் கமிற்றி மெம்பர் .. .. | 30 |
| திருநெல்வேலி ஜில்லா போர்டு, சிரிவில்லிபுத்தூர் தாலுக்கா போர்டுமெம்பர் .. .. | 31 |
| கவர்னர் ஜெனரல் அவர்களால் ''ராவ்சாகிப்'' பட்டம் அளிக்கப்பெற்றார் .. .. | 31 |
| மகாகனம் ஜெல் அத்தியக்ஷருடைய கடிதம் .. .. | 31 |
| மகாகனம் மோர்ளி அத்தியக்ஷருடைய கடிதம் .. .. | 32 |
| வெனரபிள் ஆர்ச்டீக்கன் W.W. எல்விஸ் ஐயருடைய கடிதம் .. .. | 32 |
| 1899-ம் வருஷத்துப் பேர்போன சிவகாசிக் கலகம் .. .. | 32 |

அதிகாரம் IV. அவருடைய அந்தியகாலம்

| | |
|---|---|
| ''மரிக்கிறது எவ்வளவு நன்மை'' .. .. | 35 |
| கிறிஸ்துவைப்போல் ஜீவித்தல் .. .. | 35 |
| வியாதிப்படுக்கை .. .. | 36 |
| அவருடைய கடைசிவார்த்தைகள் .. .. | 37 |
| மரணமும் அடக்கமும் .. .. | 37 |

பக்கம்

அதிகாரம் V. அன்றாடக ஜீவியம்

| | | | |
|---|---|---|---|
| தினசரி வேலை | .. | .. | 40 |
| குடும்ப ஜீவியம் | .. | .. | 41 |
| அவருடைய அந்தரங்க தியான விண்ணப்பம் | .. | .. | 42 |
| குடும்ப ஜெபம் | .. | .. | 57 |
| தஞ்சகீதம் | .. | .. | 58 |

அதிகாரம் VI. அவருடைய பிரசங்கங்கள்

| | | | |
|---|---|---|---|
| அவருடைய பிரசங்கங்கள் எவ்வளவாய் நன்கு மதிக்கப்பட்டன | .. | .. | 60 |
| தெளிவான பிரசங்கங்கள் | .. | .. | 61 |
| ''எச்சரிக்கையாயிரு, நிலைத்திரு'' | .. | .. | 62 |

அதிகாரம் VII. அவர் எழுதின புஸ்தகங்கள்

| | | | |
|---|---|---|---|
| அளவிறந்த நூலாசிரியன் | .. | .. | 83 |
| J. பார்ட்டன் ஐயருடைய நற்சாட்சி | .. | .. | 83 |
| பலவித சபைவேலைகளுடன் இத்தனை புஸ்தகங்களை எப்படி எழுதிமுடித்தார் | .. | .. | 83 |
| அவருடைய புஸ்தகங்களைப்பற்றி சில குறிப்புகள் | .. | .. | 85 |
| சுயமாய் எழுதின விசேஷித்த புஸ்தகங்கள் | .. | .. | 86 |
| மொழிபெயர்த்த விசேஷித்த புஸ்தகங்கள் | .. | .. | 86 |
| விசேஷித்த உபந்நியாசங்கள் | .. | .. | 87 |
| ''கிறிஸ்துவைப்போல் ஜீவித்தல்'' முற்றுப் பெறவில்லை | .. | .. | 87 |
| அவர் எழுதிய புஸ்தகங்களின் ஜாபிதா | .. | .. | 87 |

பக்கம்

அதிகாரம் VIII. அவரைப்பற்றி மற்றவர்கள் கொடுத்த சாட்சி

மகாகனம் ஜெல் அத்தியக்ஷரவர்கள் .. .. 95
மகாகனம் மோர்ளி அத்தியக்ஷரவர்கள் .. .. 96
வெனரபிள் ஆர்ச்டீக்கன் எல்விஸ் ஐயர், M.A. .. .. 96
கனம் இ.எஸ். கார் ஐயர், M.A. .. .. 96
இ.ஏ. டக்ளஸ் ஐயர், M.A. .. .. 96
ஒரு C.M.S. சுதேச குரு .. .. 97
ஒரு S.P.G. குரு .. .. 97
டாக்டர் எஸ். சத்தியநாதன், M.A., L.L.D. .. .. 98
ஜே. சத்தியநாடார், M.A., M.L. .. .. 98
இ. இக்னேஷியஸ், B.A. .. .. 98
உதகமண்டலம் சர்ச்மிஷன் சபையார் .. .. 99
திருநெல்வேலி சர்ச் மிஷன் டிஸ்ட்ரிக்ட் சர்ச் கவுன்சில் .. .. 99

# 1-ஆம் அதிகாரம்

## இளமைப்பிராயம் 1844 — 1863

சாமுவேல் பவுல் ஐயர் திருநெல்வேலி ஜில்லா தென்கரைத் தாலுகாவைச்சேர்ந்த பாட்டக்கரையென்னும் ஒரு கிராமத்தில் 1844-ஆம் வருஷம் ஜூன் மாசம் 15-ஆம் தேதி பிறந்தார். இந்தக் கிராமம் திருநெல்வேலி ஜில்லா சர்ச்சுமிஷன் சங்கத்தாருடைய முக்கியஸ்தானங்களிலொன்றாகிய மெஞ்ஞானபுரத்திற் கருகேயுள்ளது. இது நிலவளம் நீர்வளம் பொருந்தி, மாந்தோப்புகள் அடர்ந்த செழிப்பான ஒரு சிற்றூர். இவ்வூர் மாம்பழம் அதின் சுற்றுப்புறத்தாரால் இந்நாள் வரையும் அதிக மதுரமும் மேன்மையுமுள்ளதாக மதிக்கப்பட்டு வருகிறது.

சாமுவேல் பவுல் ஐயருடைய ஜீவிய சரித்திரத்தை வாசிக்குமுன் அவருடைய தந்தையாகிய தானியேல் பவுல் ஐயரைப்பற்றி சில விஷயங்களை அறிந்து கொள்வது அவசியம்.

தானியேல் பவுல் ஐயர் ஆசீர்வாதபுரம் சேகரத்திலுள்ள கலுங்குவிளையென்னும் கிராமத்தில் பிறந்து வளர்ந்து, சிறுபிராயத்தில் படிப்பிக்கப் படாமல், வாலிபனாகும்வரை தமது சொந்த அலுவலைப் பார்த்து வந்தார். அப்போது தாம் படியாதிருக்கிறதைக் குறித்து துக்கப்பட்டு, தாய் தகப்பன்மார் அனுமதிபெற்று பள்ளிக்கூடம்போய் நாடோறும் கொஞ்சநேரம் படிக்கவும், வாசிக்கவும், எழுதவும் கற்றுக்கொண்டதும் தவிர, அந்தக்காலத்தில் தானே காட்டிலும் வீட்டிலும் தனிச்செபம் பண்ணி வேத புத்தகத்தை ஒழுங்காய் வாசித்து, வேத அறிவில் தேற பிரயாசப்பட்டு வந்தார். 1834-ஆம் வருஷம் கனம் இரேனியஸ் ஐயரால்

இவர் உதவிவகுப்பில் சேர்க்கப்பட்டு, பின் அவர் கையின்கீழ் உபதேசியாராக நியமிக்கப்பட்டு அவர் விசாரணைக்குள்ளிருந்த காலமெல்லாம் உத்தமமாய் வேலை நடப்பித்து வந்தார். அதன் பின் கனம் பெற்றிட் ஐயர் விசாரணைக்குள்ளும், கனம் தோமாஸ் ஐயர் விசாரணைக்குள்ளும், இடையில் இவர் இங்கிலாந்துக்குப் போயிருந்த காலத்தில் கனம் ஜேம்ஸ் ஸ்பிராட் ஐயர் விசாரணைக்குள்ளும் பாட்டக்கரை, நாலுமாவடி, வெள்ளாளன் விளை முதலான பிரதான சபைகளில் தமக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேசி அலுவலை உண்மையோடும் ஜாக்கிரதையோடும் பார்த்து வந்ததும் அன்றி, உபதேசிமாருடைய படிப்புக் கூட்டங்களுக்குத் தவறாமல் வருகிறதிலும், வேதாகமத்தை நாள்தோறும் வாசித்து ஆராய்கிறதிலும், போதகமாரால் சொல்லப்படும் உபதேசங்களை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுகிறதிலும், அவைகளை மற்றவர்களிடத்தில் வினாவிக் கொள்ளுகிறதிலும், கிறிஸ்தவர்களுக்காகவும், புறமதஸ்தருக்காகவும் ஜெபம் பண்ணுகிறதிலும், சமுசாரஜெபம் நடத்துகிறதிலும், இந்துக்களுக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறதிலும், வெகு முயற்சி உள்ளவராய் இருந்தார். 1855-ஆம் வருஷம் சாத்தன்குளம் சேகரத்திற்கு விசாரணை உபதேசியாராகி, வேலைபார்த்து வருகிற காலத்தில், சபைகளை விசாரித்து ஞானஸ்நானம், கர்த்தருடைய ராப்போஜனம் முதலியவைகளுக்கேற்ற உபதேசங்களைப் படிப்பித்து, பாடங்களைச் சோதித்துவருகிற வேலையே போதுமானதாயிருந்தும், அவற்றோடுகூட அந்தந்த கிராம உபதேசிமாரைக் கூட்டிக்கொண்டுபோய் அடுத்த கிராமங்களிலிருக்கிற அஞ்ஞானிகளுக்குப் புத்திமதி சொல்லி, புறமதஸ்தர் சீர்ப்படும்படியாக அந்தந்தக் கிராமக்கோவில்களில் ஜெபம் செய்து வந்தார். தமது வீட்டிலிருக்கும் நாட்களில் கிறிஸ்தவர்கள் சீர்திருத்தம் அடையவும், அஞ்ஞானிகள் மனந்திரும்பவும், குடும்பத்தோடு ஜெபம்பண்ணி வருவார். அஞ்ஞானிகளுக்கும், மார்க்கத்தை விட்டு மறுதலித்துப் போனவர்களுக்கும், கோவிலுக்கு வராமல் அசட்டையாயிருந்தவர்களுக்கும், வீடுவீடாகப் போய் புத்தி சொல்லி வருவதில் வெகுமுயற்சியுள்ளவராயிருந்தார். இப்படி

23-வருஷகாலம் உபதேசி அலுவல் பார்த்தபின் 1856-ஆம் வருஷம் மார்ச்சு மாதம் 1-ஆம் தேதி உதவிக் குருப்பட்டமும், 1859-ஆம் வருஷம் டிசம்பர் மாதம் 18-ஆம் தேதி குருப்பட்டமும் பெற்று திருப்பணிவிடை வேலை நடப்பித்து வந்தார். இவர் இலக்கண இலக்கியம் கற்காதவராயினும் நாடோடிய பழமொழி, உவமானம் முதலியவற்றைக்கொண்டு, கேட்போர் இருதயத்தைக் கவர்ந்துகொள்ளத்தக்க பேச்சுத்திறமையுள்ள பிரசங்க வல்லவனாயிருந்தார். இவர் பண்ணின பிரசங்கங்களெல்லாம் பல நாட்களாய் யோசனைசெய்து வேதசாஸ்திர முறைப்படி பங்குகளும், பிரிவுகளும், உட்பிரிவுகளும், பொருந்த அமைத்து எழுதப்பட்டதாயாவது, முன் தயார்செய்யப்பட்டதாயாவது இராமல் பிரசங்கபீடம் ஏறினவுடனே அப்போதைக்கப்போது ஆவியின் ஏவுதலால் அனல்மூண்டு செய்த பிரசங்கங்களாயிருந்தன.

இப்படிப்பட்ட பிரசங்கங்களைப் பலதரங் கேட்டுக்கொண்டிருந்த கனம் ஜே. தோமாஸ் ஐயர் அவைகளினால் தனக்கு அனேகந்தரம் எழுப்புதல் உண்டானதென்றும் ''பவுல் தானியேல் செய்த பிரசங்கங்களைப்போலொத்த பிரசங்கங்கள் லண்டன் நகரத்துப் பொற்பங்களில் செய்யப்படுமாகில் ஆலயங்களில் இடம் காணாதேபோம்'' என்றும் இங்கிலாந்து முதலிய இடங்களுக்கு எழுதின ரிப்போர்ட்டுகளில் காட்டியிருக்கிறார். ''ஒருவேளை இந்தியாவிலிருந்து எழும்பின குருக்களில் இவர்தான் சிரேஷ்ட பிரசங்கியாயிருக்கலாம்.'' இவர் சாதுரிய பிரசங்கி என்பது இவரை அறிந்த யாவருக்கும் தெரிந்த விஷயம்.

1860-ஆம் வருஷம் நவம்பர் மாதம் சாத்தன்குளத்தில் விஷபேதியுண்டாகி சபைகளில் அனேகர் வருத்தப்பட்டதினாலே அவர் வழக்கப்படி வீடுகள் தோறும் போய் ஜனங்களுக்குப் புத்திசொல்லி ஜெபம் பண்ணி வந்ததுமன்றி, அந்தக் காலத்திற்கேற்றதாக ஜனங்களுக்குப் பிரசங்கம் பண்ணவேண்டுமென்று

யோசித்து, 18-ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமையன்று, ''தாவீது காத்தைநோக்கி, கொடிய இடுக்கணில் அகப்பட்டிருக்கிறேன். இப்போது நாம் கர்த்தருடைய கையிலே விழுவோமாக. அவருடைய இரக்கங்கள் மகா பெரியது. மனுஷர் கையிலே விழாதிருப்பேனாக'' (2 சாமு. 24:14) என்ற வாக்கியத்தின்மேல் கூடிவந்த எல்லாருடைய மனதுக்கும் விளங்கத்தக்கவிதமாய் மகா எழுப்புதலாய் பிரசங்கம் பண்ணினார். அப்படி பிரசங்கித்த மறுநாள் அவருக்கு விஷபேதியுண்டாகி நாலுநாள் அவ்வியாதியோடு படுக்கையிலிருந்து, வீட்டு ஜனங்களுக்கும் தன்னைப் பார்க்கவந்த உபதேசிமாருக்கும், சபையாருக்கும் அவரவருக்கேற்ற புத்திசொன்னார். தன் சபையிலுள்ள ஒரு வாலிபனை விடியற்காலம் மூன்றுமணிக்கு வருவித்து ''நீ இன்னும் உன் ஆத்துமாவைக்குறித்து கவலைப்படவில்லை. நாங்கள் அஞ்ஞானிகளுக்குப் பிரசங்கிக்கும்போது உன் நடக்கையைக் குறித்து ஆவலாதி சொல்லுகிறார்கள். நீ இனிமேல் அஞ்ஞானிகளுக்கு இடறலாய் நடக்கமாட்டேனென்று எனக்கு உறுதிசொல். நீ இனி கர்த்தருடைய கிருபையைத்தேடி ஒழுங்காய் நடந்தால் அவர் உன்னையும் உன் வீட்டாரையும் ஆசீர்வதிப்பார்'' என்று சொன்னார். கொஞ்சம் கவலைத்தாழ்ச்சியுள்ள இரண்டொரு சபையாரைப்பார்த்து ''இயேசுநாதரை விசுவாசியுங்கள், அவரே உங்களை இரட்சிக்கும்படி மரித்தார். நினையாதவேளை மரணம் வரும், இப்பொழுதே மனதார உங்களைக் கர்த்தருக்கு ஒப்புக்கொடுங்கள்'' என்று கிறிஸ்துமார்க்கத்தின் உண்மையில் நிலைத்திருக்கும்படி புத்தி சொன்னார்.

தம்மைப்பார்க்க வந்த உபதேசிமாருக்குச் சில யோசனைகளைச் சொன்னபோது, ''அஞ்ஞானிகளால் அல்லது பிரிவினைக்காரர்களால் சபைகளில் குழப்பம் நடவாதபடி மிகவும் கவலையாய்ச் செபம் செய்தேன். எனக்காகவும் என் வீட்டாருக்காகவும் மாத்திரம் அல்ல, சபைக்காகவும் தினம் மூன்றுதரம் ஜெபம்

செய்தேன். சபையில் என் சொந்தக் காரியத்தைநாடி நடக்கவில்லையென்றும், ஒருவருக்கும் இடைஞ்சலாயிருக்கவில்லையென்றும் என் மனச்சாட்சி சொல்லுகிறது. நான் சபைக்காக இன்னும் செய்ய வேண்டிய அநேகக் கடமைகள் உண்டு. அதற்காகத் துக்கப்படுகிறேன். ஆகிலும் என்னிமித்தம் ஒரு ஆத்துமா கெட்டுப்போனதுண்டா? அதை இப்போது சொல்வது நல்லது'' என்றார். தம்மோடுகூட இருந்த விசாரணை பரமானந்தம் உபதேசியாரைப்பார்த்து ''சபைக்கடுத்த புறம்பான காரியங்களினாலே எனக்கு அதிகக்கவலையுண்டாகாதபடி நீர் கூடிய மட்டும் பார்த்துக்கொண்டதற்காக மிகவும் சந்தோஷப்படுகிறேன். நீர் இனிமேல் வருகிறவர்களோடு இணங்கி அலுவலைத் தைரியமாய்ச் செய்யவும் அஞ்ஞானிகளுக்கு அடிக்கடி பிரசங்கிக்கவும் அவர்கள் சபையாரை உபத்திரவப்படுத்தும்போது சபையாருக்கு உதவிசெய்யவும் வேண்டுமென்று'' சொன்னார். ஒரு உபதேசியாரைப் பார்த்து. ''நீர் உம்முடைய ஊர்ச்சபையாரை அன்பாய் நடத்தவேண்டும்'' என்று புத்திசொல்லி பொதுவாக உபதேசிமார்செய்த அதிக உதவியைக் குறித்துச் சந்தோஷப்பட்டு, ஊழியத்தில் அதிகமாய் முன்னிட்டுப்போகும்படி ஏவினார். பின்பு அவர் ''நான் திரியேகதேவனைப் பூரணமாய் விசுவாசித்திருக்கிறேன். அவரில் நிலைத்திருக்கும்படி எனக்குக் கிருபை தந்திருக்கிறார்'' என்று சந்தோஷமாய் அறிக்கையிட்டு தனக்கு பேதிகண்ட ஐந்தாம் நாளாகிய 23-ஆம் தேதி வெள்ளிக்கிழமை சாயந்தரம் ஐந்துமணிக்கு கர்த்தருடைய இராஜ்யத்தின் இளைப்பாறுதலுக்குட்பட்டார். [Rev. V. Simeon's memoirs of Native ministers.]

இவர் சாகுமுன் தன்னுடைய பதினொரு பிள்ளைகளையும் ஒவ்வொருவராக ஆசீர்வதித்தார். சாமுவேல் என்னும் இந்தக் குமாரனுக்கு ''என்மகனே தேவன் உன்னை வாலாக்காமல் தலையாக்குவார். நீ கீழாகாமல் மேலாவாய்'' என்னும் ஒரு விசேஷ ஆசீர்வாதத்தையும் கொடுத்தார்.

சாமுவேல் பவுல் ஐயர் இந்தச் சிறந்த பக்திமானுக்கு ஆறாவது ஜன்மித்த முதற்புத்திரன். இவருக்கு முந்தின ஐந்து பேரும் பெண்கள்.

சாமுவேல் பவுல் ஐயர் பால்யமாயிருக்கையில் தன் தகப்ப னார் உபதேசியார் அலுவல் பார்த்த கிராமத்தில் மூலாதாரக் கல்வி கற்றுக்கொண்டார். அங்கிருக்கையில் ஒவ்வொருநாள் மாலையிலும் இவருடைய அருமையான தகப்பனார் இவருக்கு வேத பாடம் சொல்லிக் கொடுத்து கேள்விகேட்பது வழக்கமா யிருந்தது. சிறு ஜெபங்களும் சொல்லிக் கொடுத்து நாள்தோறும் ஜெபம் பண்ணவும் போதித்து வந்தார். ஜெபம் தவறுகிறநாளில் சாப்பாடு குறையும் என்ற தண்டனையும் விதிக்கப்பட்டு அப் படியே நடந்துவந்தது. ஏழு வயதாயிருக்கும்போது மோசே எழுதின ஐந்து ஆகமங்களிலுமுள்ள சரித்திரங்கள் அனைத்தை யும் நன்றாய்ப் பாடம் பண்ணியிருந்தார். கிறிஸ்துநாதருடைய ஜீவிய சரித்திரமும் அக்காலத்தில் அவருக்கு சரித்திரப்போங் காய் சொல்லிக்கொடுக்கப்பட்டிருந்தது. எட்டாவது வயதில் தமிழும் இங்கிலீஷும் கற்றுக்கொள்வதற்காக மெஞ்ஞானபுரம் போர்டிங் ஆண் பள்ளிக்கூடத்தில் சேர்க்கப்பட்டார்.

அங்கிருக்கையில் இவருக்கு முக்கியமாய் இங்கிலீஷ் கற்றுக் கொடுத்தவர்கள், கனம் ஜே.டீ. தோமாஸ் ஐயரும், டாக்டர் ஜே.பீ. தோமாஸ் (Dr. J.B. Thomas, I.M.S.). போர்டிங் பள்ளிக் கூடத்தில் சேர்ந்த பின்பும் தகப்பனாருடைய மேல் விசாரணை குறையவில்லை. மாசாந்தர அபிவிர்த்தி ரிப்போர்ட்டு உபாத்தி யாயரிடத்திலிருந்து போய்க்கொண்டிருந்தது. மேலும் மாதாந் தரக் கூட்டத்துக்காக தகப்பனார் மெஞ்ஞானபுரத்துக்குப் போகும்பொழுதெல்லாம் கண்டிக்கவேண்டிய விஷயங்களில் கண்டித்து, உற்சாகப் படுத்தவேண்டிய விஷயங்களில் உற்சாகப் படுத்தி, போதித்து புத்திசொல்லி வந்தார். இந்த அன்புள்ள பிதா தன்குமாரனைப் பள்ளிக்கூடத்தில் பார்க்கும்படி போன சமயங்களில், ஒருதடவையாவது அவரோடு முழங்காலில் நின்று ஜெபம் பண்ணாமல் திரும்பினதில்லை.

மெஞ்ஞானபுரம் போர்டிங் பள்ளிக்கூடத்திலிருந்து 1861-ஆம் வருஷம் பெப்ரவரி மாசம் 25-ஆம் தேதி 17-ஆம் வயதாயிருக்கையில் பாளையங்கோட்டை பிரிப்பராண்டைக் கல்விச் சாலைக்கு அனுப்பப்பட்டார். அக்காலத்தில் அந்தக் கல்விச் சாலைக்குத் தலைமையாயிருந்த கனம் சார்ஜெண்ட் ஐயரவர்களின் கீழ்வேத சாஸ்திரங்கற்று அவ்விடத்துப் படிப்பை 1863-ஆம் வருஷம் மே மாதம் 1-ஆம் தேதி முடித்தார்.

அங்கிருக்கும்பொழுது வடதிருநெல்வேலியிலுள்ள இந்து மதஸ்தருக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படியாகக் கனம் பென் ஐயரவர்களோடும், மக்டானல்ட் ஐயரவர்களோடும் தேசாந்தரப் பிரசங்கியாக அனுப்பப்பட்டார். அங்கே கூடாரப் பிரசங்கங்கள் ஒழுங்காய் நடந்துகொண்டு வந்தன. சாமுவேல் பவுல் ஐயர் தான் பள்ளிக்கூடங்களில் கற்ற கல்வியனைத்தையும் விட இந்தக் கூடாரப்பிரசங்கங்களில் கற்ற கல்வியே மேலானதும் நிலையானதுமாயிருந்ததென்று பிற்காலத்தில் உணர்ந்து எழுதிவைத்திருக்கிறார். இங்கிருக்கும் பொழுதுதான் தெய்வ பக்தி இன்னதென்றும், பிறருக்கு உபயோகமாக மனுஷன் எவ்விதம் ஜீவிக்க வேண்டுமென்றும் மெய்க்கிறிஸ்தவனுடைய கடமைகள் இன்னவென்றும் தான் அறிந்ததாகச் சொல்லுகிறார். கனம் ராக்லாண்ட் ஐயரவர்களுடைய பரிசுத்த ஜீவியத்தைக் குறித்துத் தன் தகப்பனார் சொன்ன பக்திக்குரிய பலவிஷயங்கள், அந்த மகாத்துமாவினுடைய கல்லறையை சிவகாசியில் பார்த்த நிமிஷத்தில், தன் மனதை உடைத்து தனக்குள்ளே ஒரு பெரிய மாறுதலை உண்டாக்கிற்று என்றும் எழுதிவைத்திருக்கிறார்.

# 2-ஆம் அதிகாரம்

## குருப்பட்டத்துக்கு முந்தின தெய்வ ஊழியம் 1863-1874

இவர் முதல்முதல் 1863-ஆம் வருஷம் மே மாதம் 6-ந்தேதி மெஞ்ஞானபுரம் சர்க்கிளைச்சேர்ந்த சத்திய நகரம் என்னும் கிராமத்துக்கு ரீடரானார். அப்புறம் 1864-ஆம் வருடம் ஜூன் மாதம் 24-ஆம் தேதி கிருபாபுரத்துக்கு ரீடராகவும் உபாத்தி யாயராகவும் மாற்றப்பட்டு, சீக்கிரம் முன்னுக்குவரக்கூடியவ ராக விளங்கினார். மாதாந்தரக்கூட்டங்களில் இவர் எழுதிய பிரசங்கங்களைக் கேட்பது கனம் ஜே. தோமாஸ் ஐயருக்கு மிகப்பிரீதியாயிருந்தது. இவருடைய பிரசங்கங்கள் நூதனக் கருத்துகளமைந்தவையும், கேட்போரின் இருதயத்தைப் பரவசப் படுத்துவனவையுமா யிருந்தமையால் மேலதிகாரிகள் இவரைக் கருத்தாய் கவனிக்க நேரிட்டது. கனம் தோமாஸ் ஐயர் தாமே, இவருடைய பிரசங்கங்களில் தாம் முன் கேள்விப்படாத அனேக நூதன கருத்துகளிருக்கின்றனவென்று பிரஸ்தாபித்துச் சொல் வாராம்.

சாதாரண சங்கதிகளிலிருந்து நூதன கருத்துகளெடுத்து கேட் போர் மனதைக் கவரும்படியாக அவர் எழுதிவைத்த சில அருமையான உபதேசக்குறிப்புகளை இப்புத்தகத்துக்கு அனு பந்தமாகச் சேர்த்திருக்கிறோம்.

இவர் பிற்காலம் சபைக்கு மிகவும் பிரயோஜனமுள்ளவராகக் கூடுமென்ற ஒரு எண்ணம் **கனம் தோமாஸ் ஐயருக்கு** மனதில் ஆழமாய்ப் பட்டதினால் இவரை எவ்விதத்திலும் சென்னபட்ட

ணத்துக்கு அனுப்ப வேண்டுமென்று தன் உள்ளத்தில் தீர்மானித்துக் கொண்டார். இவருடைய தகப்பனார் 1860-ஆம் வருஷம் மரித்துப்போனபடியால் தாயார் தன் குமாரனைத் தூரமான இடத்துக்கு அனுப்ப இஷ்டப்படவில்லை. மேலும் அக்காலம் ரெயில்மார்க்கம் கிடையாது. பிரயாணம் செய்வது மகா கஷ்டம். மதராஸ் ரெயில்வே அப்பொழுதுதான் திருச்சிராப்பள்ளி வரையில் போடப்பட்டிருந்தது. திருநெல்வேலி ஜில்லாவிலிருந்து திருச்சிராப்பள்ளிவரையில் சுமார் இருநூறு மைலுக்கு அதிகம் கட்டைவண்டியில் பிரயாணம் பண்ணுவது சுளுவான காரியமல்ல. சென்னைக்குப் போவதற்கு இவ்வளவு பெரிய தடைகளிருந்தபோதிலும் தோமாஸ் ஐயர் தாம் தீர்மானித்தபடி அத்தடைகளை நீக்கி அனேகருக்குள் இவரை தாம் விசேஷித்துத் தெரிந்து கொண்டதாகவும், பிற்காலத்தில் இவர் நற்பேரெடுத்து, சபைக்கு அதிக நன்மை விளைவிப்பாரென்பதாகவும், பின் வரப்போகிற நன்மையை இழந்துவிடலாகாதென்று தாய்க்கும் மகனுக்கும் பல நியாயங்களை எடுத்துரைத்ததின் பேரில், தாயார் தன் மகனைச் சென்னப்பட்டணத்துக்கு அனுப்பும்படி அதிக வருத்தத்தோடே சம்மதித்தார்கள். இந்த அம்மாளுடைய ஆண்மக்களில் இவர் முதல்வரானதாலும், ஐந்துபெண்களுக்குப்பின் ஆறாவதாக அருமையாய்ப் பெற்றெடுத்த புத்திரனாயிருந்ததாலும், இவர் தன்னைவிட்டு 450 மைலுக்கப்பாலுள்ள சென்னப்பட்டணம் போகவேண்டுமென்ற தீர்மானம் இந்த அம்மாளுக்கு அதிக மனக்கவலையையும், அங்கலாய்ப்பையும் உண்டாக்கியிருக்குமென்பதற்குச் சந்தேகமில்லை. ஆகிலும் தன்மகன் முன்னுக்கு வரவேண்டுமென்ற விருப்பத்தினாலும் எங்கிருந்தபோதிலும் கர்த்தர் தன் மகனைக்காத்து நடத்துவாரென்ற முழு நம்பிக்கையினாலும், சென்னபட்டணம் சென்று திரும்பும்படி ஆசீர்வதித்து பயணத்துக்கேற்ற முயற்சி செய்தார்கள். கட்டைவண்டி, ரெயில் வண்டி பிரயாணத்துக்கு வேண்டிய சகலவித சாமான்களையும் சவதரித்து, பலகாரவகைகளும் அனேகம்செய்து தன் மகனை விட்டுப் பிரிவது வருத்தமாயிருந்தாலும் சந்தோஷத்தோடும், ஜெபத்தோடும் 1865-ஆம் வருஷம் ஜனுவரி மாதம் 14-ஆம்

தேதி சனிக்கிழமையன்று சென்னப்பட்டணத்திற்கு வழிவிட் டனுப்பினார்கள். ஆறுகளையும், மலைகளையும், குன்றுகளை யும், குளங்களையும் கடந்து வினோதமான காட்சிகளையும் கண்டு களிகூர்ந்து, ஏழுநாள் மாட்டுவண்டியிலும் ரெயில் வண்டியிலுமாகக் கடும் பிரயாணம் செய்து 21-ஆம் தேதி சனிக்கிழமையாகிய 8-ஆம் நாள் சென்னபட்டணம் வந்து சேர்ந்தார்.

இக்காலத்தில் சென்னபட்டணத்தில் சர்ச்சுமிஷன் சபையில் சுதேசக் குருவாயிருந்தவர் பிரசித்திபெற்ற கனம் உ.தோ. சத்திய நாதன் ஐயர். இவரும் திருநெல்வேலி நாட்டிலிருந்து கிறிஸ்தவ னாகி அங்கே சிலகாலம் தேவ ஊழியத்தை நடப்பித்து பின்பு சென்னபட்டணத்தில் 1892-ஆம் வருஷம் வரையில் உத்தம மும் உண்மையுமுள்ள ஊழியக்காரனாய் விளங்கி, தான் பிறந்த திருநெல்வேலி நாட்டில் 1892-ஆம் வருஷம் பெப்ரவரி மாதம் 24-ஆம் தேதி புதன்கிழமையன்று தன் ஓட்டத்தை முடித்தவர். அக்காலத்திலேயே சென்னப்பட்டணம் முதலிய இடங்களுக்கு இப்பேர்ப்பட்ட உத்தம கிறிஸ்தவர்களை மிஷனரிகளாக அனுப்ப ஏதுவாயிருந்த திருநெல்வேலி சபையையும், திருநெல் வேலி கிறிஸ்தவர்களையும் கர்த்தர் மென்மேலும் ஆசீர்வதிப்பா ராக.

சென்னபட்டணம் வந்து சேர்ந்த உடனே கனம் சத்திய நாதன் ஐயர் கையின்கீழ் உபதேசியாராக நியமிக்கப்பட்டார். அக்காலத்தில் சர்ச்சு மிஷனைச் சேர்ந்த கிறிஸ்தவர்கள் அதிக சொற்பம். ஜான் பிரேயராதோட்டத்துப் பக்கந்தான் இச்சபைக் கிறிஸ்தவர்களில் அனேகர் குடியிருந்தார்கள். இந்தச்சபைகள் அதிக விருத்தியடையும்படியாக அக்காலத்தில் கனம் சத்திய நாதன் ஐயருடன் அதிக உண்மையாகவும், ஊக்கமாகவும், பிரயாசப் பட்டு உழைத்தவர் இவரேயென்று இவருடைய தினக்குறிப்பு களால் தெரியவருகிறது. அப்பொழுது சர்ச்மிஷன் செகடரியா யிருந்த கனம் கிரே ஐயரும் இவருடைய அந்தரங்கப் பக்தியின்

வளர்ச்சிக்கும் வெளியரங்க வேலையின் உற்சாகத்துக்கும் அனுகூலமான அனேக போதனைகள் செய்ததாகக் காணப்படுகிறது.

''எனக்கு அனேக சினேகிதர் இருக்கிறார்கள். அவர்களை அடிக்கடி சந்திக்கிறேன். என்னைக் கண்டவுடனே ஐயா சுகமா, தம்பி சுகமா என்று தப்பாமல் கேட்கிறார்கள். யாராவது அப்படிக் கேளாவிட்டால் அவர்கள் பேரில் கோபப்படுகிறேன். அவர்கள் என் சரீரசுகத்தை அறிய இப்படிக் கேட்கிறார்கள். ஆனால் என் ஆத்தும சுகத்தை விரும்பி உன் ஆத்துமா சுகமா என்று கேட்ட ஒரு சினேகிதன் மாத்திரமுண்டு. அவர் W. கிரே ஐயர். அவரை வாழ்த்துகிறேன். அவர் ஆத்துமா சுகமாய்த் தங்குவதாக. அவர் கேட்டது நல்ல கேள்வி. அவர் கேட்டவுடனே அவர் பேரில் வெறுப்படைந்தேன். இப்போ உணர்ந்து அவரை வாழ்த்துகிறேன்'' என்று இந்த பவுல் ஐயர் கொஞ்ச காலத்திற்குப்பின் எழுதி வைத்திருக்கிறார்.

சத்தியநாதன் ஐயர் கைக்குள் ஏகதேசம் மூன்று வருஷம் உபதேசியாராக வேலை பார்த்தபின், திருநெல்வேலி சர்ச்சுமிஷனில் திவ்விய பணிவிடை செய்த உத்தம சுதேச குருவாகிய கனம் பரமானந்தம் சிமியோன் ஐயரின் ஜேஷ்ட குமாரத்தியை 1868-ஆம் வருஷம் பெப்ரவரி மாதம் 6-ஆம் தேதி அன்பினகரம் என்னும் கிராமத்தில் மணம்புரிந்து திரும்பவும் சென்னபட்டணத்திற்கே தேவ ஊழியம் செய்யும்படி வந்தார். இந்த அம்மாளும் பக்தியுள்ள குடும்பத்திலே பிறந்து சிறு பிராயமுதல் தேவபக்தியில் வளர்க்கப்பட்டிருந்தபடியால் ஒருவருக்கொருவர் உதவியாய் முன்னிலும் அதிக உற்சாகமாய் தேவ ஊழியத்தை நடப்பிக்க அநுகூலமாயிருந்தது.

இந்த அம்மாளுடைய தகப்பனாராகிய கனம் பரமானந்தம் சிமியோன் ஐயருடைய குணாகுணங்களைப் பற்றி கனம் சார்ஜென்ட் அத்தியக்ஷர் எழுதிவைத்திருப்பதை இங்ஙனம் எடுத்துரைப்பது தகுதியாயிருக்கும்.

"இப்போது கர்த்தரிடம் சேர்ந்திருக்கிற நம்முடைய பிரிய சகோதரனை ஏறக்குறைய 17 வருஷ காலமாய் அவர் இருந்த பற்பல நிலைமைகளில் மற்றவர்களைப் பார்க்கிலும் அதிக மாய்க் கவனித்திருக்கிறதால் நான் இப்பொழுது அவருடைய குணாகுணங்களைப்பற்றி சில காரியங்களைச் சொல்லக்கூடிய வனாயிருக்கிறேன். நான் அவரைப் பற்றிச் சொல்லப்போகிற காரியங்களை மற்ற ஐரோப்பிய குருமார் எல்லாரும் யாதொரு ஆட்சேபமின்றி ஒத்துக்கொள்வார்கள். ஏனென்றால் அவர் செய்துவந்த தேவஊழியத்தில் அதிகத் திறமையுடையவராக வும், அதற்கென்று தம்மை முற்றிலும் ஒப்புக் கொடுத்தவராகவும் இருந்தாரென்பது யாவருக்கும் பகிரங்கமாய் தெரிந்தகாரியம். அவருடைய குணாகுணங்களை ஒரே வார்த்தையில் சொல்ல வேண்டுமானால் ஆழ்ந்த சிந்தையுடைவரென்று சொல்லலாம். அவர் தற்புகழ்ச்சியை நாடினவரல்ல. அற்பக் காரியங்களில் தலையிட்டவருமல்ல. பார்க்கிறவர்கள் மெச்சிக்கொள்ளும்படி யாய் சமயத்திற்குத்தக்க ஊழியம் செய்தவருமல்ல. அவர் எக்காலத்திலும் எந்த நிலைமையிலும் மனத்திருப்தியுடையவ ராய் இருந்தார். தான் கையிட்டுக்கொண்ட காரியங்களை நல்ல தீர்மானத்தோடு செய்து வந்தார். அவர் குணத்தில் பெருந்தகை மையும், முயற்சியும், கருத்தும், உதாரத்துவமும், பட்சமும் உள்ளவராய் இருந்தார். அவருடைய பழக்க வழக்கங்கள் மிகவும் கிரமமாய் இருந்தன. அவருடைய கணக்குகள், ஜர் ணல், யாதாஸ்து முதலியவைகளில் அவர் கையாடிவந்த வகை யைக் கவனிக்கும்போது அவர் செய்துவந்த ஒவ்வொன்றும் ஒழுங்காய் இருந்தது. அவர் சிறுபிராயத்தில் இங்கிலீஷ்படிப்பு இல்லாதவராயிருந்தாலும் வரவர தன்முயற்சியால் இங்கிலீஷ் பாஷையில் தேறி வேத வியாக்கியானங்களையும் மற்ற பிர யோஜனமுள்ள இங்கிலீஷ் புஸ்தகங்களையும் வாசிக்கவும் பொருளைக் கிரகித்துக் கொள்ளவும் சக்தியுள்ளவரானார். வேத வாக்கியங்களை ஞாபகப்படுத்தி எடுத்துப் பேசுவதில் எனக்கு அறிமுகமான சுதேசிகளுக்குள் இவருக்கு மிஞ்சினவர்களை நான் கண்டதில்லை. காரியங்களை ஆட்சியாய் ஆராய்ந்து

அறியும் தெளிந்த புத்தியும் யதார்த்தமான தீர்மானமும் உள்ள வர். அவர் போதகனாக தமது சபையின் நன்மையை நாடி, தம்மை முற்றிலும் அவர்களுக்கென்று ஒப்புக்கொடுத்து இவ்வித மாய் அவர்கள்பேரில் பாராட்டின தமது அன்பினால் சொந்த சபையார் அவரை மதிக்கவும் அவர் பேரில் நம்பிக்கை வைக்க வும் ஏதுவாயிருந்தது. அவர் எப்போதும் சமாதானமுடையவரா யிருந்தார். அவருடைய மரணசங்கதியைக் கேள்விப்பட்டு அஞ் ஞானிகளும் அடைந்த துக்கம் எனக்கு மிகுந்த ஆச்சரியத்தை உண்டாக்கிற்று. அவர் சரீரம் அடக்கம் பண்ணப்பட ஆள்வா நேரியிலிருந்து பாளையங்கோட்டைக்கு கொண்டுவரப்பட்ட போது வழியில்கண்ட அஞ்ஞானிகள் கண்ணீர் விட்டு மிகுந்த துக்கத்தோடே அவரைப்பற்றி பேசிக்கொண்டார்கள். அவர் வியாதியாயிருந்த காலத்தில் முதலாய் சுற்றுக் கிராமங்களி லுள்ள அநேகர் அவரைப்பார்க்க வந்தார்கள். சில சுதேசபெரி யோர் தங்கள் சொந்த வைத்தியர்களை அவருக்கு ஆறுதலாக வும் ஒத்தாசையாகவும் அதிக பட்சத்தோடு அனுப்பினார்கள். அவருடைய சொந்த சபையாரெல்லாரும் தங்கள் நேசமுள்ள தகப்பன் இறந்தால் எவ்வளவு துக்கப்படுவார்களோ அவ்வள வாய் அங்கலாய்த்தார்கள். எனக்கும் என் சொந்த சகோதரன் மரித்தால் எவ்வளவு துக்கமுண்டாகுமோ அவ்வளவுக்கு அதிக மான துக்கமுண்டாயிருந்தது. அவரோ தமது இரட்சகருடைய ஊழியத்தை நிறைவேற்றி முடித்து தமது நித்திய இளைப்பாறு தலுக்குட் பிரவேசித்திருக்கிறார்'' என்பதே.

இவ்வளவு சிறந்த பக்தியுள்ள குருவின் குமாரத்தியை சாமுவேல் பவுல் ஐயர் தனக்கு மனைவியாகக்கொண்டு, 1868-ஆம் வருஷம் முதல் சென்னை பட்டணத்திலுள்ள C.M.S. மிஷன் பள்ளிக்கூடங்களுக்கு விசாரணை உபாத்தியாயராகக் கனம் R.C. மெக்டானல்ட் ஐயரவர்களின் கைக்குள் வேலை பார்த்து வந்தார். இக்காலத்தில் தன் காலத்தை வீண்போக்காமல் பள்ளிக்கூடங்களின் விர்த்திக்காகவும், சபையின் வளர்ச்சிக்காக வும், தன் சுயதேர்ச்சிக்காகவும் அநேகநாள் கண்விழித்து போஜன

பானமருந்த மறந்து அதிக உற்சாகத்தோடு உழைத்ததாக அவருடைய தினசரிக்குறிப்புகளினால் தெரிய வருகிறது. சன்மார்க்கச் சிறுபுத்தகச் சங்கத்தாருக்கு ஒற்றைத்தாள் பிரதிகளும், சிறுபுஸ்தகங்களும் எழுதியனுப்பவதிலும், அஞ்ஞானிகளுக்குப் பிரசங்கிப்பதிலும், வேதாகமப் பந்தயப் பரீட்சைகளுக்குப் படிப்பதிலும் தன் காலத்தை முக்கியமாய் பின்னிட்டார். என்ன வேலை இருந்தபோதிலும் தனிச்செபம் செய்யத் தவறாதிருந்தார். 1869-ஆம் வருஷம் சென்னை அத்தியக்ஷாதீன வேதாகம பந்தய பரீட்சையில் இரண்டாவது பரிசும், 1873-ஆம் வருஷத்தில் முதலாவது பரிசும் எடுத்தார்.

1868-ஆம் வருஷம் முதல் குருப்பட்ட வேலைக்காக விசேஷித்த ஆயத்தம் செய்துகொண்டு வந்திருக்கிறார். இக்காலத்தில் அவர் எழுதிய தினக்குறிப்புகளிலிருக்கும் சில குறிப்புகளைப் பார்ப்போம்.

**1869-செப். 10.**

"இன்று சாயந்தரம் மெக்டானல்ட் ஐயர் பந்தயத்துக்காக அனுப்பிய பிரதிகளை அனுப்பினார். நான் ஒன்றில் பந்தயம் பெற்றதற்காக சந்தோஷத்தோடே தேவனுக்கு தோத்திரம் செலுத்தி நான் செய்த பொருத்தனையைச் செலுத்தினேன். ஆ! கர்த்தாவே உமது கிருபையால் நடத்தப்பட்டதற்காக தோத்திரம்."

"நான் அடிக்கடி சில நல்ல பிரமாணங்களைப் பண்ணியும் அதின்படி நடக்கிறதேயில்லை. நான் பண்ணின தீர்மானங்களின் படியே நடந்தால் ஆ! நான் எவ்வளவு லாபம் அடைவேன். தேவனே! நான் நடந்துகொள்ளத்தக்க நல்ல முறையைப் படிப்பியும்."

**1869-செப். 25.**

"நான் இன்று சாயந்தரம் கூவம் ஆற்றோரமாய் உலாவினேன். அதற்கு எதிரேயிருந்த ஒரு கல்லறைத் தோட்டத்தில் ஒரு பட்டாளத்துத் துரையை அவருக்குரிய அந்தஸ்துக்கேற்றபடி தம்புரு வீணைகளுடன் அடக்கம் பண்ணினார்கள். அதை நான் நினைத்து அவர் பொல்லாதவராயிருந்தால் அவர்கள் பாட்டு பேய்க்கு மகா சந்தோஷத்தையும் தேவனுக்கு அதிக துக்கத்தையும் உண்டாக்குகிறதென்றும், அவர் நல்லவராயிருந்தால் இவர்கள் பாட்டு தேவனுக்கு சந்தோஷத்தையும் பசாசுக்கு துக்கத்தையும் உண்டாக்குகிறது என்றும் சொல்லிக்கொண்டேன். கடைசியாய் தேவனுடைய சாயலாய்ப் படைக்கப்பட்ட ஆதாமின் புத்திரனுக்கு இப்படிப்பட்ட அடக்கம் தகும் என்றே தீர்மானம் பண்ணினேன்."

''நான் இன்று என் வேலையினால் பகல் சாப்பிட ஏதுவில்லாமல் போயிற்று. ஆனால் நல்லவேலை செய்தேன் என்ற சந்தோஷம் என் வயிற்றுக்குப் பூரண ஆகாரமா யிருந்தது.''

**1869-நவம்பர் 14.**

''மரிக்கிறது எவ்வளவு நன்மை'' ''நான் நினைக்கிறபடி மரணத்துக்குப்பின் நித்தியகாலமாய் மோட்சத்தில் வசிப்பது மனுஷனைச் சந்தோஷப்படுத்தும் என்று பலரும் சொல்வது நிஜமானாலும், நான் சொல்வதென்னவென்றால் மனுஷனுக்கு இப்பொழுது சாஸ்திரவிதமாயாவது வேறெந்த விதமாயாவது விளங்காத பல இரகசியங் கள் பின்பு வெளிப்படுத்தப்படுவதால்தான் மோட்சத்திலிருக்கிற சந்தோஷம் பூரணமா யிருக்கும் என்றும் நரகத்திலிருக்கிறவர்கள் துக்கம் பூரணமாயிருக்குமென்றும் எண்ணு கிறேன்.''

**1871-ஏப்ரல் 23.**

''ஒவ்வொரு நாளும் யூதருக்காகவும் பட்டணத்தைச் சுற்றிலுமிருக்கிற தேசாந்திர ஐயர்மாருடைய வேலைக்காகவும் ஜெபிக்க மறவாதே.''

''ஒவ்வொரு ஜெபத்திலும் நான் பாவம் செய்தேன் என்று சொல்ல வெட்கப்படாதே.''

''கிறிஸ்துவின் பாடுகளைப்பற்றி ஒரு வார்த்தையாவது சொல்லாமல் உன் ஜெபத்தை முடியாதே.''

''தனிச்செபமாவது குடும்பச் செபமாவது பண்ண ஏதுவில்லாதிருந்தால் பெருமூச் சால் உன் கருத்தை பேச்சோடு பேச்சாயாவது வெளியிடு.''

**1871-ஆகஸ்டு 6.**

''தேவனுக்கு விரோதமாய் நீ செய்த பாவங்களின் தொகையை உன் ஞாபகத்திலிருக்கு மட்டும் வரிசையாய் எழுதி, தேவனுக்கு நீ செய்த உன் நன்மைகளை ஒரு வரிசையாய் எழுதி சராசரி பார் என்று என் மனம் ஒருநாள் சொன்னது. அப்படியே பார்த்தேன். அப்போது தேவனுக்கென்று நான்செய்த நன்மை ஒருபங்கானால் தீமை 152 பங்கென்று கண்டேன். பராபரனே பாவியாகிய என் மேல் இரக்கமாயிரும்.''

இவர் 1871-ஆம் வருஷத் துவக்கத்தில் குருப்பட்டாபிஷே கத்துக்கென்று தெரிந்துகொள்ளப்பட்டார். அந்த வருஷம் ஏப்ரல் மாதம் 23-ஆம் தேதி எழுதிய டயரியில் பின்வருமாறு எழுதி வைத்திருக்கிறார்.

"கனம் மெக்டானல்ட் ஐயரவர்கள் என்னைப்பற்றி நற்சாட்சியிட்டு அபிஷேகம் கொடுக்க எழுதினதாகவும், அதற்கு உத்தரவு இரண்டரை மாதத்துக்குப்பிந்தி வந்ததாக வும், அப்படி நடக்க கொஞ்சக்காலம் செல்லும் என்பதாகவும், சகல காரியத்தையும் கர்த்தருடைய கரத்தில் ஒப்புவிக்கவேண்டுமென்பதாகவும் சொன்னார். ஆகையால் ஆண்டவரே அப்பெரும் காரியத்தை இன்று முதல் உமது கையில் ஒப்புவிக்கிறேன். அதே எனக்குச் சந்தோஷம். உமது கையில் ஒப்புவிப்பதை நீர் இழந்துபோக மாட்டீர், அல்லது நீரே வைத்துக்கொண்டு என்னை ஏமாந்துபோகப் பண்ணவுமாட்டீர். ஏற்றவே ளையில் நீர் தருவீர். உம்மை நம்புகிறேன். ஆனால் உமதடியான் ஒரு விண்ணப்பம் செய்கிறான். அதாவது ஞானமுள்ள சாலோமோனும் அவ்வூழியத்துக்குத் தகுந்தவனல்ல, பலமுள்ள சிம்சோனும் அதற்குத் தகுந்தவனல்ல, தீவிரமுள்ள பேதுருவும் அதற்குத் தகுந்தவனல்ல, பொறுமையுள்ள யோபும் அதற்குத் தகுந்தவனல்ல, வைராக்கியமுள்ள பவுலும் அதற்கு தகுந்தவனல்ல, போவனர்கேகம் அதற்குத் தகுந்தவர்களல்ல, சாதூரிய முள்ள அப்போலோஸும் அதற்குத் தகுந்தவனல்ல, நான் எம்மாத்திரம்? ஆண்டவரே மகா கனமான இவ்வூழியத்தை நீர் தேவதூதர்களின் ஒரு கூட்டத்தாருக்குக் கொடாமல், மனுப்புத்திரராகிய எங்களுக்குக் கொடுத்த உமது ஞானமான தீர்மானத்தை வெளிப் படுத்த மாட்டீரோ? கர்த்தாவே நான் ஏழை. உமது ஊழியத்தில் என்னை ஐசுவரியவனாக் கும். பலவீனன். பலப்படுத்தும். அறிவீனன். அறிவுகொடும். இளந்தை பாரதூர மறியும் ஞானந்தாரும். நீர் பலம் தந்து உயர்த்தினால் நான் தாழ்ந்துபோகமாட்டேன். உமது பலமின்றி நான் உயர்ந்தால் இலேசில் விழுவேன். இது நிஜம். இது மெய். இது சத்தியம். ஆகையால் உம்மிடத்தில் என் காரியங்களையெல்லாம் ஒப்புவித்திருக்கிறேன்."

"நாங்கள் இந்த ஊழியத்தை மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம்."
(2 கொரி. 4:7)

"ஒரு குடத்தை உரியில் வைத்து பாதுகாக்க தன் தானத்தை விட்டு தூக்குவதுண்டு. அல்லது அது வேண்டாம் என்று உடைத்துத்தள்ள தூக்குவதுமுண்டு. என் இரட்சகரே நீர் மண்பாண்டமாகிய என்னை இக்காலத்தில் ஒரு சந்தோஷமான வார்த்தையால் என் ஆதி ஸ்தானத்தை விட்டுத் தூக்குகிறீர். திடீர் என்று போட்டு உடைக்கவோ அல்லது உமது சபையென்னும் உயர்ந்த உரியில் ஏற்றி வைக்கவோ நான் அறியேன். ஆண்டவரே என் பாவங்களை உமக்கு முன்பாக அறிக்கையிட்டு என்னை உடையாமல் காக்க மன்றாடுகிறேன்."

"பழைய துருத்தியாகிய நான் புதிய இரசமாகிய உமது கனமான ஊழியத்தை தாங்கிக்கொள்ள பாத்திரனல்ல. நான் கிழியத்தக்கவன். ஆகையால் என்னில் நீர் அடைக்கும் இரசம் சேதமாகாதபடி பலமாய் தைத்துப் பழுதுபாரும்."

"உமது ஊழியம் எனக்குத் தேன்போல் மதுரமாயிருக்கிறது. இப்போது அது உச்சிமலையிலிருக்கும் கூடுபோலிருக்கிறது. அதற்காகக் குதித்துக் குதித்துப் பார்க்கி

றேன் எட்டவில்லை. இனி நான் என்ன செய்வேன். அது வடிந்து சொட்டுச் சொட்டாய் விழும் வரையும் என் வாயை ஜெபத்தால் திறந்து பெருமூச்சால் உறிஞ்சிக் கொண்டிருப் பேனாக.''

''நான் குருப்பட்டத்துக்குத் தகுந்தவனா? என் வயது சொற்பம், என் படிப்பு கொஞ்சம், அனுபவம் அற்பம். பின்னை ஏன் என்னைத் தெரிந்து கொள்ளுகிறீர். தெரிந்துகொண்டது நிஜமானால் என் குறைவை முந்தி நிறைவாக்கும்.''

இவர் இவ்விதமாய் குருத்தொழிலுக்கு ஆயத்தப்பட்டுக் கொண்டிருக்கும் சமயத்தில் உதகமண்டலத்தில் தேவ ஊழி யத்தை நடப்பிக்கத் தகுந்த ஒருவர் வேண்டியிருந்ததால் 1874-ஆம் வருஷம் ஆகஸ்டு மாதம் 2-ஆம் தேதி அவ்விடத் துக்கு மாற்றப்பட்டு குருத்தொழிலுக்குக் குறிக்கப்பட்ட பரீட்சை களில் தேறி, 1874-ஆம் வருஷம் அக்டோபர் மாதம் 11-ஆம் தேதி மகாகனம் ஜெல் அத்தியக்ஷரவர்களால் திருச்சிராப்பள்ளி S.P.G. ஆலயத்தில் டீக்கன் பட்டம் பெற்று, உதகமண்டலம் C.M.S. சபைக்கு குருவாக நியமிக்கப்பட்டார்.

# 3-ஆம் அதிகாரம்

## குருத்தொழில், 1874 — 1900

குருபட்டத்துக்குப் பின்னுள்ள ஊழியத்தை மூன்று பாகங்களாகப் பிரிக்கலாம்: (1) மலை **ஊழியம்**, (2) நகர **ஊழியம்** (3) நாட்டுப்புற **ஊழியம்**.

1. மலை **ஊழியம்** 1874-1883. இது நீலகிரிமலையில் உதகமண்டலத்துத் தமிழ்ச்சபைக்குக் குருவாயிருந்த காலத்தைக் குறிக்கும். நீலகிரிசபை 1845-ஆம் வருஷம் டாக்டர் ஸ்க்மிட் (Dr. Schmid) என்னும் போதகரால் ஸ்தாபிக்கப்பட்ட போதிலும், 1867-ஆம் வருஷத்தில் தான் சர்ச்சுமிஷன் சங்கத்தாருடைய விசாரணைக்குட்பட்டது. இந்த சபைக்கு 1874-ஆம் வருஷம் பவுல் ஐயர் போதகராக நியமிக்கப்பட்டு ஒன்பது வருஷம் அதிக ஊக்கத்தோடும் பிரயாசத்தோடும் உழைத்து கடைசியாக மரணத்துக்கேதுவான வியாதியுண்டாகி அனேகநாள் ஆஸ்பத்திரியிலிருந்து சற்று சுகமானபின் நீலகிரிமலை அவருக்கு ஒத்துக்கொள்ளாதென்று வைத்தியர் அபிப்பிராயப்பட்டதால் அவ்விடத்தைவிட்டு சென்னபட்டணத்துக்கு மாற்றப்பட்டார்.

நீலகிரி சபையின் பழைய ரிப்போர்ட்டுகளைப் பார்த்தால் இவர் இச்சபையை நடத்தின காலத்தில் சபை சகல விஷயத்திலும் விர்த்தியடைந்துகொண்டு வந்ததேயன்றி எவ்விதத்திலும் தாழ்ச்சியடையவில்லையென்று பகிரங்கமாய் விளங்குகிறது. பின்வரும் கணக்கு அச்சபை ரிப்போர்ட்டுகளிலிருந்து எடுக்கப்பட்டது.

| | 1874 | 1883 |
|---|---|---|
| சபையின் தொகை ... ... | 230 | 474 |
| இராப்போஜனக்காரர் ... ... | 86 | 208 |
| பள்ளிக்கூடங்கள் ... ... | 2 | 5 |
| பிள்ளைகள் ... ... | 130 | 177 |
| மிஷன் ஆசாமிகள் ... ... | 7 | 14 |
| சபைகள் ... ... | 1 | 3 |
| பாஸ்றால் பண்டுக்கு செலுத்தின தொகை ரூபா. ... ... | 210 | 330 |

நீலகிரியில் செய்த முக்கிய வேலைகள்:—

**உவைநாடு சபை** இவரால் ஸ்தாபிக்கப்பட்டு விர்த்தியடைந்தது. நெடுவட்டம், கூடலூர், தேவல்லா முதலிய இடங்களில் தேவ ஊழியக்காரரை நியமித்ததுமன்றி, அதிக உற்சாகத்தோடு அடிக்கடி அவ்விடம்போய் சபையைச் சந்தித்து புத்தி போதனைகள் சொல்லிப் பிரசங்கம் செய்தார்.

1882-ஆம் வருஷம் சென்னை மகாகனம் ஜெல் அத்தியக்ஷரவர்களின் உத்தரவுபடி கள்ளிக்கோட்டைக்குச் சென்று அங்கே கவர்ண்மெண்டு காலேஜ் பிரதம உபாத்தியாயராயிருந்த தாவீது இயோசேப் என்பவர் தமதரிய முயற்சியால் சேர்த்திருந்த தமிழ்ச்சபையைச் சிலகாலமிருந்து ஸ்திரப்படுத்தினார்.

குன்னூரில் அமெரிக்கன் மிஷனைச் சேர்ந்திருந்த சர்ச் மிஷன் சபையாரைப் பிரத்தியேகப்படுத்தி அவர்கள் விருப்பத்தின்படி அவர்களுக்குத் தனியே ஜெபம் முதலிய காரியங்கள் நடக்கும்படி ஏற்பாடு செய்து, அவ்விடத்தில் ஒரு உபதேசியாரையும் நியமித்து குன்னூர் சர்ச்மிஷன் சபையை ஸ்தாபித்தார்.

உதகமண்டலத்தில் ஐரோப்பியருடைய வீடுகளில் வேலை செய்யும் வேலைக்காரருக்குப் பிரசங்கிக்கும்படியாக **வேலைக் காரர் மிஷன்** என்று ஓர் மிஷன் ஏற்படுத்தி, அதற்கு ஒரு உபதேசியாரை நியமித்து அவருடைய சம்பளம் முழுவதும் மிஷனில் பொறுக்காதபடிக்கு ஒவ்வொரு துரைமார் வீடுகளிலும் மாதம் ரூபாய் 1 வசூல் செய்து உபதேசியாருடைய சம்பளத்தில் பாதி அவ்விதமாய் நடக்கும்படி ஒழுங்கு செய்தார்.

இதர மதஸ்தருக்குக் கிறிஸ்துமார்க்கத்தைப் பிரசங்கிப்பதற்குப் பற்பல வகைகளைக் கண்டுபிடித்து அவற்றைக் கையாடிவந்தார். ஹோபார்ட் பள்ளிக்கூடத்தில் இரண்டு வாரத்துக்கொரு தடவை தமிழிலாவது இங்கிலீஷிலாவது இதர மதஸ்தருக்கு விசேஷ பிரசங்கம் செய்து வந்தார். அச்சமயங்களில் பேசப்படுகிற காரியங்களில் தெளிவில்லாத விஷயங்களைப்பற்றி பிரசங்கம் முடிந்தபின் கேள்வி கேட்க இடங்கொடுப்பார். சந்தேகங்களுக்கு நிராகரணமும், ஆட்சேபணைகளுக்குச் சமாதானமும் அச்சமயத்தில் தானே அதிக சந்தோஷத்தோடு கொடுப்பார்.

வாரந்தோறும் மிஷன் ஆசாமிகளைக் கூட்டிக்கொண்டு போய் சந்தைக் கூட்டங்களில் புற மதஸ்தருக்கென்று பிரசங்கம் நடத்துவார்.

மாதத்துக்கொரு தடவை பௌர்ணமி தின இரவுகளில் சந்திர வெளிச்சத்தில் சதுர்ப் பிரசங்கம் நடத்துவார்.

அடிக்கடி ஜெயிலுக்குப்போய் அங்கிருக்கும் கைதிகளுக்குப் பிரசங்கம் செய்வார். இந்த ஜெயில் பிரசங்கத்தினாலேயே சின்னத்தம்பி பிள்ளை என்றொருவர் தன் குடும்பத்தோடு கிறிஸ்து ரட்சகரை விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றார்.

2. **நகர ஊழியம்** — 1883-1887. இது சென்னபட்டணம் வடசேகரத்துச் சபைக் குருவாயிருந்த காலம். 1883-ஆம் வருஷம் நவம்பர் மாதம் 1-ஆம் தேதி டக்கர் கோவிலுக்கு

குருவாக நியமிக்கப்பட்டு நான்கு வருஷம் அதிக உண்மையோடும் ஊக்கத்தோடும் தேவ ஊழியத்தை நடப்பித்தார். இவ்வடசேகர சபை இவருடைய காலத்தில் தொகையிலும், பண வரவிலும், அறிவிலும், தேவ பக்தியிலும் கிறிஸ்தவ அநுபவத்திலும் தேர்ச்சியடைந்து வந்ததாகத் தெரியவருகிறது.

| | | | 1883 | 1887 |
|---|---|---|---|---|
| சபையின் தொகை | ... | ... | 448 | 577 |
| இராப்போஜனக்காரர் | ... | ... | 285 | 296 |
| சபை பொக்கிஷத்துக்காக சேர்க்கப்பட்ட தொகை | ... | ... | ரூ. 485 | ரூ. 734 |

மேலும் டக்கர் கோவிலில் இவர் நடத்திவந்த ஆராதனைகளும் பிரசங்கங்களும் அதிக பக்தி விநயமும் எழுப்புதலுமுள்ளவைகளாயிருந்தன. இவர் காலத்தில்தான் பாடகர்கள் நியமிக்கப்பட்டு கின்னர வாத்தியத்தோடு ஆராதனைகள் முதல் முதல் நடத்தப்பட்டன. கர்த்தருடைய இராப்போஜனம் மாதத்திற்கு இருமுறை பரிமாறப்படும்படி ஏற்பாடு செய்தார்.

இவர் சென்னையில் செய்தவேலை இவ்வளவென்பதையும், சபையார் அவருடைய வேலையை எவ்வளவாய் மதித்து வந்தார்களென்பதையும் பின்வரும் இரண்டு பயணோபசாரப் பத்திரங்களினால் ஒருவாறு தெரிந்துகொள்ளலாம்.

## சென்னை சர்ச்சுமிஷன் வடசேகரத்துச் சபையார் கனம் S. பால் ஐயரவர்களுக்குக் கொடுத்த பயணோபசாரப் பத்திரம்.

கனம்பொருந்திய ஐயாவே,

தாங்கள் நாலு வருஷத்திற்கு முன் சென்னை வடசேகரமாகிய இந்தச் சபைக்குக் குருவாக நியமிக்கப்பட்டு, இதுவரைக்கும் எங்களோடிருந்து, மனந்திரும்பாதவர்கள் மனந்திரும்பவும் விசுவாசிகள் தேவனுடைய கிருபையில் நிலைகொண்டிருக்கவும்,

தேவ ஒத்தாசையை முன்னிட்டு சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதித்து வந்தீர்கள். தங்களது பக்தியும் உத்தமமும் விளங்கிய நடக்கையினாலும், ஆழ்ந்த கருத்துகளடங்கிய சாதூரியப் பிரசங்கங்களினாலும், தெளிவும் தீர்க்கமுமுள்ள உபதேசங்களினாலும், பெருந்தன்மையும் பரோபகாரமும் நிறைந்த இருதயத்தினாலும், தைரியமும் சுறுசுறுப்பும் விளங்கிய கிருத்தியங்களினாலும், பொறுமையோடும் விடாமுயற்சியோடுங் காணப்பட்ட வழக்கங்களினாலும், சபையார்பேரில் உங்களுக்கிருந்த அன்பினாலும் பாசத்தினாலும், துன்பப்படுகிறவர்களுக்கு நீங்கள் காட்டின உருக்கத்தினாலும் நீங்கள் எங்கள் மனதைக் கவர்ந்து மாறாத நிலையான நல்லெண்ணத்தை எங்களிருதயத்தில் பதித்திருக்கிறீர்கள். எங்கள் குருவாக, நீங்கள் எப்போதும் எங்களுக்கு ஆவிக்குரிய ஆலோசனைகள் சொல்லி, வெயிலென்றும் மழையென்றும் பாராமல் நோயாளிகளைச் சந்தித்து, விழித்திருந்து, ஜெபஞ்செய்து, துன்பப்படுகிறவர்களை ஆறுதல்படுத்தி, தேவ ஊழியத்தை உண்மையோடும் ஜாக்கிரதையோடுஞ் செய்துவந்தீர்கள். பிரசங்கியாக, நீங்கள் இந்த இடத்தில் முதல் இடம் பெற்றிருக்கிறீர்கள். தெளிவும் சாதுரியமுமுள்ள வாசகங்களும் சிறந்த கருத்துகளுமமைந்து, தீர்க்கமான குரலால் உச்சரிக்கப்பட்ட தங்கள் பிரசங்கங்கள் வெது வெதுப்பான இருதயங்களை அனலாக்கி, கவலையற்ற நெஞ்சங்களைக் கரிசனையுள்ளவைகளாக்கின. கிரந்த கருத்தாவாகத் தாங்கள் தமிழ் சபைகளுக்குச் செய்த நன்மை கொஞ்சமல்ல. தங்களுடைய தியானப் புஸ்தகங்களை ஜெபத்தோடு வாசித்து ஆத்தும லாபமடையாதவர்கள் கொஞ்சமென்றே சொல்லவேண்டும். சுருக்கமாகச் சொன்னால், தாங்கள் இளைப்பாறும் நேரமெல்லாந் தமிழ் கிறிஸ்தவர்களுக்கு எழுப்புதலும் பிரயோஜனமுமுண்டாக்கும் பிரபந்தங்களைத் திரளாக எழுதியிருக்கிறீர்கள். இதனால் தமிழ்ச்சபையோரெல்லாம் நன்றியறிதலுள்ளவர்களாயிருக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். எங்கள்

சிநேகிதனாக, எங்களெல்லாரையும் மலர்ந்த முகத்தோடு ஏற்றுக் கொண்டு தேவபக்திக்கடுத்தவிதமாய் சம்பாஷணை செய்து மனச்சாக்ஷிக்கேற்றவேலை, மனநீதி, கபடமின்மை, முதலிய நற்குணங்களை எங்களுக்குத் தெளிவாயுணர்த்தினீர்கள். தங்க ளுடைய தாராளமான ஒழுக்கத்தினாலும் இணக்கமான குணத்தி னாலும் சந்தோஷமான பார்வையினாலும் அதிகமதிகமாய் நாங்கள் தங்களை நேசிக்கும்படி செய்துகொண்டீர்கள். நாங்கள் நாலு வருஷமாத்திரந் தங்களோடு பழகினபோதிலும் எங்கள் ஜீவகாலமெல்லாந் தங்களோடேயிருந்ததுபோல எண்ணி நேசிக் கும்படி செய்துகொண்டீர்கள். தாங்கள் கொஞ்சகாலமாத்திரம் எங்களுக்குக் குருவாயிருந்தபோதிலும் எங்கள் சபை தொகையி லும், பணவரவிலும், அறிவிலும், கிறிஸ்தவர்களுக்கடுத்த அனு போகத்திலும் அதிகமாக வளர்ந்திருக்கிறது. தாங்கள் இந்தச் சேகரத்திற்கு வந்தபோது சபையின் தொகை 488. நற்கருணை பெறுகிறவர்கள் 285, இப்போது சபையார் 577 பேரும், நற் கருணை பெறுகிறவர்கள் 296 பேருமாயிருக்கிறார்கள். 1883-ஆம் வருஷத்தில் இந்தச் சபைப்பொக்கிஷத்துக்காகச் சேகரிக்கப்பட்ட தொகை ரூ. 485-3-6. இந்த வருஷத்தில் சபையார் கொடுத்தது மாத்திரம் ரூ. 734-3-11. இவ்வண்ணம் பணவிஷயத்திலுண்டான தேர்ச்சியினால் சுதேச சங்கத்தின் அவயவங்களாயிருந்த இரண்டுபேரோடு மூன்றாவது ஆள் இந்த வருஷமுதல் அனுப்பப்படுகிறார். நாங்கள் அவயவமா யிருக்கிற மகிமை பொருந்திய திருச்சபையை நாங்கள் நேசிக்க வும், அதின் வரலாறுகளையெல்லாமறியவும், பலவித உபதேச மென்னும் காற்றினால் நாங்கள் அலசடிப்படாமல் தடுக்கப்பட வுஞ் செய்யத் தக்கமுயற்சிகளையெல்லாஞ் செய்துவந்தீர்கள்.

இப்படியிருக்க, எங்கள் அன்புள்ள குருவாகிய நீங்கள் எங்களைவிட்டுப் பிரிந்துபோகும்படி நேரிட்டிருக்கிறதினால் எங்களுக்குண்டாகும் விசாரத்திற்கு ஓரளவில்லை. அதை

நினைக்கையில் எங்கள் மனந்துடிக்கிறது. நாங்கள் உங்களை நேசித்து மதித்துவந்ததையும், உங்களைக் காணும்போது எங் களுக்குண்டான நல்லுணர்வும் முயற்சிகளுமின்னதென்பதை யும், உங்களுடைய அன்றாடக நடக்கையுஞ் சம்பாஷணையும் எவ்வளவாய் பரம அன்பை எங்களுக்குள் எழுப்பிவிட்ட தென்பதையும் இச்சமயத்தில் நினைக்கும்போது இவ்வளவு சீக்கிரத்தில் தங்களை விட்டுப் பிரியவேண்டியதாகிவிட்டதே யென்று ஆறாத்துயரத்தையடைகிறோம். எங்கள் விசனத்தை வெளிப்படுத்தும்படி போதுமான வார்த்தைகள் இல்லை யென்றே சொல்லவேண்டும். திருச்சபைக்கு விரோதமாகப் பலவகையான வினோத உபதேசங்களும், நியாய தோரணை களும் உண்டாகும் இந்தக் காலத்தில் இந்தச் சபையாராகிய எங்களுக்கு விசேஷமாய் வைராக்கியமும் ஊக்கமும் நிறைந்த உங்கள் போதனை மெத்த அவசரமாயிருந்தபோதிலும், நாங்கள் நம்பிக்கையற்றவர்களைப்போல துக்கப்படாமல், கர்த்தருடைய திராக்ஷத்தோட்டத்தில் தகுதியான ஒரு இடத்தில் தங்களுடைய தாலந்துகளையும் திறமைகளையுங்கொண்டு, எல்லாவற்றையும் ஆண்டு நடத்தி வருகிற தேவனுக்கு மகிமையுண்டாக்கவேண்டு மென்பது கடவுளது திருச்சித்தமானதால், அவருடைய சித்தத் தின்படியே நடக்கக்கடவதென்று அமைதலோடு, எங்களை நடத்தவும் உங்களைக் கனப்படுத்தவும் வல்லவரான பிதாவின் கரத்திற்கு எல்லாவற்றையும் ஒப்புக்கொடுத்துவிடுகிறோம்.

மேலும் ஐயாவே, கிறிஸ்தவருக்கடுத்த பொறுமையோடும் நற்குணங்களோடும் விளங்கின கனம் பால் அம்மாளுக்கும் நாங்கள் எங்கள் நன்றியறிதலைச் செலுத்துகிறோம். அந்த அம்மாள் தன்மட்டில் மற்றவர்களுக்குப் பிரயோஜனமான ஒரு தேவ ஊழியக்காரியாயிருந்தார்கள் என்பதை நாங்களறிந்திருக் கிறோம். கர்த்தர் தங்களையும் அம்மாளவர்களையும் ஆசீர் வதித்து, நீடித்த ஆயுசையும் சுகத்தையும் பலத்தையும் கொடுத்து, நமக்காகவும் மற்றெல்லா மனிதருக்காகவும் கல்வாரி

மலையில் தமதுயிரைக்கொடுத்த ஸ்ரீயேசுபகவான் திருப்பாதத் தண்டை பாவிகளை அதிகமதிகமாய்க் கொண்டுவந்து சேர்க்கும் படி கர்த்தர் தமது முதற்றரமான ஈவுகளை உங்களிருவர் மேலும் பொழியவேண்டுமென்பது எங்கள் ஜெபமாகவும், தங்களை மறுபடியும் பார்த்து தங்கள் ஊழியத்தைக்குறித்து அடிக்கடி கேள்விப்பட வேண்டுமென்பது எங்கள் ஆசையாகவுமிருக் கிறது.

இப்போதும் இந்த வெள்ளி தேவ நற்கருணை பாத்திரத்தை யும் அம்மாளுக்கு பொன் மோதிரத்தையும் எங்கள் அன்புக்கும் மதிப்புக்கும் நன்றியறிதலுக்குமடையாளமாக அங்கீகரித்துக் கொள்ளத் தாழ்மையோடு கேட்டுக்கொள்ளுகிறோம்.

இங்ஙனம் எங்களுக்காக ஜெபஞ்செய்து எப்பொழுதும் எங்களை நினைத்துக்கொள்ளும்படி கனிவோடு கேட்டுக்கொள் ளுகிற, கர்த்தருக்குள் தங்களுடைய பிள்ளைகளாகிய,

**சர்ச்சுமிஷன் வடசேகரத்துச்சபையார்.**

---

சென்னபட்டணம் வடசேகரம் சர்ச்சுமிஷனைச்சார்ந்த
**சங்கை பொருந்திய சாமுவேல் பவுல் ஐயரவர்களுக்கு**
மேற்படி சேகர மிஷன் உத்தியோகஸ்தர் சமர்ப்பித்துக்கொடுத்த
**வந்தனோபசார பத்திரம்**

சங்கை பொருந்திய பக்ஷமுள்ள ஐயாவே!

தாங்கள் கடந்த நாலு வருஷகாலமாய், எங்கள் மத்தியில் தேவ ஊழியத்தை ஊக்கமாய் நடத்தி வந்தீர்கள். தாங்கள் எங்கள் மத்தியில் இருந்த காலமெல்லாம், எங்களுக்கு எஜமானனைப் போலும், நாங்கள் ஊழியர்போலும் பாராட்டாமல், தாங்கள் ஒரு தந்தையைப்போலும், நாங்கள் பிள்ளைகளைப்போலும் பாவித்து ஞானமாய் நடத்திவந்தீர்கள்; எங்கள் அலுவல் விஷ யங்களில் எவ்வளவோ குறைகளிருந்தாலும், அவைகளையெல்

லாம் பொறுமையோடு சகித்துக்கொண்டு, எங்களுக்கு ஒப்புக் கொடுக்கப்பட்ட வேலையை நாங்கள் உண்மையோடும், உறுதி யோடும், ஊக்கத்தோடும், ஜாக்கிரதையோடும் நடத்திவர, எங் களுக்கு அடிக்கடிப் பக்ஷமாய்ப் புத்தி சொல்லி வந்தீர்கள்; நாங் கள் நாளுக்குநாள் வேத அறிவிலும், நன்னெறியிலும் விர்த்தி யடையக்கருதி, அதற்கேற்ற முயற்சியும், பிரசங்கசக்தியும்பயிற்று விப்பதற்காக, தாங்கள் அஞ்ஞானிகளுக்கு வீதிப்பிரசங்கம் செய்யுங்காலங்களில் எங்களையும் அழைத்துப்போனீர்கள்.

சரீரப்பிரகாரம் செய்த நன்மையைப் பார்க்கிலும் ஆத்மார்த்த மாக ஓய்வுநாட்களிலும், இதரநாட்களிலும் உசிதப்பிரசங்க விதையை எங்களிருதயத்தில் விதைத்து வந்தீர்கள். சபையா ரைச் சந்தித்து ஏழைகளைக் கவனித்து, பெருமை முதலிய குணத்தைக் களைந்துபோட்டு தாழ்மையாகவும் ஒழுக்கமாகவும் நடந்து, எங்களுக்கு முன்மாதிரி காண்பித்தீர்கள்.

எந்நேரமும் வேதபாராயணம் செய்துவந்ததும் தவிர உப யோகார்த்தமான பக்திநூல்களையியற்றி வந்தீர்கள். உங்கள் சம்பாஷணையில் லௌகீக விஷயம் அவ்வளவாய் விளங்கின தில்லை.

இவ்வளவு அருமையுள்ள போதகர் எங்களுக்குக் கிடைத் திருந்ததைப்பற்றி நாங்கள் பெருமைகொண்டிருந்ததனாலோ, தாங்கள் எங்கள் நடுவினின்று பிரிந்து வேறுஸ்தலத்திற்கு மாற் றப்பட்டீர்கள். இது எங்களுக்கு மாறாத மனக்கஸ்தியாயிருக் கின்றதென்பதைப் பணிவுடன் அறிக்கையிடுகிறோம். தாங்கள் இன்னுஞ் சிறிது காலம் எங்கள் நடுவில் இருப்பீர்களென்றால் எங்களுக்கு எவ்வளவோ பாக்கியம்! ஆயினும் தேவ எத்தனத்தினாலும் தேவ அழைப்பினாலுமே நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்துபோகிறீர்கள்.

கடைசியாக பக்ஷமுள்ள போதகப்பிதாவாகிய ஐயாவே!

தாங்களும் கனம் அம்மாளவர்களும் எங்களையும், எங்கள் குடும்பங்களையும், எங்கள் சபையையும் தங்கள் ஜெபத்தில் நினைத்து கரிசனையோடு பிரார்த்தித்து வருவீர்களென்று நம்பு கிறோம்.

தாங்கள் எங்கள் நடுவில்செய்த தேவஊழியத்திற்கும் அன் பின் செய்கைக்கும் அடையாளமாகக் கொடுக்கத் தகுதியான ஒரு பொருளிராததினாலே நாங்கள் நன்றியறிதலோடு சமர்ப்பிக் கும் இந்த ஞாபகசின்னத்தைத் தாங்கள் தயவாக அங்கீகரிக்கும் படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

எல்லாம் வல்ல கடவுள் தங்களை முற்றுமுடியநடத்தி தங் களை அவரது நாமபிரபல்யத்திற்கு ஒரு ஸ்தம்பமாக நாட்டி யருள்வாரென்று நம்புகிறோம்.

இங்ஙனம்,<br>
சென்னப்பட்டணம் பிளாக்டவுன் வடசேகரத்தின்<br>
உத்தியோகஸ்தர்.

3. நாட்டுப்புற **ஊழியம்** — 1887-1900. இது வட திருநெல்வேலி சபையை விசாரணை செய்த காலத்தைக் குறிக் கும். வடதிருநெல்வேலியில் சர்ச் மிஷன் சபையை மேல் விசாரணை செய்து வந்த கனம் வீ. வேதநாயகம் ஐயர் மறுமைக்குட்பட்டபோது 1887-ஆம் வருஷம் நவம்பர் மாதம் 18-ஆம் தேதி சாமுவேல் பவுல் ஐயர் மகாகனம் சென்னை அத்தியக்ஷரவர்களால் தெரிந்துகொள்ளப்பட்டு மேற்படி சபைக்கு குருவாக அனுப்பப்பட்டார்.

வட திருநெல்வேலிக்காகத் தன் ஜீவனைக்கொடுத்த புண் ணிய ஆத்துமாவாகிய கனம் ராக்லாண்டு ஐயருடைய கல்லறை இந்நாள்வரையும் கிறிஸ்துவின் சுவிசேஷத்துக்கு சாக்ஷி பகரும் ஞாபக ஸ்தம்பமாக விளங்கி நிற்கும் சிவகாசிக்கருகில் சாக்ஷியாபுரம் என்னும் கிராமத்தில் இவர் ஸ்தாபகமாகி, அக்

காலத்தில் வட திருநெல்வேலியை விசாரித்து வந்த கனம் A.K. பின்னிமோர் ஐயருக்கு ஆலோசனைக்காரராகவும், தேசாந்தர பிரசங்கியாகவும் இருந்தார். 1890-ஆம் வருஷம் வட திருநெல் வேலி சர்ச்சுக்கவுண்சிலுக்கு பிரதி முதலாளியாக நியமிக்கப் பட்டார். 1892-ஆம் வருஷம் சாக்ஷியாபுரம், வாகைக்குளம் ஆகிய இரண்டு சர்க்கிலுக்கும் சென்னை கரஸ்ப்பாண்டிங் கமிற்றியாரால் முதலாளியாக நியமிக்கப்பட்டு மரணபரியந்தம் அப்படியே நடபடிக்கை நடத்திக்கொண்டிருந்தார். வட திரு நெல்வேலி சபையை முன்னுக்குக் கொண்டு வரும்படியாக அவர் செய்த பிரயத்தனங்கள் அனந்தம். **தவச உற்சவத்தை ஏற்படுத்துவதற்கு முதல் முதல் ஆலோசனை சொன்னவர் இவரே. இவருடைய ஏற்பாட்டின்படி தவச உற்சவம் 1891-ஆம் வருஷம் ஜூன் மாதம் சாட்சியாபுரத்தில் முதல் தடவையாகக் கொண்டாடப்பட்டது.** அதின்பின் இவ்வித உற்சவம் திருநெல்வேலியின் பல இடங்களில் மாத்திரமல்ல, இந்தச் சென்னை இராஜதானியின் பற்பல இடங்களிலும் ஸ்தாபிக்கப்பட்டு நடந்தேறி வருகிறது.

1890-ஆம் வருஷம் முதல் ''நற்போதகம்'' என்னும் மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகைக்கு முக்கிய பத்திராதிபரா யிருந்தார். சர்ச்சு மிஷன் மரண சகாய சங்கத்திற்கு ஜெனரல் செகடரியாகவும் இருந்தார். இவருடைய அரும் பிரயாசத்தி னால்தான் இச்சங்கம் நல்ல சீருக்கு வந்தது. சாக்ஷியாபுரத்தி லிருந்த சிறு தேவாலயத்தைப் பெரிதாக்கிச் சிறந்த சிலுவை வடிவமான ஆலயமாகக் கட்டி முடித்தார். மிஷன் ஆசாமிகள் தங்கள் வேலைகளில் சோர்வடையாமல் முயற்சியுள்ளவர்களா யிருக்கும்படி போதனைகளினாலும், புத்திமதிகளினாலும் பல நூதன ஏற்பாடுகளினாலும் அவர்களை உற்சாகப்படுத்தி நடத்தி வந்தார். 1898-ஆம் வருஷம் ஏற்படுத்தப்பட்ட கிளீனர்ஸ் யூனியனுக்கு முதலாளியாயிருந்து அதை நடத்தி வந்தார். சாக்ஷியாபுரம் சர்க்கிள் மிஷன் ஆசாமிகள் பின் வருமாறு இவ ருடைய வேலையைப் பற்றி புகழ்ந்து பேசியிருக்கிறார்கள் :—

"தங்களுடைய அன்பான விசாரணையினாலும் எச்சரிப்பினாலும் எங்களைப் பிதாவடைவாய் நடத்தி வந்திருக்கிறதற்காகவும், அருமையான போதனைகளாலும் புத்திமதிகளாலும் எங்களை யேவி எழுப்பியிருக்கிறதற்காகவும், மிஷன் ஆசாமிகள் எல்லாரும் முயற்சியுடையவர்களாயிருக்கும்படியாக அவர்களுக்குச் சில பொருள்க ளைக் குறிப்பித்து எசை முதலானவைகள் எழுதச் செய்வித்து இனாம் அளித்திருக்கிறதற் காகவும், வேத அறிவில் தேறும்படியாக மிஷன் வேத பரீட்சையிலும் மகாகனம் அத்தியக்ஷரவர்கள் பிரைஸ் பரீட்சையிலும் தங்கள் வட்டத்தில் முன்னுக்கிருப்பவர்களுக் குப் பரிசுகள் கொடுத்திருக்கிறதற்காகவும், தங்கள் வேலையில் ஜாக்கிரதையும் முயற்சியுமாயிருப்பவர்களுக்கு வேண்டிய அனுகூலங்களைச் செய்திருக்கிறதற்காகவும், வட திருநெல்வேலியின் கஷ்டங்களை நிவர்த்திக்கிறதற்குத் தாங்கள் எங்களுடன் அநுதாபப்பட்டு அதற்கு வேண்டிய முயற்சிகள் செய்துகொண்டு வருகிறதற்காகவும் நாங்கள் மிகவும் நன்றியறிதலுடையவர்களாயிருக்கிறோம்."

"தாங்கள் கற்றோரென்றும் மற்றோரென்றும் பாராமல், கிறிஸ்துவுக்குள் உயர்த்தி தாழ்த்தியின்றி **'சகலருஞ் சரிசமானர்'** என உணர்த்தி எச்சரித்து அன்பாய் நடத்திவந்த செய்கை எவரும் புகழத்தக்கதாயும், மார்க்க அபிவிர்த்திக்குச் சிறந்த அனுகூலமாயு மிருந்ததென்பது யாவருமறிந்த சத்யமே."

"தாங்கள் எங்களோடும் எங்களுக்காகவும் செய்த அனலும் கனிவுமான எத்தனையோ ஜெபங்கள் தங்களுள்ளத்திலிருந்து தேவ சமூகம் சென்றிருக்கின்றன."

"தங்களைப்பற்றிய நினைப்பு இந்த வட திருநெல்வேலிக்கு மட்டுமல்ல தென் திருநெல்வேலிக்கும் இன்னும் அநேக இடங்களுக்கும் மிக அருமையாக இருந்து வருகிறதென்று நாங்கள் புகழ்ந்து சொல்லத்தக்கது. தேவகடாக்ஷத்தால் தங்கள் ஞானத்தி னாலும் மனோவிர்த்தியினாலும் அரும் பிரயாசையெடுத்து வாசிப்போரின் மனதைக் கவர்ந்துகொள்ளத்தக்கதாக நாங்கள் தமிழில் எழுதிப் பிரசுரஞ் செய்திருக்கிற பக்திக் குரிய பிரபந்தங்களும், சன்மார்க்கப் புஸ்தகங்களும், திருச்சபைக்கும் தேவ ஊழியருக் கும் கையளிக்கப்பட்டிருக்கிற நல்ல பொக்கிஷங்களாயிருக்கின்றன."

"இவ்வட திருநெல்வேலிக்குப் பிரதானஸ்தானமாகிய சாட்சியாபுரத்தில் முன் னிருந்த ஆலயத்தை தங்களுடைய யுத்தியால் ஸ்திரமாகவும் சிறப்பாகவும் கட்டி முடித் திருக்கிறதும், சபையின் வாழ்வுக்கும் விர்த்திக்கும் அனுகூலமாக தவச உற்சவம் என்ற பேரால் வழங்கி நடந்தேறி வருகிற சேர்ப்பின் பண்டிகை இவ்விடத்தில் தங்கள் மூலமாய் ஸ்தாபகமாகி எல்லா இடங்களிலும் சந்தோஷமாகவும் உற்சாகமாகவும் ஆசரிக்கப்பட்டு வருகிறதும், கர்த்தருடைய நாமத்துக்குப் புகழ்ச்சியும், தங்களுக்கும் எங்களுக்கும் மகிழ்ச்சியுமாயிருக்கின்றன."

வட திருநெல்வேலியில் C.M.S. மிஷனை மேல்விசாரணை செய்துவந்த கனம் J. பார்ட்டன், T. உவாக்கர், E.S. கார் என்னும் மூன்று ஐரோப்பிய மிஷனெரிமாருக்கும் வலது கைபோலிருந்து சென்னை அத்தியக்ஷரவர்களுடைய வேதாகமப் பந்தயப் பரீட்

சைக்கும், குருப்பட்டாபிஷேகம் பெற ஆயத்தப்படுகிறவர்களு டைய பரீட்சைக்கும் அநேக வருஷங்களாகப் பரீட்சை செய்கிறவ ராகவும் நியமிக்கப்பட்டிருந்தார். 1894-ஆம் வருஷம் ஏப்ரல் மாதம் 24-ஆம் தேதி சென்னை அத்தியக்ஷரவர்கள் இவரை தங்களுக்கு ஆனரெரி க்ஷாப்பிளனாக நியமித்து, அச்சமயத்தில் பின்வருமாறு எழுதினார்கள் :—

"என் பிரியமுள்ள மிஸ்றறர் பவுலுக்கு எழுதுகிறதாவது :— உமது குணமான நடத்தையையும், ஊழியத்தையும் நான் அங்கீகாரம் செய்திருக்கிறேனென்பதைக் காண் பிக்க என்னுடைய க்ஷாப்பிளன்மார்களில் ஒருவராக உம்மை நியமிக்க இடங்கொடும்."

மேலும் திருநெல்வேலி நாடுகளிலுள்ள சபைகளைக் கண் காணித்து வருகிற கனம் மோர்ளி அத்தியக்ஷரவர்களுக்கும் இவர் ஆனரெரி க்ஷாப்பிளனாக இருந்தார்.

1893-ஆம் வருஷம் பம்பாயில் கூடிய (Decennial) தசாண்டு மிஷனரி சங்கக் கூட்டத்திற்கும், 1898-ஆம் வருஷம் அலகா பாத்தில் கூடிய (Quinquennial) பஞ்சாண்டு மிஷனரி சங்கக் கூட்டத்திற்கும், 1900-ஆம் வருஷம் ஜனுவரி மாசம் சென்னப் பட்டணத்திற் கூடிய தென்னிந்தியா மிஷனரி சங்கக் கூட்டத்திற் கும் தென்னிந்தியாவிலிருந்து போன பிரதி காரியதரிசிகளில் இவர் ஒருவர்.

சபையாருக்குள்ளும் குருக்களுக்குள்ளும் உண்டாகும் வியவ காரியங்களைத் தீர்ப்பதற்காகக் கனம் சென்னை அத்திய க்ஷரவர்களாலும், திருநெல்வேலி - மதுரை அத்தியக்ஷரவர்களா லும் பல தடவைகளில் கம்மிஷனராக நியமிக்கப்பட்டு அவை களைத் திருப்திகரமாய் முடித்திருக்கிறார்.

தமிழ் ஜெப புஸ்தகத்தையும், ஞானப்பாட்டுப் புஸ்தகத்தை யும் திருத்தும்படி நியமிக்கப்பட்ட கமிற்றியில் இவர் ஒரு முக்கிய மெம்பராயிருந்தார், பவுல் ஐயர் சபையின் வாழ்வையும்

சுதேசக் கிறிஸ்தவர்களின் க்ஷேமத்தையும் வெகுவாய்க் கருதியிருந்ததுமல்லாமல், இராஜாங்க விஷயமாகவும் பொதுஜன நன்மைக்காகவும் பலவாறாகத் தன்னால் கூடியமட்டும் உழைத்து வந்தார். சிரிவிலிப்புத்தூர் தாலுகா போர்டு மெம்பராகவும், திருநெல்வேலி ஜில்லா போர்டு மெம்பராகவும் நியமுகம் பெற்று அவ்விதக் கூட்டங்களில் நல்ல ஆலோசனை கொடுத்து வந்தார்.

பிரஜைகளின் நன்மைக்கென்று இவர் எழுதிய அபரிமிதமான புஸ்தகங்களை நன்குமதித்து இந்தியாவின் இராஜ பிரதிநிதியாகிய கவர்னர் ஜெனரலவர்கள் 1898-ஆம் வருஷம் இவருக்கு ''ராவ்சாகிப்'' என்னும் பட்டம் கொடுத்து இவரைக் கனப்படுத்தினார்கள். இந்தக் கண்ணியமான பட்டத்தை இவர் பெற்றுக்கொள்ளத் தகுதியுள்ளவர்தான் என்பது சில பெரியோரின் கடிதங்களால் தெளிவாகிறது. இது சம்பந்தமாய் சென்னை மகாகனம் ஜெல் அத்தியக்ஷரவர்கள் 1898-ஆம் வருஷம் மே மாதம் 23-ஆம் தேதி பின்வருமாறு எழுதியிருக்கிறார்கள் :—

''சக்கரவர்த்தினி இராக்கினியவர்களால் ஜனனநாள் கனமளிக்கப்பட்டவர்களுக்குள் நீரும் ஒருவர் என்பதைக்கண்டு நான் சந்தோஷப்படுகிறேன். மூன்று நாலு வருஷங்களுக்கு முன்னே கந்தர்புரி ஆர்ச்பிஷப்பலர்களிடமிருந்து நான் உமக்கு ஒரு டிவினிற்றி டிகிரிப்பட்டம் வாங்கிகொடுக்க விரும்பினேன். ஆனால் அதற்கு ஏறக்குறைய 900 ரூபாய் பீஸ் தொகை செலுத்தி வாங்க வேண்டியதாயிருக்கிறது. கிறிஸ்துமார்க்கப் போதனைகளடங்கிய உமது புஸ்தகங்களினால் நீர் உமது தேசத்தாருக்குச் செய்திருக்கும் நல்ல ஊழியம் தற்சமயம் நன்கு மதிக்கப்பட்டிருக்கிறதென்பதை இப்போது கண்டு நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன். ஆர்ச் டீக்கனவர்கள் உம்மைப்பற்றி கவர்னரவர்களுக்கு சிபார்சு செய்ததின்பேரில் அது ஆகியிருக்கிறதென்று நம்புகிறேன். உமது போதனைகளினாலும் எழுத்துகளினாலும், நமது பரம எஜமானை மகிமைப்படுத்த கர்த்தர் உமக்கு நீடித்த ஆயுளை அருளிச்செய்வாராக.''

அடியில் வருவது திருநெல்வேலி மதுரை பிஷப்பவர்களாகிய கனம் மோர்ளி அத்தியக்ஷரவர்களிடமிருந்து அதே தேதியில் அனுப்பப்பட்ட கடிதத்தின் பாகம்.

"சக்கரவர்த்தினி இராக்கினியவர்களின் ஜனன நாள் கனங்களுக்குள் உமது பெயர் வருவதைக்கண்டு நானும் பூரிப்படைந்து, உமக்களிக்கப்பட்டிருக்கும் ராவ்சாகிப் பட்டத்திற்காக நான் மனமகிழ்ச்சியுடன் உம்மை வாழ்த்துகிறேன். இந்தியாவின் ஜனங்களுடைய சன்மார்க்க ஆவிக்குரிய நன்மைக்கென்று செய்யப்பட்ட வேலையை நமது சக்கரவர்த்தினியவர்கள் அங்கீகாரம் செய்திருக்கிறது மிகவும் நன்றி செலுத்தத்தக்க விஷயமே."

சங்கை பொருந்திய W.W. எல்விஸ் ஆர்ச்டீக்கனவர்கள் 1898-ஆம் வருஷம் ஜூன் மாதம் 11-ஆம் நாள் பின்வருமாறு எழுதுகிறார் :—

"யோக்யதாபட்டக் கனம் பெற்றவர்களின் ஜாபிதாவில் உம்முடைய பெயரைக் கண்டு நான் மிகவும் சந்தோஷப்பட்டேன். தென் இந்தியாவில் நீர் செய்திருப்பதும் செய்துகொண்டு வருகிறதுமான வேலை மிகவும் மதிப்புற்றதாகையால் அது அந்த ஜாபிதாவில் வர வேண்டியது முற்றிலும் சரியே. இந்தியாவில் இந்தக் கனத்தைப் பெற்றுக்கொண்ட முதலாவது சுதேசகுரு நீர்தானல்லவா?"

சாமுவேல் பவுல் ஐயர் மரிப்பதற்கு முந்தின வருஷமாகிய 1899-ஆம் வருஷம், மே, ஜூன் மாதங்களில் சிவகாசியில் பெருத்த கலகங்களும் கொள்ளைகளும் உண்டாகி வட திருநெல்வேலி கலங்கி நிற்கையில் கலகத்துக்குத் தளகர்த்தனாயிருந்தவனோடு இவர் சமாதான உடன்படிக்கை செய்து சாட்சியாபுரத்தையும் அதிலிருந்த கிறிஸ்தவர்களையும் தற்காத்தார். இந்தக் கலகங்களைக் குறித்து அவர் தாமே பின்வருமாறு எழுதிவைத்திருக்கிறார். சிவகாசிப் பக்கத்திலுள்ள அஞ்ஞானிகளுக்கு இதை அச்சடித்துக் கொடுத்து அதன்மூலமாய் அவர்களைக் குணப்படுத்த யோசித்தார் போலும்.

## தென்னாட்டுக் கொள்ளை 1899

இந்த வருஷத்தின் மே, ஜூன் மாதங்களில் மதுரை திருநெல்வேலி ஜில்லாக்களிலும், திருவாங்கோடு இராச்சியத்திலுள்ள சில இடங்களிலும் நடந்த கொள்ளைகளும், கொலைகளும், அழிம்புகளும் நமது ஞாபகத்திலிருக்கலாம். திருடரும் கொலைபாதகருமான பல பரம துஷ்டர் ஏகமாகப் பேசி நூற்றுக்கணக்காயும், ஆயிரக்கணக்காயும் திரண்டு, கத்திகளோடும், தடிகளோடும், வேறுபல ஆயுதங்களோடும் ஊர் ஊராய்த் திரிந்தலைந்து கூச்சலிட்டு, குலவையிட்டு, ஆரவாரம்பண்ணி தங்கள் நிஷ்டூரங்களை நிறைவேற்றி வந்தார்கள். இந்தப் பஞ்சமாபாதகர் வீடுகளைத் தீக்கொளுத்தினார்கள்;

கட்டிடங்களை இடித்தார்கள்; தோப்புகளையும் பயிர்களையும் அழித்தார்கள்; ஸ்திரீகளைக் காதறுத்து நகைகளைத் திருடி அவமானப்படுத்தினார்கள்; வீடுகளைக் கொள்ளையிட்டார்கள்; புருஷர் இஸ்திரீ பிள்ளைகளைக் காயப்படுத்தினதுடன் அங்கங்கே பலரைக் கொலை செய்ததுமுண்டு. இந்த எல்லாப் பாதகங்களையும் அவர்கள் சர்க்காருடைய அனுமதிப்படிச் செய்கிறதாகப் பொய்சொல்லியும் வந்தார்கள்.

**இவ்வளவு அழிம்புகளுக்குக் காரணங்கள்:** இதின் முதல்காரணம் பிறர்பொருளை அபகரிக்கும் **பொருளாசை** அல்லது பண ஆசை தான். "பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது" என்று ஒரு பக்தன் சொல்லியிருக்கிறார் (1 தீமோ. 6:10). பிறர்பொருளுக்கு ஆசைப்படாமல், தன் தன் பிழைப்புக்காக வேலை கற்றுக்கொண்டு ஜீவனம் செய்கிறவர்கள்தான் யோக்கிய புருஷாள். "பொருளாசையைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்" என்று லோக குருவாகிய இயேசு கிறிஸ்து சொன்னார் (லூக். 12:15). இந்தக் கொள்ளைக்காரர் "பொருளாசைகளில் பழகின இருதயத்தையுடைய சாபத்தின் பிள்ளைகள்" என்று தங்களை வெளிப்படுத்தினார்கள் (2 பேது. 2:14).

வேறொருகாரணம் **விக்கிரகபத்தி** தான். விக்கிரக ஆராதனை விஷயமாக இந்தக் கலகம் ஆரம்பித்தது என்று பலர் சொல்லுகிறார்கள். இத்தேசத்தில் விக்கிரக ஆலயங்களும் விக்கிரகத் தொழும்பரும் அதிகம். ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் விக்கிரகங்களே பெரிய சுவாமி என்று வாதாடுகிறார்கள். விக்கிரகத் தொழும்பர் தங்கள் புத்தியில் அந்தகாரப்பட்டு, தங்கள் இருதயக்கடினத்தினால்... சகலவித அக்கிரமங்களையும் செய்ய தங்களை ஒப்புவித்து விடுகிறார்கள். விக்கிரக வணக்கத்தை நமது நாட்டார் தள்ளிவிடுகிறவரையும் இப்படிப்பட்ட கொள்ளைகளும் அழிம்புகளும் ஒழியாது. "சொரூபங்களை வணங்கி விக்கிரகங்களைப்பற்றிப் பெருமைபாராட்டுகிற யாவரும் வெட்கப்பட்டுப் போவார்களாக" என்று ஒரு ராஜபுலவர் பாடியிருக்கிறார் (சங். 97:7).

இன்னொரு காரணம் **குலப்பெருமை** தான். என்குலம் உயர்ந்தது, அவன்குலம் தாழ்ந்தது என்ற கட்சிக்கு ஒரு அளவில்லை. இதைப்போல மதியீனமான சண்டை வேறில்லை. இந்தக் கட்சிக்கு தேவன் சுமார் 3300 வருஷங்களுக்கு முன்னமே தீர்ப்புச் சொல்லியிருக்கிறார். அந்தத் தீர்ப்பினால் தேவனைச் சமீபமாகப் பெற்றிருக்கிற ஜாதியும், நீதியுள்ள கட்டளைகளையும் நியாயங்களையும் பெற்றிருக்கிற ஜாதியும், விக்கிரகத்தை நமஸ்கரித்துச் சேவிக்காத ஜாதியும், தேவன் தமக்கு ஜனமாக மீட்டுக்கொண்ட ஜாதியுமே பெரிய ஜாதி என்று தெரியவரும் (உபா. 4:7, 8; யாத். 20:5; 2 சாமு. 7:28).

## இவ்வளவு அழிம்புகளால் வரும் போதனைகள்

1. **உலகவாழ்வு நிலையுள்ளதல்ல:** அநேக வருஷங்களாகச் சேகரித்துவைத்த நகைநட்டுகள், வீடுவாசல்கள், எல்லாம் சத்துருக்களால் நஷ்டமாயின. இவ்வுலகமும் அதின் வாழ்வுகளும் கள்ளரால் அல்லது மரணத்தால் நம்மைவிட்டு உடனேயாவது, சாவகாசத்திலாவது எடுபட்டுப்போகும். பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச்

சேர்த்துவைக்க வேண்டாம். இங்கே பூச்சியும் துருவும் அவைகளைக் கெடுக்கும். இங்கே திருடரும் கன்னமிட்டுத் திருடுவார்கள், பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங் களைச் சேர்த்துவையுங்கள் என்று இயேசுகிறிஸ்து போதிக்கிறார். (மத். 6:19, 20). ஐசுவரியவான்கள் நிலையற்ற ஐசுவரியத்தின் பேரில் நம்பிக்கைவையாமல் ஜீவனுள்ள தேவன் பேரில் நம்பிக்கை வைக்க வேண்டும் என்று ஒருபக்தன் சொல்லியிருக்கிறார் (1 தீமோ. 6:17). கிறிஸ்துமார்க்கத்தில் மாத்திரம் இந்த உணர்ச்சியுண்டாகும்.

**2. மோசமும், மரணமும் நினையாத நேரத்தில் வரலாம்:** இவ்வுலகம் பொல்லாத வர்களால் நிறைந்திருக்கிறது. அவர்களால் இன்னநேரத்தில் இன்னவகையாய் நமக்கு ஆபத்தும் சாவும் வருமென்று தெரியாது. ஆதலால் ஒவ்வொருநாளிலும், இதுதான் என் கடைசி ஜீவ நாளாயிருக்கலாமென்று நினைத்து மரணத்துக்கு ஆயத்தப்பட்டவர் களாய் ஜீவிப்பது அவசியம். அவருடைய வருகை சமீபமாயிருக்கிறது. கிறிஸ்து நடுத்தீர்க்க இரண்டாந்தரம் வருவார். அவருடைய வருகைக்கு முன் பல இடங்களில் கலகங்கள் நடக்குமென்று அவரே சொல்லியிருக்கிறார். அவர் வரும்போது, அவரால் தண்டனைக்குட்படாதபடி இப்போதே மனந்திரும்பிக் குணப்படுவது அவசியம்.

**3. சாத்தான் எவ்வளவு பொல்லாதவன்** என்பது இந்தக் கலகத்தால் ருசுவாகிறது. அவன் அமைதலாய் குடியிருந்த அநேகக் குடிகளின் மனதில் புகுந்து அவர்களை எரிச்சலுக்கும், மூர்க்கத்துக்கும், கொலைக்கும், கொள்ளைக்கும், பெருமைக்கும், சகல வித அழிம்புகளுக்கும், ஏவிவிட்டு அநேகருடைய இருதயங்களை முன்னிருந்ததை விட அதிகமாய்க் கெடுத்துவிட்டான். சாத்தான் எப்போதும் மனுஷ ஜாதியின் சத்துருவா யிருக்கிறான். அவன் தன்னைக் கும்பிட்டாலும் கெடுப்பான் கும்பிடா விட்டாலும் கெடுப்பான். அவனையும், அவன் கிரியைகளையும், அவனைச் சேவிப்பதையும் விட்டுவிடுவதே புத்தி. பிசாசுக்கு இடங்கொடாமலிருங்கள் என்று ஒரு பக்தன் எச்சரித் திருக்கிறார். (எபே. 4:27).

## இனிமேல் செய்யவேண்டியது

அஞ்ஞான மார்க்கத்திலிருக்கும் வரையும் அடிக்கடி இப்படிப்பட்ட கலகங்கள் நேரிடும். ஆதலால் அதைத் தள்ளிவிட்டு கிறிஸ்து மார்க்கத்தில் சேருவது நல்லது. கிறிஸ்துமார்க்கம் சமாதானமும் அன்புமுள்ள ஒரு கூட்டமாயிருக்கிறது. அதின் தலை வராகிய இயேசுகிறிஸ்துவுக்கு சமாதானப் பிரபு என்று பேர். அவர் மிகவும் அன்புள்ள வர். அவர் தமது மிகுந்த அன்பினால் இவ்வுலகத்தில் இரட்சகராக அவதாரமெடுத்து, அரும் போதனைகளைப் போதித்துக் கடைசியாகச் சிலுவையில் மரித்து, மூன்றாம்நாளில் உயிர்த்தெழுந்தார். அவரை விசுவாசிக்கிறவர்கள் கோபம், கொலை, கொள்ளை முதலிய சகல கெட்டகுணங்களையும் விட்டு விடும்படிப் போதிக்கப்படுகிறார்கள். அந்தப் போதனையின்படி நடந்து கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்களாய் மரணமடைகிறவர்கள் மோட்ச பலனைப் பெறுவார்கள். உங்களுக்கும் அந்த வாழ்வு கிடைக்கும்படி கிறிஸ்து மார்க்கத்துக்கு வாருங்கள்.

# 4-ஆம் அதிகாரம்

## அந்தியகாலம்

''மரிக்கிறது எவ்வளவு நன்மை.'' இது 1869-ஆம் வருஷம் நவம்பர் மாசம் 13-ஆம் தேதி பவுல் ஐயர் எழுதிய டயரியி லிருந்து எடுக்கப்பட்ட வாசகம். **அவருடைய ஜர்ணல் முழுவ தையும் பார்க்கும்பொழுது அவர் மரணத்துக்கு எப்பொழுதும் ஆயத்தமாகவே யிருந்தாரென்று தோன்றுகிறது.** ''நாளையத் தினம் என்னுடையதுமல்ல உன்னுடையதுமல்லவே, பின்னை யேன் நாளைக்கு ஆகட்டும் என்கிறாய். இதற்குமுன் செத்தவர் களில் கோடானுகோடிப்பேர் நாளைக்கு ஆகட்டும், நாளைக்கு ஆகட்டும் என்று சொல்லியே நரகம்போய்ச் சேர்ந்தாயிற்று. இது நிசம்'' என்று வேறோரிடத்திலும் எழுதிவைத்திருக்கிறார்.

தமிழ்க் கிறிஸ்தவ சபையின் உள்ளான ஆவியின் வளர்ச்சி யைக் கருதி அவரது நடை, உடை, பாவனைக்கேற்றவிதமாய் ''**கிறிஸ்துவைப்போல் ஜீவித்தல்**'' என்னும் ஒரருமையான புத்தகத்தை, இந்துதேச சீர்திருத்தலுக்கென்று தன்னை முழுவ தும் பிரதிஷ்டை பண்ணி பிரசித்தியடைந்திருக்கும் கனம் டாக் டர் மர்டாக் துரையின் விருப்பப்படி, தம் சுயமாய் எழுத எண்ணங்கொண்டு, ஆறுமாசகாலமாய் அதற்கு வேண்டிய ஆதாரங்களைத்தேடி, அதன்பேரில் ஆழ்ந்தயோசனை செலுத்தி எழுதிக்கொண்டிருக்கும் சமயத்தில், திடீரென்று 1900-ஆம் வருஷம் மார்ச்சு மாசம் 4-ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை அதிகாலையில் ஜுரம் ஆரம்பித்து, கபால வியாதியும் அத்துடன் கொஞ்சம் இருமலும் கலந்து, வைத்தியர்களின் எவ்வித பிரயா சத்துக்கும் வியாதி மடங்காமல் அதிகரித்து, வியாதிப்பட்ட

எட்டாம் நாளாகிய மார்ச்சு மாசம் 11-ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமை பின்னேரம் ஒரு மணிக்கு சமாதானத்தோடும், சந்தோஷத்தோடும் தம் பரம இளைப்பாறுதலுக்குட் பிரவேசித்தார். மார்ச்சு மாசம் 3-ஆம் தேதி சனிக்கிழமை இரவு 12 மணி வரையில் நல்லசுகமும் பெலனுமுள்ளவராயிருந்தார். வழக்கமாய் புஸ்தகம் எழுதும் வேலையிலும், முக்கியமாய் முந்தின வாரத்தில் எழுத ஆரம்பித்த விசேஷமான புஸ்தக விஷயத்திலும் ஆழ்ந்தயோசனையும், அகன்ற ஆராய்ச்சியும் அவசியமாயிருந்ததால், அவருடைய மூளை பலயீனப்பட்டு சிதைந்திருக்க வேண்டுமென்றும், இதுவே வியாதிக்கு மூலகாரணமாயிருந்ததென்றும் வைத்தியர்கள் அபிப்பிராயப்பட்டார்கள். வியாதி ஆரம்பிக்கிற கடைசி நேரம் வரையில் தன் வேலையில் அதிக சுறுசுறுப்பும் ஜாக்கிரதையுமுள்ளவராயிருந்தார். வியாதிப்படுவதற்கு முந்தின தினமாகிய சனிக்கிழமை இரவு சுமார் 12 மணிக்கு சாட்சியாபுரத்தில் தம் சபையைச் சேர்ந்த சில வியாதியஸ்தரைச் சந்தித்து, அவர்களுக்கு வேண்டிய உதவி புரிந்து அவர்களோடு ஜெபம் செய்தார். இதுவே அவருடைய குருத்தொழிலின் கடைசி ஊழியம்.

வியாதிப் படுக்கையிலிருக்கையில் தம் குடும்ப காரியத்தைப் பற்றி இவர் யாதொரு வார்த்தையும் பேசவில்லை. அவருடைய சிந்தனையும் யோசனையும் பேச்சும் வார்த்தையுமெல்லாம் மிஷனையும் சபையையும் அடுத்ததாகவும், பரமகாரியத்தைப் பற்றினதாகவுமேயிருந்தது. வேளா வேளைகளில் அறிவு மயக்கமுண்டானபோதிலும், கடைசி வரையில் சொஸ்த புத்தியுள்ளவராயிருந்து தம்மைப் பார்க்கவந்தவர்களை இனமறிந்து, அவர்களோடு சாவதானமாய்ப் பேசினார். மரிப்பதற்கு ஐந்துநாளைக்கு முன்னையே தமது அந்தியகாலத்தையறிந்தவராய் தமது பந்து ஜனங்களைக்காண விரும்பினார். தம்மைப் பரிசோதித்த வைத்தியர்கள் என்ன தைரிய வார்த்தைகளைச் சொன்னபோதிலும் தாம் ஞாயிற்றுக்கிழமை சாயரட்சை மரித்துப்போவது உண்மை


யென்றே வற்புறுத்திப் பேசினார். மரிப்பதற்குச் சிலகாலத்துக்கு முன் தாம் இயற்றத்துவக்கின புஸ்தகங்கள் எழுதி முடியவில் லையே என்ற விசனமுண்டானபோதிலும், தமது விருப்பத்தை முற்றிலும் கர்த்தருக்கு ஒப்புக் கொடுத்தார். அவர் செய்த கடைசி ஜெபத்தில், ''ஆண்டவரே சிறுவயது முதல் என்னை உமது ஊழியத்தில் அமர்த்தி இதுவரையில் என்னில் உம்முடைய நாமம் மகிமைப்படக் கருணை கூர்ந்தீர். இப்போதும் என்னை உமது சமுகத்துக்கழைத்துக் கொள்ளச் சித்தங் கொண்டீர். ஆனால் இன்னும் சிலகால மாத்திரம் நான் ஜீவித் திருப்பேனானால் நான் இயற்றத் துவக்கின இரண்டு புஸ்தகங் களை (Imago Christi and Imitation of Christ) முடித்து தேவரீருடைய சந்நிதி சேர சந்தோஷத்தோடு எதிர் நோக்கிக் கொண்டிருப்பேன். ஆயினும் என்னுடைய சித்தமல்ல உம்மு டைய சித்தமே ஆகக்கடவது என்றார். கடைசியாக அருகி லிருந்த தமது உடனூழியனாகிய D. அருளப்பன் உபாத்தியாய ரைப் பார்த்து, தன் வீட்டைச் சுட்டிக்காட்டி, சகோதரனே! இந்தக் கூரையைப் பார்த்தீரா, என்ன கேவலமாயிருக்கிறது. இது என் வீடல்ல நான் போகும் மாளிகைக்கிது ஈடாகாது. இதைப் பார்க்கிலும் அலங்காரமான மாளிகை எனக்கு ஆயத்தமாக்கப் பட்டிருக்கிறது. அவ்விடத்துக்கு நான் போகவேண்டும், கோவில் மணியடிக்கிறது, கோவிலுக்கு நான் போகிறேன்'' என்று சொன்னார். இதுதான் அவருடைய கடைசி வார்த்தை. தம் அருமையான மனைவி அவரிடம் வந்து தனக்கு என்ன சொல்லப் போகிறீர்கள் என்று கேட்க தன் கையை உயர்த்திக் காட்டிக் கண்ணை மூடினார். அதன் பின் அவர் மனதிலே ஜெபித்து அப்போஸ்தலருடைய விசுவாசப் பிரமாணத்தையும், கர்த்தருடைய ஜெபத்தையும் வாய்க்குள் சொல்லி முடித்தார். உடனே அவருடைய ஆவி அகமகிழ்வுடன் ஆகாசப் பிரவேச மாயிற்று. மரித்தபின் அவருடைய முகத்தில் காணப்பட்ட முகமலர்ச்சியும் சந்தோஷமும், அழகும் அருகில் நின்ற அனை வரையும் பிரமிக்கச் செய்தது. இவருடைய சரீரம் சாட்சியாபுரம் கோவிலைச் சேர்ந்த கல்லறைத் தோட்டத்தில் அடக்கம் பண்

ணப்பட்டிருக்கிறது. அவருடைய கல்லறையின் படத்தையும் அதில் வரைந்திருக்கும் வாசகத்தையும் மறு பக்கத்தில் பார்க்க லாம்.

வெள்ளை அங்கிதரித்து
சுடர் ஒளியுள்ளோர் ஆர்?
தேவனை ஆராதித்து
பூரிப்போர் களிப்பர் ஆர்?
சிலுவையை எடுத்து
யேசுவின் நிமித்தமே
யுத்தம்பண்ணிப் பொறுத்து
நின்றோர் இவர்கள்தானே.

அவர் ஜெயங் கொண்டோராய்
இனி சோதிக்கப்படார்.
தீமை நீங்கிச் சுத்தராய்
பசிதாகம் அறியார்.
மத்தியான உஷ்டணம்
இனிப்பட மாட்டாதே
அவர்கள் மெய்ப்பாக்கியம்
வளர்ந்தோங்கும் நித்தமே.

தேவ ஆட்டுக்குட்டியும்
அவர்களைப் போஷிப்பார்.
ஜீவதருக்கனியும்
ஜீவநீரும் அளிப்பார்.
துக்கம் துன்பம் ஒழித்து
குறையாவும் நீக்குவார்.
கண்ணீரையும் துடைத்து
அன்பினால் நிரப்புவார்.



IN LOVING MEMORY OF

# THE Rev. SAMUEL PAUL, RAO SAHEB, C.M.S.

**(CHAIRMAN OF SACHIAPURAM AND VACAIKULAM CIRCLES)**

HONORARY CHAPLAIN TO THE

LORD BISHOP OF MADRAS AND THE

BISHOP IN TINNEVELLY AND MADURA

*BORN June 15th 1844.*

*DIED March 11th 1900.*

**"He being dead yet speaketh."**

*HEB. XI. 4.*

# 5-ஆம் அதிகாரம்

## அன்றாடக ஜீவியம்

பவுல் ஐயருடைய அன்றாடக ஜீவியத்தில் சிறந்து விளங்கிய முதல் நன்மாதிரி சுறுசுறுப்பு என்னலாம். இவர் தினசரி அதிகாலையில் 5 மணிக்கு எழுந்து தனிஜெபம் செய்து, 6 மணிக்குள் ஸ்நானம்பண்ணி உடுத்திக்கொண்டு, 7 மணிக்கு தேவாலயத்தில் காலை ஆராதனைக்குப்போய், 8 மணிக்கு காப்பி சாப்பிட்டுவிட்டு ஆபீஸ் அறைக்குச்சென்று வாசிப்பதிலும், புஸ்தகங்கள் எழுதுவதிலும், கணக்குப்பார்ப்பதிலும், சபையின் வழக்குகளைத் தீர்ப்பதிலும், இனத்தார் சிநேகிதருக்குக் கடிதங்கள் எழுதுவதிலும், 12 மணி வரையில் காலத்தைச் செலவிடுவார். பகல் போஜனமானபின் கொஞ்சநேரம் பிள்ளைகளோடும் பேரப் பிள்ளைகளோடும் இனத்தாரோடும் குடும்ப சம்பாஷணைகள்செய்து, அரைமணிநேரம் இளைப்பாறி, திரும்பவும் ஆபீஸ் அறைக்குப் போய் முன்போலவே வேலையை நடப்பித்து, 5 மணிக்கு தேவாலயத்தில் மாலை ஜெபமானபின் வெளியே உலாவப் போய், சபையில் வியாதியஸ்தர் பெலவீனர் ஏழைகள் முதலிய ஜனங்களைச் சந்தித்து, ஜெபம் பண்ணி, அவரவருடைய ஆத்துமத்துக்கும் சரீரத்துக்கும் இன்றியமையாத அவசியமென்று கண்ட உதவிகள் புரிந்து, 8 மணிக்கு வீட்டுக்குத் திரும்பி குடும்ப ஜெபமானபின் சாப்பிட்டு, 10 மணி வரையில் சிநேகிதரோடும் மற்றவர்களோடும் பல விஷயங்

களைக்குறித்து சம்பாஷணை பண்ணிக்கொண்டு தன் படுக்கைக் குச்செல்வார். இரவில் அடிக்கடி எழுந்து முழங்காலில் நின்று தனிச்செபம் செய்வார். லெந்துநாட்கள் தவச உற்சவம் முதலிய விசேஷகாலங்களில், இரவில் தனியே தேவாலயத்திற்குட் சென்று சபையின் பக்திவிர்த்திக்காக அநேகதடவை அழுகை யோடும் ஏங்கலோடும் விண்ணப்பம் பண்ணுவார். தன் விசா ரணைக்குட்பட்ட சகல கிராமங்களையும் சுற்றிப்பார்ப்பதிலும், சபையை விசாரிப்பதிலும், மிஷன் உத்தியோகஸ்தர்களுக்கும் சபையாருக்கும் அவரவர்க்குத் தக்கபடி புத்தி போதனைகள் சொல்லி உற்சாகப்படுத்துவதிலும், வெயிலிலும் மழையிலும், இரவிலும் பகலிலும், காற்றிலும் பனியிலும் அடிபட்டு, காடென் றும் வீடென்றும், மலையென்றும் குகையென்றும், பட்டியென் றும் பட்டணமென்றும் பாராமல் இடத்துக்குத் தக்கபடித் தன் நடை உடை போஜன பானங்களைச் சரிப்படுத்திக் கொண்டு அநேக மைல்கள் பிரயாணம்பண்ணி, அதிக உற்சாகத்தோடும் சுறுசுறுப்போடும் கர்த்தருடைய ஊழியத்தை நடத்திவந்தார்.

பவுல் ஐயர் தன் மனைவி மக்களிடத்தில் அதிக அன்புடையவ ராயிருந்தார். சாப்பிடும் சமயங்களில் தன் குடும்பத்தைச்சேர்ந்த சிறு குழந்தைமுதல் பெரியவர் வரையில் யாவரும் தன்னோடு பந்தியில் உட்கார்ந்து சந்தோஷகரமான சம்பாஷணைகள் செய்து கொண்டு சாப்பிடும்படி பிரியப்படுவார். சிலவேளைகளில் தாமே எழுந்திருந்து பந்தியிலிருப்பவர்களுக்குப் பரிமாறுவார். சிறு பிள்ளைகளை அதிகமாய் நேசிப்பார். அவர்களோடு சில வேளைகளில் சந்தோஷமாய் குழந்தைகள் போலவே விளையா டிக் கொண்டு அவர்களைச் சந்தோஷப்படுத்துவார். அவர் களுக்கு அடிக்கடி வேதவாக்கியங்களையும் சிறு ஜெபங்களையும் சொல்லிக் கொடுப்பார். குடும்பத்தில் ஞானஸ்நானம், கலியாண முதலிய மங்களகாரியங்கள் நடக்கும் காலங்களில் விசேஷ விருந்துகள் செய்வதிலும், ஏழைகளுக்குக் கொடுப்பதிலும் உற்

சாகமாயிருப்பார். வேளாவேளைகளில் விகடப்பேச்சுகளால் வந்திருக்கும் விருந்தினரை நகைக்கப்பண்ணுவார்.

தன் குடும்பத்தில் வியாதிகள், துன்பங்கள், வருத்தங்கள் நேரிடும் சமயங்களிலும், எந்தக் காரணத்தினாலாவது சகிக்க வொண்ணாத மனக்கவலைகள் உண்டாகும் காலத்திலும் அதிக உருக்கத்தோடும் ஏக்கத்தோடும், அங்கலாய்ப்போடும் அழுகை யோடும் ஜெபிப்பார். வியாதியஸ்தர் எவராயிருந்தபோதிலும் இரவெல்லாம் விழித்திருந்து செய்யவேண்டிய சகல உதவிகளை யும் அன்போடும் பட்சத்தோடும் செய்வார். மனக்கவலை மேற்கொண்ட சமயங்களில் அவர்செய்யும் பின்வரும் தனித் தியான விண்ணப்பம் இப்புத்தகத்தை வாசிக்கும் ஒவ்வொரு ஆத்துமாவுக்கும் அளவிறந்த நன்மையைக் கொடுக்கு மென்பதற்கு ஐயமில்லை.

* யாவே : ஜிஹோவா! கர்த்தாவே!
யாவே : சரீரமில்லாதவர்.
யாவே : பகுக்கப்படாதவர்.
யாவே : தாபமில்லாதவர்.
யாவே : ஜீவனுள்ளவர்.
யாவே : நித்தியர்.
யாவே : பரிசுத்தர்.
யாவே : சர்வவல்லவர்.
யாவே : சர்வஞானி.
யாவே : சர்வவியாபகர்.
யாவே : சர்வகிருபையுள்ளவர்.
யாவே : ஆவியாயிருக்கிறார்.
யாவே : வெளிச்சமாயிருக்கிறார்.
யாவே : அன்புள்ளவர்.
யாவே : சிருஷ்டிகர்த்தா.

---

* யாவே : எகோவா

யாவே : சிருஷ்டிதிதிசம்ஹார்.
யாவே : காணப்படாதவர்.
யாவே : ஆராயமுடியாதவர்.
யாவே : அளவில்லாதவர்.
யாவே : அழிவில்லாதவர்.
யாவே : சுயம்பு.
யாவே : சாஸ்வதமானவர்.
யாவே : மகத்துவர்.
யாவே : பெரியவர்.
யாவே : உன்னதமானவர்.
யாவே : பரிபூரணர்.
யாவே : நீதியுள்ளவர்.
யாவே : சத்தியமுள்ளவர்.
யாவே : உண்மையுள்ளவர்.
யாவே : நல்லவர்.
யாவே : கிருபையுள்ளவர்.
யாவே : சாந்தமுள்ளவர்.
யாவே : இரக்கமுள்ளவர்.
யாவே : உருக்கமுள்ளவர்.
யாவே : எரிச்சலுள்ளவர்.
யாவே : எரியும் அக்கினி.
யாவே : அவரே தேவன்.
அவரைத்தவிர வேறுதேவன் இல்லை.
அவரே என் தாதா.
அவரே என் மாதா.
அவரே என் இராஜா.
யாவேவை வணங்குகிறேன்.
அவர் முன் குனிகிறேன்.
அவரை நமஸ்கரிக்கிறேன்.
அவருக்கே ஸ்தோத்திரம்.
அவருக்கே துதி.

அவருக்கே கனம்.
அவருக்கே புகழ்.
யாவே! இரங்கும்.
யாவே! கிருபையாயிரும்.
யாவே! ஆதரியும்.
யாவே! ஆண்டுகொள்ளும்.
யாவே! நடத்தும்.
யாவே! பாதுகாரும்.
யாவே! என் சாத்தானைத் துரத்தும்.
யாவே! என் சாத்தானை அழியும்.
யாவே! என் பாவங்களைப் பாராதேயும்.
யாவே! என் அக்கிரமங்களை நினையாதேயும்.
யாவே! என் பாவங்களை மன்னியும்.
யாவே! என் அக்கிரமங்களை மறந்திடும்.
யாவே! என் சத்துருக்களை விலக்கும்.
யாவே! என் சத்துருக்களுக்கு மன்னியும்.
யாவே! என் சத்துருக்களைச் சிநேகிதராக்கும்.
யாவே! உமது ஆவியைத்தாரும்.
யாவே! உமது ஆவியால் நடத்தும்.
யாவே! உமது ஆவியால் நிரப்பும்.
யாவே! நல் மரணத்தைத்தாரும்.
யாவே! உமது வீட்டில் சேர்த்துக்கொள்ளும்.
யாவே! நமஸ்காரம்.
யாவே! சாஷ்டாங்கம்.
யாவே! எனக்கு இரங்கும்.
யாவே! என் பாவங்களை மன்னியும்.

---

ஜேசு — கிறிஸ்து — இம்மானுவேல் — ஜேசுவே! பிதாவின் வார்த்தையே!

நீர் ஜீவனுள்ளவர்.
நீர் நித்தியர்.
நீர் பரிசுத்தர்.
நீர் சர்வவல்லவர்.
நீர் சர்வஞானி.
நீர் சர்வவியாபகர்.
நீர் கிருபையுள்ளவர்.
நீர் வெளிச்சமுள்ளவர்.
நீர் அன்புள்ளவர்.
நீர் சாந்தமுள்ளவர்.
நீர் தாழ்மையுள்ளவர்.
நீர் மனத்தாழ்மையுள்ளவர்.
நீர் சிருஷ்டிகர்.
நீர் சிருஷ்டிதிதிசம்ஹாரர்.
நீர் ஆராயப்படாதவர்.
நீர் அளவில்லாதவர்.
நீர் அழிவில்லாதவர்.
நீர் மகத்துவர்.
நீர் பெரியவர்.
நீர் உன்னதமானவர்.
நீர் தேவனுடைய குமாரன்.
நீர் இஸ்ரவேலின் இராஜா.
நீர் நீதியுள்ளவர்.
நீர் சத்தியமுள்ளவர்.
நீர் நல்லவர்
நீர் தேவன்.
நீர் என் தாதா.
நீர் என் மாதா.
நீர் என் சகோதரம்.
நீர் என் இராஜா.

நீர் என் இரட்சகர்.
நீர் என் இரட்சிப்பின் அதிபதி.
நீர் என் கணவர்.
நீர் என் பரிசுத்தபிள்ளை.
நீர் என் தேவாட்டுக்குட்டி.
நீர் என் ஆலயம்.
நீர் என் சூரியன்.
நீர் என் இரட்சிப்பின் கொம்பு.
நீர் என் மேய்ப்பர்.
நீர் என் நீதி.
நீர் என் பரிசுத்தம்.
நீர் என் மீட்பு.
நீர் என் திராட்சச்செடி.
நீர் என் ஜீவவிருக்ஷம்.
நீர் என் ஜீவஅப்பம்.
நீர் என் மறைவான மன்னா.
நீர் என் ஜீவதண்ணீர்.
நீர் என் ரோஜா.
நீர் என் கீர்த்தியுள்ள நாற்று.
நீர் என் மருதோன்றிப்பூங்கொத்து.
நீர் என் ஜோதி.
நீர் உலகத்தின் ஜோதி.
நீர் என் வெள்ளி.
நீர் என் விடிவெள்ளி.
நீர் என் அருணோதயம்.
நீர் என் அஸ்திபாரம்.
நீர் என் அடைக்கலம்.
நீர் என் துறைமுகம்.
நீர் என் ஆதிபர்வதம்.
நீர் என் விலைபெற்றகல்.

நீர் என் பரிசுத்தஸ்தலம்.
நீர் என் பலிபீடம்.
நீர் என் பலி.
நீர் என் ஆசாரியர்.
நீர் என் கிருபாசனம்.
நீர் என் சமாதானம்.
நீர் என் வழி.
நீர் என் சத்தியம்.
நீர் என் ஜீவன்.
நீர் என் அல்பா.
நீர் என் ஒமேகா.
நீர் என் ஆமென்.
நீர் என் ஆதாம்.
நீர் என் தலை.
நீர் என் விருது.
நீர் என் சிங்கம்.
நீர் என் அம்பு.
நீர் என் கேடகம்.
இயேசுவே என் தேவன்.
அவரைக் கும்பிடுகிறேன்.
அவர் முன் பணிகிறேன்.
அவர் முன் சாஷ்டாங்கம் செய்கிறேன்.
அவரை ஸ்துதிக்கிறேன்.
ஜேசுவே! இரங்கும்.
ஜேசுவே! கிருபையாயிரும்.
ஜேசுவே! என்னை ஆதரியும்.
ஜேசுவே! என்னை ஆண்டுகொள்ளும்.
ஜேசுவே! என்னை நடத்தும்.
ஜேசுவே! என்னைப்பாதுகாரும்.
நீர் கன்னிமரிமைந்தர்.

நீர் அவதாரமெடுத்தீர்.
நீர் சிலுவையில் மரித்தீர்.
நீர் உயிரோடெழுந்தீர்.
நீர் பரமண்டலமேறினீர்.
நீர் மறுபடியும் வருவீர்.
நீர் என் நியாயாதிபதி.
என் பாவங்களைப் பாராதேயும்.
என் அக்கிரமங்களை நினையாதேயும்.
என் பாவங்களை மன்னியும்.
என் அக்கிரமங்களை மறந்திடும்.
என் சாத்தானை விலக்கும்.
என் சாத்தானை அழியும்.
என் சத்துருக்களை விலக்கும்.
என் சத்துருக்களுக்கு மன்னியும்.
என் சத்துருக்களை சிநேகிதராக்கும்.
உமது ஆவியைத் தாரும்.
உமது ஆவியால் நடத்தும்.
உமது ஆவியால் நிரப்பும்.
நல்மரணத்தைத் தாரும்.
உமது வீட்டில் சேர்த்தருளும்.
இயேசுவே! நீரே தேவன்.
நீரே அதிசயமானவர்.
நீரே ஆலோசனைக்கர்த்தா.
நீரே நித்தியபிதா.
என் பாவங்களை மன்னியும்.
என் மேல் கிருபையாயிரும்.
என்னை ஆசீர்வதியும்.
என்னை இரட்சியும்.

இம்மானுவேலே நமஸ்காரம்.
இம்மானுவேலே சாஷ்டாங்கம்.
நீரே தேவமனுஷன்.
நீரே கன்னியின்கனி.
நீரே கன்னிமரிமைந்தர்.
நீரே மாம்சம் போர்த்தீர்.
நீரே மாம்சமான வார்த்தை.
நீரே கிருபையால் நிறைந்தவர்.
நீரே சத்தியத்தால் நிறைந்தவர்.
நீர் மாந்தர்மத்தியில் கூடாரம் போட்டீர்.
நீர் பரிசுத்த ஆவியால் ஜனித்தீர்.
நீர் பரிசுத்த ஆவியால் பிறந்தீர்.
நீர் பரிசுத்த ஆவியால் வளர்ந்தீர்.
நீர் மாம்சத்தில் சஞ்சரித்தீர்.
நீர் விருத்தசேதனம் பெற்றீர்.
நீர் ஞானஸ்நானம் பெற்றீர்.
நீர் பேயின் சோதனை ஜெயித்தீர்.
நீர் பேய்களைத் துரத்தினீர்.
நீர் பிசாசுக்களை அழித்தீர்.
நீர் பிசாசின் கிரியைகளை அழித்தீர்.
நீர் அரும்போதனை தந்தீர்.
அநேக அற்புதங்களைச் செய்தீர்.
நீர் மரித்தோரையும் உயிரோடெழுப்பினீர்.
நீர் அநியாயமாகத் துன்பப்பட்டீர்.
நீர் அநியாயமாகத் துக்கப்பட்டீர்.
நீர் அநியாயமாக அழுதீர்.
நீர் பசியடைந்தீர்.
நீர் தாகமடைந்தீர்.
பொய்யாய்க் குற்றஞ்சாட்டப்பட்டீர்.
அநியாயத்தீர்ப்புப்பெற்றீர்.

அடிபட்டீர்.
நிந்திக்கப்பட்டீர்.
துப்பப்பட்டீர்.
துயிலுரியப்பட்டீர்.
முள்முடி சூடப்பட்டீர்.
சிவப்பங்கி தரிக்கப்பட்டீர்.
வாரால் அடிபட்டீர்.
மூங்கில் தடி ஏந்தினீர்.
சிலுவை சுமந்தீர்.
சிலுவையில் அறையுண்டீர்.
சிலுவையில் மரித்தீர்.
கல்லறையில் அடக்கப்பட்டீர்.
மூன்றாம்நாளில் உயிர்த்தெழுந்தீர்.
பக்தருக்குத் தரிசனமளித்தீர்.
பரமேறினீர்.
நியாயாதிபதியாக வருவீர்.
பரிசுத்த ஆவியை வாக்களித்தீர்.
பரிசுத்த பந்தியை ஸ்தாபித்தீர்.
பரிசுத்த ஸ்நானத்தை ஸ்தாபித்தீர்
பரிசுத்த ஆவியை அனுப்பினீர்.
பரிசுத்த சபையை ஸ்தாபித்தீர்.
நீரும் பிதாவும் ஒன்றானவர்.
நீர் பிதாவின் வார்த்தையானவர்.
நீர் பிதாவின் ஒரேபேறான குமாரன்.
நீரே இயேசுகிறிஸ்து.
நீர் பிதாவில் ஜெனிப்பிக்கப்பட்டீர்.
நீர் தெய்வத்தில் தெய்வமானவர்.
நீர் ஜோதியில் ஜோதியானவர்.
நீர் மெய்த்தேவனில் மெய்த்தேவனானவர்.
நீர் உண்டாக்கப்படாமல் ஜெனிப்பிக்கப்பட்டவர்.

நீர் பிதாவோடு ஒரே தன்மையுடையவர்.
உமது மூலமாய் சகலமும் உண்டாயிற்று.
நீர் பரமண்டலத்திலிருந்து இறங்கினீர்.
நீர் இராஜா.
நீர் இஸ்ரவேலின் ராஜா.
நீர் சர்வலோக ராஜா.
நீர் என்னுடைய ராஜா.
உமது இராச்சியத்துக்கு முடிவில்லை.
நீர் தேவதன்மையுடையவர்.
நீர் மனுஷதன்மையைச் சேர்த்துக்கொண்டீர்.
நீரே ஸ்திரீயின் வித்து.
நீரே மனிதனாகிய கிறிஸ்து இயேசு.
நீர் என் தேவன்.
நீர் என் கணவர்.
நீர் என் தாதா.
நீர் என் மாதா.
நீர் என் சகோதரன்.
நீர் என் இனத்தான்.
நீர் என் ஆலோசனைக்கர்த்தா.
நீர் என் சமாதானப்பிரபு.
நீர் என் அல்பா.
நீர் என் ஒமேகா.
நீர் என் ஆதி.
நீர் என் அந்தம்.
நீர் என் ஆமென்.
நீர் என் ஆதாம்.
நீர் என் அதிபதி.
நீர் என் சிங்கம்.
நீர் என் அம்பு.
நீர் என் கேடகம்.

நீர் என் ஆண்டவர்.
நீர் என் கர்த்தர்.
நீர் என் ஜீவன்.
நீர் என் கிரீடம்.
உம்மைப் பணிகிறேன்.
உம்மை ஸ்துதிக்கிறேன்.
உம்மை நமஸ்கரிக்கிறேன்.
உம்மை சாஷ்டாங்கம் செய்கிறேன்.
என் சாத்தானைக் கொல்லும்.
என் சாத்தானை வெல்லும்.
என் பாவங்களை யகற்றும்.
என் பாவங்களை மன்னியும்.
என் சத்துருக்களை விலக்கும்.
என் சத்துருக்களுக்கு மன்னியும்.
என் சத்துருக்களை சிநேகிதராக்கும்.
சிநேகிதரை ஆசீர்வதியும்.
மனைவியை ஆதரியும்.
பிள்ளை குட்டிகளைப் பராமரியும்.
இன பந்துக்களைக் காத்தருளும்.
அடியேனை இரட்சியும்.
அடியேன் மேல் கிருபையாயிரும்.
என் பாவங்களை மறந்திடும்.
உமது தூதர் துணையைத் தாரும்.
உமது செட்டைகளால் மறையும்.
மரணவேளையில் துணை நில்லும்.
நல்மரணத்தைத் தாரும்.
உமது ஆவியைத் தாரும்.
உமது ஆவியால் நிரப்பும்.

**ஸ்பிரீத்து சாந்து**

நீர் தேவன்.
நீர் ஆவியாயிருக்கிறீர்.
நீர் சரீரமில்லாதவர்.
நீர் சிருஷ்டிக்கப்படாதவர்
நீர் அளவில்லாதவர்.
நீர் நித்தியர்.
நீர் சர்வ வல்லவர்.
நீர் கர்த்தர்.
நீர் பிதா சுதனிலிருந்து புறப்படுகிறவர்.
நீர் ஜீவனைக் கொடுக்கிறவர்.
நீர் பிதா சுதனைப்போல வணக்கத்துக்குப் பாத்திரர்.
நீர் தீர்க்கதரிசிகளால் உரைக்கப்பட்டவர்.

**நீர் தண்ணீர்**

நீர் என்னைக் கழுவும் தண்ணீர்.
நீர் என்னைச் செழிப்பாக்கும் தண்ணீர்.
நீர் என்னைச் சுத்தமாக்கும் தண்ணீர்.
நீர் என்னைத் தாகம் தீர்க்கும் தண்ணீர்.
நீர் என்னைச் சந்தோஷிப்பிக்கும் தண்ணீர்.
நீர் எனக்கு ஜீவன் தரும் தண்ணீர்.

**நீர் என் அக்கினி**

என்னைச் சுத்திசெய்யும் அக்கினி.
என்னைப் புடமிடும் அக்கினி.
என்னை வெளிச்சமாக்கும் அக்கினி.
என்னைத் தெளிவிக்கும் அக்கினி.

**நீர் என் காற்று**

இஷ்டப்படி அடிக்கிறவர்.
நீர் நாற்றிசைக்காற்று.
நீர் உயிர்ப்பிக்கிற காற்று.
நீர் பெலன்தரும் காற்று.

**நீர் ஞான எண்ணெய்**

ரணமாற்றும் எண்ணெய்.
சுகமாக்கும் எண்ணெய்.
விளக்கைவளர்க்கும் எண்ணெய்.
என் அபிஷேக எண்ணெய்.

**நீர் என் மழை**

என் ஆசீர்வாதமான மழை.
என்னை வளம் பொருந்தியவனாக்கும் மழை.
குளம் நிரம்பும் மழை.
நீருற்று உண்டாக்கும் மழை.
நதிகள் ஓடப்பண்ணும் மழை.
சரமாரியாய்ப் பொழியும் மழை.

**நீர் என் பனி**

மெதுவாய் இறங்கும் பனி.
தலையைத் துளைக்கும் தைப்பனி.
மச்சைத் துளைக்கும் மாசிப்பனி.
நெஞ்சை நனைக்கும் மூடுபனி.
மனதை வெடிப்பாக்கும் கெண்டைப்பனி.
புல்லை வளர்க்கும் நீர்ப்பனி.

**நீர் தேவனுடைய சத்தம்**

என்னை நடத்துகிறீர்.
என்னை எச்சரிக்கிறீர்.
என் கதவைத் தட்டுகிறீர்.

**நீர் என் முத்திரை**

என்னை முத்திரையிடுகிறீர்.
என்னைப் பத்திரப்படுத்துகிறீர்.
என்னை உறுதிப்படுத்துகிறீர்.
நீர் பிரிக்கப்பட்ட சுடர் நாவு.

நீர் அறிவின் ஆவி.
நீர் ஆலோசனையின் ஆவி.
நீர் உற்சாகமான ஆவி.
நீர் உன்னதரின் பலம்.
நீர் கர்த்தர்.
நீர் கர்த்தரின் சத்தம்.
நீர் கிருபையின் ஆவி.
நீர் கிறிஸ்துவின் ஆவி.
நீர் குமாரனுடைய ஆவி
நீர் சத்திய ஆவி.
நீர் சர்வவல்லவரின் சுவாசம்.
நீர் ஜீவஆவி.
நீர் சுத்திகரிக்கும் ஆவி.
நீர் ஞானத்தின் ஆவி.
நீர் தீர்க்கதரிசன ஆவி.
நீர் யேகோவாவின் ஆவி.
நீர் ஏழுநிறைவான ஆவி.
நீர் பரிசுத்த ஆவி.
நீர் தேவன்.
நீர் தேற்றுகிறவர்.
நீர் நல்ல ஆவி.
நீர் நித்திய ஆவி.
நீர் நியாயத்தின் ஆவி.
நீர் பிதாவின் ஆவி.
நீர் புத்தியின் ஆவி.
நீர் புத்திரசுவிகாரத்தின் ஆவி.
நீர் மகிமையின் ஆவி.
நீர் வல்லமையுள்ள ஆவி.
நீர் வாக்குத்தத்த ஆவி.
நீர் வெளிப்படுத்தும் ஆவி.

அவர் போதகரை நியமிக்கிறார்.

போதகருக்கு அதிகாரம் கொடுக்கிறார்.
போதகரை நடத்துகிறார்.
போகாத இடங்களில் தடுக்கிறார்.
போதகரைப் போதிக்கிறார்.
பாவிகளுடன் போராடுகிறார்.
பாவிகளைக் கடிந்துகொள்ளுகிறார்.
பாவிகளை ஆறுதல்செய்கிறார்.
பலவீனத்தில் உதவிபுரிகிறார்.
கிறிஸ்துவை மகிமைப்படுத்துகிறார்.
உத்தமருடன் குடியிருக்கிறார்.
துக்கப்படக் கூடியவர்.
விசனப்படக் கூடியவர்.
விரோதிக்கப்படக் கூடியவர்.

அவர் தேவன்.

உன்னதமான தேவன்.
நித்தியர்.
சர்வவியாபகர்.
சர்வஞானி.
சர்வவல்லவர்.
சிருஷ்டிகர்.

அவர் என் தாயார்.

கிறிஸ்துவை எழுப்பினவர்.
வேதத்தை அருளினவர்.
அற்புதவரமளிப்பவர்.
சாட்சிபகருகிறவர்.
உம்மைப் பரீட்சைபாரா திருப்பேனாக.
உம்மை விசனப்படுத்தா திருப்பேனாக.
உம்மை துக்கப்படுத்தா திருப்பேனாக.

உம்மை அடக்கிவிடா திருப்பேனாக.
உம்மைப் பகையா திருப்பேனாக.
பாவம் செய்யாதபடி கிருபை செய்யும்.
அசட்டை செய்யாதபடி கிருபை செய்யும்.
எனக்குள்ளே தங்கும்.
என்னை ஆண்டுகொள்ளும்.
என் ஜீவனாயிரும்.
என் பெலனாயிரும்.
என் அனலாயிரும்.
என்னைவிட்டு விலகாதேயும்.
உமக்கே கனம்.
உமக்கே புகழ்.
உமக்கே துதி.
உமக்கே ஸ்தோத்திரம்.
உமக்கே பணிகிறேன்.
உமக்கு சாஷ்டாங்கம் செய்கிறேன்.
என்னை ஆதரியும்.
என்னைத் தேற்றும்.
என்னை நிரப்பிக் கொள்ளும். ஆமென்.

---

தன் குடும்பத்தை தேவபக்தியில் நடத்துவதில் அதிகக் கருத்துள்ளவராயிருந்தார். அன்போடு கூடிய புத்திமதியினாலும், கண்டிப்பினாலும், அடிக்கடி அவர்களோடு ஜெபிப்பதினாலும், ஞானப்பாட்டுகள் பாடுவதினாலும், பக்திவிருத்திக்கேற்ற புஸ்தகங்கள் அனேகம் வாங்கி வாசிக்கச் செய்வதினாலும் குடும்ப பக்தியதிகரிக்கும்படி செய்தார். தினசரி குடும்பஜெபம் பின்வருமாறு வெகு ஒழுங்காய் நடக்கும். பரிசுத்த வேதாகமத்திலிருந்து ஒரு பாகமும், காலை மாலை தியானம் முதலிய புஸ்தகங்களிலிருந்து ஒருபாகமும் வாசித்தானவுடனே எல்லா

ரும் வணக்கமாய் முழங்கால்படியிட்டு அப்போஸ்தலருடைய விசுவாசப் பிரமாணத்தைச் சொல்லுவார்கள். அதன்பின் சுருக்க மான ஒரு ஜெபமும் கர்த்தருடைய ஜெபமும் ஆசீர்வாதமும் முறையே சொல்லியான பின், பின்வரும் ஞானப்பாட்டை எல்லாரும் சொல்லி ஜெபத்தை முடிப்பார்கள். இந்த ஞானப் பாட்டு அவர்தாமே உண்டாக்கியது.

### தஞ்சகீதம்

1

கெத்சமனேத் தோட்டத்தில்
என்னை மீட்கவென்று நீர்
இரத்த வேர்வை சிந்தினீர்
இரட்சகா தஞ்சம் தஞ்சம்.

2

சிவப்பங்கி முண்முடி
சூடி, எனக்கு நீதி
அங்கி, ஜீவகிரீடம்
தந்தவா தஞ்சம் தஞ்சம்.

3

சிலுவைபாரம் ஏந்தி
பாவபாரம் இறக்கி
மானிடரை ரட்சித்தீர்
யேசுவே தஞ்சம் தஞ்சம்.

4

சாலேமின் வீதிவழி
சிலுவையால் இடறி
விழுந்து எழுந்துபோம்
இரட்சகா! தஞ்சம் தஞ்சம்.

5

கொல்கதா மலை ஏறி
கொலை பாதகரோடு
சிலுவையிலே தொங்கும்
தேவனே! தஞ்சம் தஞ்சம்.

6

சர்வலோக பாவத்தை
நாசமாக்கி மன்னிப்பை
தரும் ஊற்றைத்திறந்த
இரட்சகா! தஞ்சம் தஞ்சம்.

7

எனக்காக யேசுவின்
கைகள், கால்கள் விலாவில்
உண்டானகாயம் ஐந்தும்
எந்நாளும் தஞ்சம், தஞ்சம்.

8

குருசில் தலைசாய்ந்தே
மாண்டதேவ சுதனே!
சாய்ந்ததோளில் சாய்கிறேன்
இரட்சகா! தஞ்சம் தஞ்சம்.

ஆமென்.

# 6-ஆம் அதிகாரம்

## அவருடைய பிரசங்கங்கள்

1887-ஆம் வருஷம் சென்னை சர்ச்சுமிஷன் வடசேகரத்துச் சபையார் பவுல் ஐயரை வட திருநெல்வேலிக்கு வழிவிட்டனுப்பும் சமயத்தில் அவருடைய பிரசங்கங்களைப் பற்றி பின்வருமாறு நற்சாட்சி பகர்ந்தார்கள் :—

"பிரசங்கியாக, நீங்கள் இந்த இடத்தில் முதல் இடம் பெற்றீர்கள். தெளிவும் சாதுரியமுமுள்ள வாசகங்களும் சிறந்த கருத்துகளுமமைந்த தீர்க்கமான குரலாலுச்சரிக்கப்பட்ட தங்கள் பிரசங்கங்கள் வெதுவெதுப்பான இருதயங்களை அனலாக்கி, கவலையற்ற நெஞ்சங்களைக் கரிசனையுள்ளவைகளாக்கின." "தங்களது பக்தியும் உத்தமும் விளங்கிய நடக்கையினாலும், ஆழ்ந்த கருத்துகளடங்கிய சாதுரியப் பிரசங்கங்களினாலும், தெளிவும் தீர்க்கமுமுள்ள உபதேசங்களினாலும், பெருந்தன்மையும் பரோபகாரமும் நிறைந்த இருதயத்தினாலும், தைரியமும் சுறுசுறுப்பும் விளங்கிய கிருத்தியங்களினாலும், பொறுமையோடும் விடாமுயற்சியோடுங் காணப்பட்ட வழக்கங்களினாலும், சபையார்பேரில் உங்களுக்கிருந்த அன்பினாலும் பாசத்தினாலும், துன்பப்படுகிறவர்களுக்கு நீங்கள் காட்டின உருக்கத்தினாலும் நீங்கள் எங்கள் மனதைக் கவர்ந்து மாறாத நிலையான நல்லெண்ணத்தை எங்களிருதயத்தில் பதித்திருக்கிறீர்கள்."

இவருடைய பிரசங்க வல்லமையைப்பற்றி அதிகமாய் எழுத வேண்டியதில்லை. அவரைப்பற்றி கேள்விப்பட்ட யாவருக்கும் அது நன்றாய்த் தெரிந்த விஷயம். பவுல் ஐயர் பிரசங்கமென்றால் கோவில் நிறைந்த சபையென்று சகலரும் சொல்வார்கள். அநேகந்தடவை இங்கிலீஷ் கோவில்களிலும் பிரசங்கம்செய்து இங்கிலீஷ்காரராலும் இவருடைய பிரசங்கங்கள் நன்கு மதிக்கப்பட்டு மெச்சிக் கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆழ்ந்த கருத்துகளைச் சாதாரண நடையிலும் நாடோடிய சங்கதிகளின் மூலமாயும் கற்றோருக்கும் மற்றோருக்கும் லேசாய் மனதில் தங்கும்படியாகவும் சபைக்கும் சமயத்துக்கும் ஏற்ற விதமாகவும் பிரசங்கிப்

பதில் விசேஷ வரம் பெற்றவர். இவருடைய நடக்கையும் பிரசங்கமும் ஒன்றித்திருந்தமையால் சபையார் இவருடைய பிரசங்கங்களுக்குச் செவிகொடுத்து அவைகளின்படி நடக்க அதிக உற்சாகமாயிருந்தார்கள். இவருடைய ஜர்னல்களைப் பார்க்கும்போது ஒவ்வொரு பிரசங்கத்தையும் ஆயத்தம் செய்வதில் அநேகமணி நேரங்கள் செலவிட்டதாகத் தெரியவருகிறது. மேலும் புறமதஸ்தருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதிலும் விசேஷவரம் பெற்றவராயிருந்தார். இவருடைய பிரசங்கத்தால் குணப்பட்டு இவர் கையால் ஞானஸ்நானம் பெற்றவர்களில் அநேகர் இவர் கர்த்தருடைய ஊழியத்தை நடப்பித்த ஒவ்வொரு இடத்திலும் இருக்கிறார்கள். திருச்சபைக்கு விரோதமான பற்பல விபரீத விநோத உபதேசங்களால் இழுக்கப்பட்டு அலைசடிப் பட்டுக் கொண்டிருந்த ஆத்துமாக்களுக்கு இங்கிலாந்து திருச் சபையின் சிறந்த உபதேசங்களை வேதாகம நியாய தோரணை களினாலும், வைராக்கியமும் ஊக்கமும் நிறைந்த போதனைகளி னாலும் புகட்டி அவர்களைச் சபையில் ஸ்திரப்படுத்துவதில் சிறந்து விளங்கினார்.

இவர் எழுதிப் பிரசுரஞ்செய்த "தெளிவான பிரசங்கங்கள்" என்னும் 51பிரசங்கங்க ளடங்கிய அருமையான புஸ்தகம் அநேக தமிழ் பிரசங்கிகளுக்கு முக்கிய பிரசங்க உதவியாக உபயோகப்படுகிறது.

தம்முடைய மரணத்துக்கு முந்தின வருஷத்தில் பாளையங் கோட்டை திரித்துவ ஆலயத்தில் நடந்த குருப்பட்டாபிஷேக ஆராதனையில் இவர் செய்த பிரசங்கம் ஒன்றைமாத்திரம் வாசிப்பவர்க்குப் பிரயோசனமாக இத்துடன் சேர்த்திருக் கிறோம்.

## "எச்சரிக்கையாயிரு, நிலைகொண்டிரு"

## இது

## 1899-ஆம் வருஷத்து குருத்தோலை ஞாயிறில் பாளையங்கோட்டை திரித்துவ ஆலயத்தில் நடந்த குருப்பட்டாபிஷேக ஆராதனையில்

## கனம் S. பவுல் ராவ்சாஹிப் ஐயரவர்களால் பிரசங்கிக்கப்பட்டது.

1 தீமோத்தேயு 4:16

''உன்னைக்குறித்தும், உபதேசத்தைக்குறித்தும், எச்சரிக்கையாயிரு. இவைகளில் நிலைகொண்டிரு. இப்படிச்செய்வாயானால் உன்னையும் உன் உபதேசத்தைக் கேட்பவர்களையும் இரக்ஷித்துக் கொள்வாய்''

இப்பொழுது நாம் வழக்கமான ஆராதனைக்கென்றல்ல, நமது சகோதரரில் சிலருக்கு திவ்ய பணிவிடைக்குரிய குருப்பட்டங்களைக் கொடுக்கும் விசேஷித்த ஆராதனைக்கென்று கூடி வந்திருக்கிறோம். இவ்வித ஆராதனையின் துவக்கத்தில் பட்டம் பெற வருகிறவர்களுடைய உத்தியோகம், கடமை இன்னதென்றும், இம்முறை கிறிஸ்து சபையில் மிகவும் அவசியமானதென்றும், இப்படிப் பட்டம் பெறுகிறவர்களை ஜனங்கள் கனம்பண்ண வேண்டுமென்றும் காட்டும்படிப் பிரசங்கம் செய்யவேண்டும் என்று நமது திருச்சபை கட்டளையிட்டிருக்கிறது. அக்கட்டளையின்படி நான் இன்று கர்த்தருடைய நாமத்தை முன்னிட்டு எழுந்துநின்று பரி. பவுல் தீமோத்தேயுவுக்குச் சொன்ன ஒரு வாசகத்தைக் கொண்டு சில வார்த்தைகளைப் பேசப் போகிறேன். பரிசுத்த ஆவியானவர் என்னோடும், உங்களனைவரோடும் கூட இருப்பாராக, ஆமென்.

''உன்னைக்குறித்தும், உபதேசத்தைக்குறித்தும், எச்சரிக்கையாயிரு. இவைகளில் நிலைகொண்டிரு. இப்படிச் செய்வாயானால், உன்னையும் உன் உபதேசத்தைக் கேட்பவர்களையும் இரக்ஷித்துக் கொள்வாய்.''

தீமோத்தேயு என்பவர் பரி. பவுலுக்கு ''விசுவாசத்தில் உத்தம குமாரனாய்''[1] இருந்ததால், தான் சுவிசேஷத்தால் பெற்ற மகனுடைய சொந்த இரக்ஷிப்பைப்பற்றி அதிகக் கவலையா யிருந்தார். அத்தோடு அவர் செய்து வந்த ஊழியமும் உபதேச மும் தேவன் தமது சுய இரத்தத்தினால் சம்பாதித்துக் கொண்ட மந்தையை[2] அடுத்ததாயிருந்ததால் அவைகளைப் பற்றியும் கவலையாயிருந்தார். தமது மகனும் நன்றாயிருக்கவேண்டும்; அவன் ஊழியமும் உபதேசமும் நன்றாயிருக்க வேண்டுமென்று ஆசைப்பட்டார். தீமோத்தேயு என்ற பேருக்கு ''தேவகனம்'' என்று அர்த்தம் ஆகும். ''தேவகனம்'' என்ற பேரைத் தரித் திருக்கும் தமது விசுவாச மகன், தன் பேரைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமென்பது அவர் மனதிலிருந்தது; ஆதலால் ஒரு தடவையில் ''குமாரனாகிய தீமோத்தேயுவே''[3] அல்லது குமாரனாகிய ''தேவகனமே'' என்றும், இன்னொரு சமயத்தில் ''தேவனுடைய மனுஷனே''[4] என்றும், அழைத்து, ''உன்னைக் குறித்தும், உபதேசத்தைக்குறித்தும், எச்சரிக்கையாயிரு; இவை களில் நிலைகொண்டிரு. இப்படிச் செய்வாயானால் உன்னை யும், உன் உபதேசத்தைக் கேட்பவர்களையும் இரக்ஷித்துக் கொள்வாய்'' என்று சொல்லுகிறார். இந்த வாக்கியத்தைக் கொண்டு, **முதலாவது** பரி. பவுல் தமது விசுவாச மகனுக்குக் கூறும் கட்டளைகளைத் தியானிப்போமாக.

I. **''உன்னைக்குறித்து** எச்சரிக்கையாயிரு'' என்கிறார். தேவபக்திக்கடுத்த சன்மார்க்க கடமைகளெல்லாம், அம்மார்க்கத் துக்கும், அதைச்சேர்ந்த அனைவருக்குமடுத்த பொதுவானவை களாயிராமல், ஒவ்வொருவனுக்கும் தனிப்பட்டதாயிருக்கின் றன. ஒவ்வொரு கிறிஸ்தவனும் தன்னுடைய கிறிஸ்துமார்க்க

---

[1] 1 தீமோ. 1:2. [2] அப். 20:28. [3] 1 தீமோ. 1:18. [4] 1 தீமோ. 6:11.

ஜீவியத்தைக்குறித்து எச்சரிக்கையாயிருக்க வேண்டியது. ஒரு வன் அவைகளைத் தன்னில் பூரணப்படுத்த முயன்று, அந்தப் பூரணத்தால் மற்ற சகோதரனும் நன்மை பெறும்படி முயலவேண் டியது. அதிலும் விசேஷமாய் தேவபணிவிடைக்காரர், இந்தச் சத்தியத்தை ஒத்துக்கொண்டு, அவரவர் தன்னைக்குறித்து எச்ச ரிக்கையாயிருக்க வேண்டும்.

## I "உன்னைக்குறித்து எச்சரிக்கையாயிரு"

1. **உன் சொந்த ஆத்தும இரக்ஷிப்பைப்பற்றி** எச்சரிக்கை யாயிரு. தன் இரக்ஷிப்பைச் சம்பாதித்துக்கொண்டவனுக்கே யன்றி மற்றவனுக்கு அந்த இரக்ஷிப்பின் அருமையும், அதை மற்றவனும் பெற்றுக் கொள்ளவேண்டுமென்ற வாஞ்சையும் உண்டாகமாட்டாது. பூர்வ எகிப்தியரும் அசீரியரும் தங்களி லுள்ள நோயாளிகளைத் தெருத்திண்ணையில் கிடத்துவார் களாம். இதின் முகாந்தரம், தெருவில் கடந்து போகிறவர்கள் நோயாளியைக் கண்ணோக்கி, தாங்கள் பரீட்சையால் அறிந்த மருந்துகளைச் சொல்லவும், அதின் மூலமாய் நோயாளி சுகமாக வுமே. தன் இரக்ஷிப்பின் அனுபவத்தைச் சொல்லக்கூடாத தேவபணிவிடைக்காரன் தன் ஆத்துமாவின் இரக்ஷிப்பை இன் னும் அடைந்து கொள்ளவில்லையென்று தீர்மானமாகச் சொல்ல லாம். "குருடனுக்குக் குருடன் வழிகாட்டலாமா?"[1] என்று இரக்ஷகரும் ஒருதரம் சொன்னார். தன் இரக்ஷிப்பைப் பெற்றுக் கொள்ளாத குரு பிறரை இரக்ஷிக்க பெலனற்றவனாயிருக்கிறான்.

"இரக்ஷிப்பு" என்ற பதமே நம்பிக்கையில்லாத அபாய ஸ்திதியைக் காட்டுகிறது. அதின் கருத்தை ஜலப்பிரளயத் திலிருந்து தப்பின நோவாவும்,[2] சோதோமின் அழிவிலிருந்து தப்பின லோத்தும்,[3] சிங்கங்களின் பற்களுக்குத் தப்பின தானி யேலும்,[4] அக்கினிக்குத் தப்பின சாத்ராக், மேஷாக், ஆபேத்

[1]மத். 15:14. [2]எபி. 11:7. [3]ஆதி. 19:16. [4]தானி. 6:23.

நேகோ என்னும் மூன்று வாலிபரும்,[1] திமிங்கிலத்துக்குத் தப்பின யோனாவும்,[2] அமிழ்தலுக்குத் தப்பின பேதுருவும்,[3] கப்பற்சேதத்துக்குத் தப்பின பரி. பவுலும்,[4] மாத்திரம் சரியாய் விளக்கிச் சொல்லக்கூடும். சரீர ஆபத்துகளிலிருந்து தப்புவதிலும் பாவத்திலிருந்து இரக்ஷிக்கப்படுவது மிகவும் உயர்ந்ததும் மேன்மையுமுள்ளது. இதின் அருமையை ஒருதரம் தாவீது அரசன் வெளியிட்டபோது, ''அவர் என் அக்கிரமங்களெல்லாவற்றையும் மன்னித்து, என் நோய்களையெல்லாம் குணமாக்கி, என் பிராணனை அழிவுக்கு விலக்கி மீட்டு என்னைக் கிருபையாலும் இரக்கங்களாலும் முடிசூட்டினார்''[5] என்று சொன்னார். ஆதலால் பொதுவாக ஒவ்வொரு கிறிஸ்தவனும் விசேஷமாக திருப்பணிவிடைகளை நிறைவேற்றும்படித் தங்களை ஒப்புவித்தவர்களும் தங்கள் சொந்த ஆத்தும இரக்ஷிப்பைக் குறித்து எச்சரிக்கையாயிருக்க வேண்டும்.

2. **உன் சொந்த குணத்தையும், நடக்கையையும் சம்பாஷணையையும் குறித்து எச்சரிக்கையாயிருக்க வேண்டும்.** நீங்கள் இன்று அவரவர் **அந்தஸ்துக்குரிய** பட்டங்களைத் **தரித்துக் கொள்வதும்,** உங்களைப்போல சிலர் குருக்களாயிருப்பதும் இவ்வுலகத்திலுள்ள எல்லாருக்கும் சந்தோஷமும் ஏக சம்மதமுமாயிருக்கிறதென்று எண்ணவேண்டாம். திருச்சபையின் சத்துருவாகிய சாத்தானுக்கும், வேறு பலருக்கும், குருக்களும் வேண்டாம், ஆலயங்களும் வேண்டாம் என்ற அபிப்பிராயந்தானிருக்கிறது. ஆனால் திருச்சபையின் தலைவராகிய கிறிஸ்துவும் அவருடைய ஆவியும், ''அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்''[6] என்று அறிந்து, உங்களையும் தேடி வந்து ''நீங்களும் என் திராட்சத்தோட்டத்திலே வேலைசெய்ய வாருங்கள்''[7]

---

[1]தானி. 3 அதி. [2]யோனா 2:9, 10. [3]மத். 14:30. [4]2 கொ. 11:25. [5]சங். 103:3,4. [6]மத். 9:37. [7]மத். 20:4, 7.

என்று அழைத்து அனுப்புகிறார்கள். ஆதலால் கிறிஸ்துவுக்கும், அவருடைய திருச்சபை ஏற்பாட்டுக்கும், உங்களுடைய சுய வாழ்வுக்கும் விரோதமாயிருக்கிற எல்லாரும் உங்களைக் கவனிக்கிறார்கள். அத்தோடு உங்கள் சிநேகிதரும் சபையாரும் நியாயமான முகாந்தரத்தோடு உங்களைக் கவனிக்கவேண்டியவர்களாயிருக்கிறார்கள். மற்றவர்கள் என்னை ஏன் கவனிக்க வேண்டும் என்று நீங்கள் சொல்லக்கூடாது. ஒரு சாதாரண கிறிஸ்தவன் குருவாகும்போது அவன் அந்த நிமிஷ முதல் இவ்வுலகத்திலுள்ள எவ்வகைப்பட்ட மனுஷனுக்கும் பொதுச் சொத்தாகவும், மாதிரி மனுஷனாகவுமிருக்கிறான். தேவன் எப்படி எல்லா மனுப்புத்திரருக்கும் பொதுவோ அப்படியே தேவனுடைய மனுஷனும் பொதுவானவன். பரி. பவுல் இதை உணர்ந்தவராய், ''நாங்கள் உலகத்துக்கும் தூதருக்கும் மனுஷருக்கும் வேடிக்கையானோம்.'' ''நாங்கள் கிறிஸ்துவினிமித்தம் பைத்தியகாரர்,'' ... 'பலவீனர்,'... 'கனவீனர்,' 'நிருவாணிகள்,' 'குட்டுண்டவர்கள்,' 'வேலைசெய்து பாடுபடுகிறோம், வையப்பட்டு ஆசீர்வதிக்கிறோம்; துன்பப்பட்டுச் சகிக்கிறோம்; தூஷிக்கப்பட்டு வேண்டிக்கொள்ளுகிறோம், இந்நாள்வரைக்கும் உலகத்தின் குப்பையைப் போலவும், எல்லாரும் துடைத்துப்போடுகிற அழுக்கைப்போலவுமானோம்'[1] என்கிறார். இவையெல்லாம் ஒரு திவ்ய பணிவிடைக்காரனுக்குச் சம்பவித்தாலும், அவன், தான் தாங்கும் ஊழியத்தினிமித்தம், தன் குணத்திலும் பேச்சிலும் நடக்கையிலும் மற்றவர்களுக்கு முன்மாதிரி காட்டும்படி எச்சரிக்கையாயிருக்க வேண்டியது.

குணம், நடக்கை, வார்த்தை ஆகிய இவை ஒரு மனுஷ விருட்சத்தின் புஷ்பங்களாயும் கனிகளாயுமிருக்கின்றன. ''அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்''[2] என்று இரக்ஷகர் சொல்லியிருக்கிறார். சந்தனம், லவங்கம்,

---

[1] 1 கொ. 4:10-13. [2] மத். 7:20

மருக்கொளுந்து, மல்லிகை, முல்லை, ரோஜா முதலியவை தம் இயல்பிலே வாசனை பொருந்தியதாயிருக்கின்றன. தேவபணி விடைக்காரன் தன் இயற்கையிலே குணசாலியும், நல் நடக்கையும் நல் வார்த்தையுமுள்ளவனாயிருக்க வேண்டும். அவர்கள் பொறுமையிலும், கற்பிலும், சாந்தத்திலும், பரிசுத்த ஆவியிலும், மாயமற்ற அன்பிலும், கனத்திலும், கனவீனத்திலும், துர்க்கீர்த்தியிலும், நற்கீர்த்தியிலும், எத்தரென்னப்பட்டாலும், நிஜஸ்தராகவும், தரித்திரர் என்னப்பட்டாலும் எல்லாரையும் ஐசுவரியவான்களாக்குகிறவர்களாயும் தங்களை விளங்கப் பண்ண வேண்டும். பரி: பவுலின் தேவஊழியம் இம்மாதிரியாகவே இருந்ததென்று அவரே அறிவித்திருக்கிறார்.[1] அவன் குணத்திலும், நடக்கையிலும், பேச்சிலும் மற்றவர்களுக்கு வழி காட்டும் வெளிச்சமும், சாரமேற்றும் உப்புமாயிருக்க வேண்டும்.[2]

3. **உன் சொந்தக் குடும்பத்தைக் குறித்து எச்சரிக்கையாயிரு.** இங்கிலாந்து திருச்சபையானது ரோமைச் சபையைப் போல குருக்கள் விவாகம் செய்யக்கூடாதென்று கட்டாயம் செய்யாமல், தங்களுக்கு இஷ்டமானால், குடும்ப சகிதமாயிருந்து, பூர்வ ஆசாரியரைப்போல திருப்பணி விடைகளை நிறைவேற்றிவர இடங்கொடுக்கிறது. ஒரு குருவின் குடும்ப ஜீவியம், அவருடைய சபை ஜீவியத்துக்கு அச்சாரம் போலிருக்கிறது. ஆதலால் அவரவர் தங்கள் மனைவி மக்களை நடத்தும் விஷயத்திலும், வீட்டுக்குள் பக்திவிருத்தியை வளர்க்கும் விஷயத்திலும் எச்சரிக்கையாயிருக்க வேண்டியது. நீங்கள் இன்னும் கொஞ்சநேரத்தில், உங்கள் நடக்கையையும் உங்கள் வீட்டாருடைய நடக்கையையும், கிறிஸ்துவின் உபதேசத்துக்கு ஏற்றதாகச் சீர்திருத்தவும்.... கிறிஸ்துவின் மந்தைக்கு நன்மாதிரிகளாயிருக்கவும் ஜாக்கிரதையாய் நடந்துகொள்வோம் என்று வாக்குக் கொடுக்கப் போகிறீர்கள்.[3] இந்த வாக்கின் பொறுப்பு உங்கள்

[1] 2 கொ. 6:3-10. [2]மத். 5:14,13. [3]குருப்பட்ட ஆராதனை

மேலிருக்கிறதென்று நாடோறும் எண்ணிக்கொள்ளுங்கள். நீதி மானாகிய லோத்தின் மனைவி உலக சிந்தையால் மாண்டாள்.[1] நல்ல ஏலியின் மக்கள் சீர்கெட்டவர்களாய் வளர்ந்து தேவசாபத் துக்குட்பட்டார்கள்.[2] இதின் சம்பந்தமாக பரி. பவுல் சொல்லும் வாசகங்களை நினைப்பூட்டுகிறேன். ''ஒருவன் தன் சொந்தக் குடும்பத்தை நடத்த அறியாதிருந்தால் தேவனுடைய சபையை எப்படி விசாரிப்பான்'' என்றும்;[3] ''ஒருவன் தன் சொந்த ஜனங்களையும் விசேஷமாகத் தன் வீட்டாரையும் விசாரியாமற் போனால், அவன் விசுவாசத்தை மறுதலிக்கிறவனும் அவிசு வாசியிலும் கெட்டவனுமாயிருப்பான்.''[4] என்றும் சொல்லி யிருக்கிறார். ஆதலால் உங்கள் சொந்தக் குடும்பத்தைக் குறித் தும் எச்சரிக்கையாயிருங்கள்.

4. **உன்னைக்குறித்து எச்சரிக்கையாயிரு** என்பதில் அவ னுடைய **ஊழியமும்** அடங்கியிருக்கிறது. தேவபணிவிடைக்காரன் தன் **ஊழியத்தைக்குறித்தும்** எச்சரிக்கையாயிருக்க வேண்டி யது. இந்த ஊழியத்தை பரி. பவுல் ''ஆவிக்குரிய ஊழியம்'' என்றும், ''நீதியைக் கொடுக்கும் ஊழியம்'', ''நிலைத்திருக்கும் ஊழியம்'' என்றும்; ''அதிக மகிமையுள்ள ஊழியம்'' என்றும்[5] ''ஒப்புரவாக்குதலின் ஊழியம்'' என்றும்;[6] ''சுவிசேஷ ஊழியம்''[7] என்றும்; ''கனமான ஊழியம்'' என்றும்;[8] அழைத்து வருகிறார். இதை அவர் ''கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிடத் தில் பெற்றதாக'' அறிவிக்கிறார்.[9] இந்த ஊழியத்தை இப்படியே மதித்து நிறைவேற்றிவர வேண்டியது. பரி. பவுல் தீமோத்தேயு வைப் பார்த்து, ''வாசிக்கிறதிலும், புத்திசொல்லுகிறதிலும், உப தேசிக்கிறதிலும் ஜாக்கிரதையாயிரு''.... ''நீ தேறுகிறது யாவருக் கும் விளங்கும்படி இவைகளையே சிந்தித்து, இவைகளிலே நிலைத்திரு''[10] என்கிறார். இன்று இந்தப் போதனை உங்களுக்குச்

---

[1] ஆதி. 19:26. [2] 1 சாமு. 2:12. [3] 1 தீமோ. 3:5. [4] 1 தீமோ. 5:8. [5] 2 கொ. 3:6,9,11. [6] 2 கொ. 5:18. [7] 2 கொ. 8:18. [8] எபி. 5:4. [9] அப். 20:24 [10] 1 தீமோ. 4:13, 14, 15

சொல்லப்படுகிறதென்று நினைத்து உங்களுக்குரிய பல ஊழியங்களை நிறைவேற்றி வருவீர்களாக. நாம் நமக்குச் சொந்தமானவர்களுமல்ல, நமது ஊழியம் நம்முடையதுமல்ல. உத்தம பணிவிடைக்காரன் தேவனுடைய மனுஷன்; அவனுடைய ஊழியமும் தேவனுடையது. இது நமக்கு இரக்கமாய்க் கொடுக்கப்படுகிற தாலந்து, இதைக் கொண்டு ஆதாயம் செய்யவேண்டுமேயன்றி புதைக்கலாகாது.[1] தேவஊழியன் வேறு இரண்டாம் எஜமானனுக்கு ஊழியஞ்செய்யக் கூடாது.[2] இந்த ஊழியம் குற்றப்படாதபடி எச்சரிக்கையாயிருக்க வேண்டும்.[3] மனுஷருக்குப் பிரியமாயிருக்க விரும்புகிறவர்களாகப் பார்வைக்கு ஊழியம் செய்யலாகாது.[4] தகப்பனுக்குப் பிள்ளை ஊழியம் செய்வது போல மனப்பூர்வமாகச் செய்யவேண்டும்.[5] "நீ கர்த்தரிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றும்படி கவனமாயிருப்பாயாக"[6] என்று பரி. பவுல் அர்கிப்புக்குச் சொல்லியனுப்பினார். இதே எச்சரிப்பை தேவாவியானவர் இன்று உங்களுக்குக் கூறி அறிவிக்கிறதாக எண்ணிக்கொள்ளுங்கள்.

II. **உபதேசத்தைக் குறித்து எச்சரிக்கையாயிரு.** ஒவ்வொரு மார்க்கங்களுக்கும் உபதேசங்களுண்டு. அவ்வுபதேசங்கள் மனுஷருடைய கற்பனைகளாயிருக்கும். யூதச் சபைக்குள் இப்படிப்பட்ட உபதேசம் வழங்கி வந்தன.[7] கிறிஸ்துசபையின் உபதேசங்களோ தேவனுடைய உபதேசங்கள். அவைகளை முதலாவது கிறிஸ்து பிரஸ்தாபித்தார். அதைக் கேட்டவர்கள் இது "புதிய உபதேசம்"[8] என்றும் "கடினமான உபதேசம்"[9] என்றும் சொன்ன பொழுது, இயேசு நேராக "என் உபதேசம் என்னுடையதாயிராமல் என்னை அனுப்பினவருடையதாயிருக்கிறது"[10] என்று சொன்னார். மெய்யாகவே அவை தேவனுடைய உபதேசமாயும் கிறிஸ்துவின் உபதேசமாயுமிருக்கின்றன.[11] அப்போஸ்தலரும், அவர்களுக்குப் பின்னடியாரும்

---

[1] மத். 25:25. [2] மத். 6:24. [3] 2 கொ. 6:3. [4] எபே. 6:8. [5] பிலி 2:22. [6] கொலோ. 4:17. [7] மத். 15:9. மாற். 7:7. [8] மாற். 1:27 [9] யோவா. 6:60 [10] யோவா. 7:16 [11] தீத். 2:9; 2 யோ. 9வ.

அதே உபதேசத்தைத் தொன்று தொட்டு உபதேசித்து வர வேண்டியவர்களாயிருந்தார்கள். ஆனால் அப்போஸ்தலர் கால முதலே சுத்தமான உபதேசத்தைக் கெடுத்தும், மாற்றியும் பலர் போதித்து வந்தார்கள் என்பதை அறிவோம். காலஞ் செல்லச் செல்ல திருச்சபையின் பல பாகமாகிய எருசலேம், அலெக்சந்திரியா, அந்தியோகியா சபைகள் நடக்கை, சடங்கு, ஆசாரங்களைக்குறித்து மாத்திரமல்ல, விசுவாசிக்க வேண்டியவைகளைக் குறித்தும் தவறிப்போனது போல ரோமைச் சபையும் தவறிப் போயிருக்கிறது.[1] இங்கிலாந்து சபைப் பாகமோ, ரோமையுடன் சம்பந்தப்பட்டிருந்த காலத்தில் அதின்மேல் படிந்த எரிமலையின் சாம்பலையும், டைபிரீஸ் நதியின் சேற்றையும் சீர்திருத்தலின் காலத்தில் கழுவிக்கொண்டு, சுத்த சுவிசேஷத்தின் உடையைத் தரித்து நிற்கின்றது. இதின் உபதேசங்களையே நீங்கள் உங்கள் போதனையிலும் சாதனையிலும் நிலைநிறுத்தி வர எச்சரிக்கையாயிருக்க வேண்டியது.

திருச்சபையின் சரித்திரத்தைக் கவனிக்குங்கால் இந்த எச்சரிப்பு அவசியந்தான். சாத்தான் தேவசத்தியங்களின் சத்துருவாயிருக்கிறான். இவன் அந்தந்தக் காலத்திலிருந்து சத்திய உபதேசங்களை நிலைநிறுத்திவந்த வேதியரிலும், சாஸ்திரிகளிலும் அதிக வயசும் அனுபோகமுமுள்ளவன். ''அவனுடைய ஆழங்கள் அளவிடக்கூடாதவைகள்.''[2] பரிசுத்த ஆவியானவர் அந்த ஆழங்களிலும் பெரிதான தேவனுடைய ஆழங்களையும் ஆராயக்கூடியவராயிருந்து, [3]கிறிஸ்துவின் தாசரைப் போதித்து வருவது மெய்யானாலும், அவர் மனுஷ இருதயத்தாலும், நாவாலும், அவைகளை இவ்வுலகத்துக்குப் பிரசித்தப்படுத்தும் வழியில், சத்துருவாகிய சாத்தான் குறுக்கிட்டு, ஊடேஊடே பொய்களைப் பிணைத்துவிடுகிறான். ஆகவே கிறிஸ்து சபைப் போதகர் பலர் வாயிலிருந்து வந்ததுபோல, ஒரு காலத்தில் 'ஆரோக்கியமான', உபதேசங்களும், மறுகாலத்தில் 'செவித்

---

[1] 19-ஆம் பிரமாணம். [2] வெளி. 2:24. [3] 1 கொ. 2:10.

தினவான', உபதேசங்களும் புறப்படுகின்றன.[1] அவர்களில் சிலரைச் சாத்தான் யோசபாத் இராஜாவின் காலத்து தீர்க்கதரிசிகளைப்போல பொய்யின் ஆவிகளாக்கி விடுகிறான்.[2] மனுஷர் நித்திரை பண்ணுகையில், சத்துரு வந்து கோதுமையுடன் களைகளை விதைக்கிறான்.[3] என்று நமது இரக்ஷகர் சொன்னார். இவை இரண்டும் அறுப்புக்காலம் வரையும் வளர விடப்பட்டிருக்கின்றன.

இந்த உபதேசங்கள் ''மனுஷ கற்பனை',[4] என்றும் ''பரிசேயர் சதுசேயரின் உபதேசம்''[5] என்றும்; ''வேற்றுமையான உபதேசம்''[6] என்றும்; ''பிசாசுக்களின் உபதேசம்''[7] என்றும் இப்படிப் பலவாறாக அழைக்கப்படுகின்றன. இவைகளைப் போதித்த ஆட்களை பரி. பவுல் ''கள்ள அப்போஸ்தலர்''[8] என்றும், ''கள்ளச் சகோதரர்''[9] என்றும்; ''நாய்கள், பொல்லாத வேலையாட்கள், சுன்னத்துக்காரர்''[10] என்றும்; ''அப்போஸ்தலரின் வேஷத்தைத் தரித்தவர்கள்''[11] என்றும் அழைக்கிறார். பரி. பேதுரு ''கள்ளப்போதகர்''[12] என்றும்; பரி. யோவான் ''கள்ளத் தீர்க்கதரிசிகள்''[13] ''பொய்யர்''[14] என்றும் அழைத்திருக்கிறார். இப்படிப்பட்ட மோசக்காரர் வருவார்கள் என்பதை கிறிஸ்து அறிந்து, எச்சரித்துமிருக்கிறார்.[15] எக்காலத்திலும் அவர்கள் சந்ததியார், அங்கங்கே திருச்சபையிலிருந்தே வருகிறார்கள். அதுமுதல் இதுவரையுமுள்ள சரித்திரங்களால் சுமார் 350-க்கு அதிகமான விபரீத உபதேசக் கூட்டத்தார் சபைகளுக்குள்ளிருந்து எழும்பி, சில அழிந்தும், சில மாறுதலடைந்தும், சில இன்னுமிருந்தும் வருகின்றன. பிரித்தானிய ராஜ்யத்தில் மாத்திரம் தற்காலத்தில் 150 பிரிவினையான உபதேசக் கூட்டத்தார் இருக்கிறதாக ஒருவர் கணக்கிட்டிருக்கிறார்.

---

[1] எண். 24:3-9; வெளி. 2:14. [2] 1 இரா. 22:22 [3] மத். 13:25. [4] மத். 15:9. [5] மத். 16:12. [6] 1 தீமோ. 1:3. [7] 1 தீமோ. 4:1; [8] 2 கொ. 11:13, [9] கலா. 2:4 ; 2 கொரி. 11:26 [10] பிலி. 3:2. [11] வெளி. 2:2. [12] 2 பேது. 2:1. [13] 2 பேது. 2:1. [14] மத். 24:24. [15] மத். 7:15.

கிறிஸ்து சபைக்குள் எழும்பின பல வேற்றுமையான உபதேசங்களில் சிலவற்றை அறிந்துகொள்வது நலமாயிருக்கும்:—

**ஆபேலியர்.** புத்திர சந்தானம் ஜன்மப்பாவத்தை விருத்தி பண்ணுமாதலால் அது ஆகாது என்றார்கள். (4 நூ.)

**ஆதாமியர்.** உடை கட்டாமல் ஜீவிப்பதே கிறிஸ்து மார்க்கத்தின் பூரண பக்திநிலை என்றார்கள். (12 நூ.)

**அலஸ்கானர்.** ஞானஸ்நானம் வேண்டியதில்லை என்றார்கள். (16 நூ.)

**அல்மாரிசியர்.** பிதாவின் காலம் மோசேயோடும், குமாரன் காலம் 12-ஆம் நூற்றாண்டோடும் முடிந்துவிட்டது; அதின்பின் பரிசுத்த ஆவியின் காலம், இக்காலத்தில் குருக்கள், சாக்கிரமெந்துகள், ஆராதனைகள் வேண்டியதில்லை என்றார்கள். (13 நூ.)

**அகோனிசித்தர்.** நின்று ஜெபித்தால் இரக்ஷிப்புக் கிடைக்கும் என்றார்கள். (7 நூ.)

**அகினியானர்.** மாம்சம் புசித்தலும், விவாக நிலைமையும் சாத்தானின் உபதேசங்கள் என்றார்கள். (7 நூ.)

**அமஸதோபிலானர்.** நற்கிரியைகளால் பிரயோசனமில்லாதது மாத்திரமல்ல, அவை இரக்ஷிப்பையும் தடுத்துவிடுகிறது என்றார்கள். (16 நூ.)

**அனபாப்திஸ்தர்.** குழந்தை ஞானஸ்நானம் ஆகாது; மறு ஞானஸ்நானம் பெறவேண்டும் என்றார்கள். (16 நூ.)

**அந்திபாப்திஸ்துகள்.** கிறிஸ்தவர்களான பெற்றோருக்குப் பிறந்த பிள்ளைகளுக்கு ஞானஸ்நானம் வேண்டியதில்லை என்றார்கள். (16 நூ.)

**அந்திநோமியர்.** புதிய ஏற்பாடு போதும், பழைய ஏற்பாடு வேண்டியதில்லை என்றார்கள். (16 நூ).

**அக்குவாரியர்.** நற்கருணையில் திராட்சரசத்துக்குப் பதிலாகத் தண்ணீரை உபயோகிக்க வேண்டும் என்றார்கள்.

**ஆர்ணால்டியர்.** பரி. : இராப்போசனமும் ஞானஸ்நானமும் வேண்டியதில்லை என்றார்கள். (12 நூ.)

**அப்தோரியர்.** நற்கருணையில் ரொட்டியும் பாலும் கொடுக்கவேண்டும் என்றார்கள். (2 நூ.)

**அஸ்காடொரியர்.** ஆலயத்தில் திராட்சரசத் துருத்திகளைக் கொண்டுவந்து குடித்துக் கூத்தாடி வந்தார்கள். (2 நூ.)

**பெத்லகேமியர்.** சாஸ்திரிகளின் சங்கத்தார் என்று காட்டும்படி ஐந்து கவருள்ள நக்ஷத்திர சின்னத்தைச் சிவப்புத் துணியில் வெட்டித் தைத்துக்கொள்ள வேண்டும் என்றார்கள் (13 நூ.)

**வெள்ளைச் சகோதரர்.** எப்போதும் வெள்ளை வஸ்திரம் தரிப்பது உத்தம பக்தியின் லட்சணம் என்று போதித்து அப்படிச் செய்து வந்தார்கள். (15 நூ.)

**கூத்துக்காரர்.** சோர்ந்து விழும் வரையும் கூத்தாடி இரக்ஷிப்பின் ஆனந்தத்தைக் காட்டுவதே மெய்பக்தி என்றார்கள். (14 நூ.)

**தீர்க்கதரிசிகள்.** வலிப்பு வந்து, கூத்தாடி சோர்ந்து விழுந்து மோட்சத்தையும் தூதரையும் கண்டோம் என்பதே பூரண பக்தி நிலை என்றார்கள். (17 நூ.)

**பாசஜீனியர்.** கிறிஸ்தவர்களும் விருத்தசேதனம் பெற வேண்டுமென்றார்கள். (12 நூ.)

**பிற்றாபிஷீனர்.** கோவில்களே ஆகாது கட்டின கோவில் களை இடிக்க வேண்டுமென்றார்கள். (12 நூ.)

**சாக்கோவோரியர்.** உத்தம கிறிஸ்தவர்கள் நல்ல உடைகளை உடுத்தாமல் இரட்டை உடுத்தி ஜீவிக்க வேண்டுமென்று போதித்து அப்படியே செய்து வந்தார்கள். (4 நூ.)

இவ்வித வேற்றுமையான உபதேசங்களின் அம்சங்கள் காலாகாலங்களில் எழும்பலாம். இந்த விஷக்காற்றுகள் உங்கள் மந்தைக்குள் அடித்து, ஆடுகளும் குட்டிகளும் நோய்படாதபடி பார்த்துக்கொள்வது உங்கள் கடமை. நமக்கு ஒப்புவிக்கப்பட் டிருக்கிற உபதேசமோ, ''தேவனாலுண்டாயிருக்கிற''[1] உபதேச மாயும்; ''கிறிஸ்துவின் உபதேசங்களாயும்''[2] அப்போஸ்தல ருடைய உபதேசமாயும்;[3] சிலுவையின் உபதேசமாயும்;[4] ஒப்புரவாக்குதலின் உபதேசமாயும்;[5] ஆரோக்கியமான உபதேச மாயும்;[6] தேவபக்திக்கேற்ற உபதேசமாயும்[7] இருக்கின்றன. இவையனைத்தும் திருவசனமாகிய ஞானப்பாலும் தெளிதே னும் கலந்த திவ்ய மன்னாவாயிருக்கிறது.[8]

நான் முன் சொன்ன வேற்றுமையான உபதேசங்கள், தங்கள் காலத்தில் பக்தியில் சிறந்த சில ஆண்களாலும் பெண்களாலும் சபைக்குள் நுழைந்தன. இப்படிப்பட்டவர்களே கள்ள உபதேசத் தின் பொக்கிஷக்காரராயிருக்கும்படி சாத்தான் வகைபண்ணிக் கொண்டான். இவர்கள் வேதவசனங்களைத் தங்கள் இஷ்டம் போல விஸ்தரித்து வந்தார்கள். இக்காலத்திலும், இனிவருங் காலத்திலும் அப்படியே அவன் பக்தரைத் தன் அம்பிராத்தூணி களாகப் பிரயோகிக்கக்கூடும். அச்சமயத்தில் பரி. பவுல் கலாத்தி யரைப்பார்த்து, ''நாங்கள் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத் தையல்லாமல், நாங்களாவது, வானத்திலிருந்து வருகிற ஒரு

[1] யோவா. 7:16, [2] 2 யோ. 9 வ. [3] அப். 2:42. [4] 1 கொ.1:18. [5] 2 கொ. 5:19. [6] 1 தீமோ 1:11. [7] 1 தீமோ. 6:3 [8] 1 பே. 2:3; சங். 19:10.

தூதனாவது வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால், அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன்''[1] என்று சொன்ன வாசகம் நமது மனதை உணர்த்துவதாக.

திருநெல்வேலிச் சபை விபரீத போதனைகளுக்கு விலகி இருக்கிறதுமில்லை. பிரகாசபுரம் திசையில் பிரபல்லியமான விபரீத போதனை, சுமார் 45 வருஷங்களாகியும் இன்னும் முற்றிலும் ஒழிந்துபோகக் காணோம். காலத்தின்படி இந்த நூற்றாண்டில் சுமார் இருபது வருஷத்துக்கொருதரம் திருநெல்வேலிச் சபைகளில் வேற்றுமையான உபதேசமாகிய நச்சுக்காற்று வந்து, சபைகளைக் கெடுத்திருக்கின்றன. 1860-61-ஆம் வருஷம்போல் ஆவியின் எழுப்புதல் என்றபேரால், பல கள்ளப் போதனைகளும் அபிப்பிராயங்களும் எழும்பி சபைகளை நஷ்டப் படுத்தின. 1880-81-ஆம் வருஷம்போல கிறிஸ்துவின் வருகையைப்பற்றி எழும்பின புசல்காற்று வல்லமையாய் வீசி பல இருதயங்களைக் கெடுத்த விஷயம் இன்னும் நமது ஞாபகத்திலிருக்கிறது. முந்தின நான்கு காலக்கணக்கின்படி 1900-91-ஆம் வருஷம்போல வேறொரு விதமான விஷமுள்ள உபதேசக் காற்று சபைகளை நஷ்டப்படுத்தினாலும் படுத்தலாம். இது தீர்க்கதரிசனமாயிராமல், காலக்கணக்கின்படி வரும் அபிப்பிராயமாக மாத்திரமிருக்கிறது. இமனேயு, பிலேத்து, அலெக்சாந்தர் முதலியவர்கள் தங்கள் விசுவாசக் கப்பலைச் சேதப்படுத்திக் கொண்டது போல உங்கள் சபையார் சேதப்படுத்திக் கொள்ளாமலும் அதைப் பாறையிடங்களிலும், சொரிமணலிலும், இருபுறமும் கடல்மோதும் இடத்திலேயும் கட்டவிடாமலும் எச்சரிக்கையாயிருப்பீர்களாக.[2] கிறிஸ்துமார்க்கத்தின் மூல உபதேசங்களையும்,[3] கடின உபதேசத்தையும்,[4] தேவபக்திக்குரிய இரகசியங்களையும்,[5] பரிசுத்த வேத எழுத்தின்படி போதித்துவர

---

[1] கலா. 1:7,9. [2] 1 தீமோ. 1:18,19;2 தீமோ. 2:17, 18; 4:14, 12, அப். 27: 17, 29, 41. [3] எபி. 6:1,2. [4] யோவா. 6:60. [5] 1 தீமோ. 3:16.

எச்சரிக்கையாயிருங்கள். உங்கள் 'திராட்சத்தோட்டங்களைக் கெடுக்கிற குழிநரிகளையும் சிறு நரிகளையும்... பிடியுங்கள்.'[1] உங்கள் திராட்சச்செடிகள் பூவும், பிஞ்சும், காயும், கனியுமா யிருக்கிறது; அதைக் காக்கும் காவலில் எச்சரிக்கையும் விழிப்புமா யிருங்கள். எல்லாவற்றுக்கும் மேலாக உங்கள் ஊழிய எல்லைக் குள் என்ன பஞ்சம் வந்தாலும் ''கர்த்தருடைய வசனம் கேட்கக் கிடையாத பஞ்சம்''[2] வராதபடி எச்சரிக்கையாயிருங்கள்.

III. **இவைகளிலே 'நிலைகொண்டிரு'** என்றும் பரி. பவுல் சொல்லுகிறார். அடுத்த நிருபத்தில் 'நீ கற்று நிச்சயித்துக் கொண்டவைகளில் நிலைத்திரு'[3] என்று மறுபடியும் கூறுகிறார். இது நமது ஜீவகாலம் முழுவதுக்குமுரிய மேலெழுத்து வாசகமா யிருக்க வேண்டியது. தேவபணிவிடைக்காரர் தங்கள் நற்குணத் திலும் சுத்தஉபதேசத்திலும் நிலைத்திராமல் காலத்துக்குக் காலம் தங்கள் உபதேசங்களை மாற்றியும், கூட்டியும் கெடுத்தும் போதித்து வருவதால் கர்த்தருடைய சபையின் வளர்ச்சியும் பலமும் குன்றிப்போகிறது. 'கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத் திராமல் மீறி நடக்கிற எவனும் தேவனையுடையவனல்ல'[4] என்று பரி. யோவான் தீர்க்கிறார். 'பலவிதமான அந்நிய போதனையில் அலைப்புண்டு திரியாதிருங்கள்',[5] என்று பரி. பவுல் சொல்லுகிறார். கிறிஸ்து சபைகளில் தற்காலமிருக்கும் பலவிதமான உபதேசப் பிரிவினைக் கூட்டங்களுக்குக் காரண மென்ன? அதின் குருக்களும் சபையும் அந்நியபோதனைகளால் அலைப்புண்டு திரிவதினாலேதான். நீங்கள் இன்னும் சற்றுநேரத் தில் செய்யும் பிரமாணங்களில், கிறிஸ்துவின் உபதேசங்களை யும், சாக்கிரமெந்துகளையும், சபை ஒழுங்குகளையும் (இங்கி லாந்து) சபை முறைப்படி எப்பொழுதும் கைக்கொள்ளவும், உங்கள் சபைகள் அதைக் காத்து நடக்கவும் பிரயாசப்படுவேன் என்று வாக்களிக்கப் போகிறீர்கள். தேவவசனத்துக்கு விரோத மான எந்தத் தப்பறைகளையும், விகற்பமான உபதேசங்களை யும் அகற்றித் தள்ளுவோம் என்றும் வாக்குக்கொடுக்கப் போகி றீர்கள். மரணபரியந்தம் உண்மையாயிருந்து இந்த வாக்கில்

---

[1] உன்ன. 2:15. [2] ஆமோஸ் 8:11. [3] 2 தீமோ. 3:14. [4] 2 யோ. 9 வ.
[5] எபி. 13:9.

நிலைத்திருந்து, நிறைவேற்றுங்கள். (ஆங்கிலேய) திருச்சபையின் ஐக்கியத்தைவிட்டுப் பிரியவும், ரோமை அல்லது வேறு சபைகளின் ஐக்கியத்தைச் சாரவும் ஏதுவான எந்தப் பிரயத்தனத்துக்கும் இடங்கொடாமல் 'பரிசுத்தவான்களுக்கு ஒரு விசை ஒப்புவிக்கப்பட்ட விசுவாசத்திலே'[1] நிலைத்திருங்கள்.

**இரண்டாவது பரி. பவுல் கூறும் வாழ்வு** 'இப்படிச் செய்வாயானால் உன்னையும் உன் உபதேசத்தைக் கேட்பவர்களையும் இரக்ஷித்துக் கொள்வாய்' என்கிறார்.

இதுதான் தேவபணிவிடைக்காரரின் வாழ்வும் சம்பளமுமாயிருக்கிறது. சுவிசேஷ ஊழியம் இரக்ஷிப்பின் ஊழியமாக மாத்திரமல்ல, இரக்ஷிக்கிற ஊழியமாயுமிருக்கிறது. சுவிசேஷகன் இரக்ஷிக்கிறவனாயிருக்கிறான். 'தப்பிப்போன மார்க்கத்திலிருந்து பாவியைத் திருப்புகிறவன் ஒரு ஆத்துமாவை மரணத்திலிருந்து இரக்ஷித்து, திரளான பாவங்களை மூடுவான்'[2] என்று பரி. யாக்கோபு சொல்லுகிறார். இயேசுவும் இரக்ஷகர், உத்தம குருவும் இரக்ஷகன்.

இரக்ஷிக்கும் வேலையைப் போல இன்பமான வேலை வேறுண்டோ? நோவா பேழையிலிருந்தும், லோத்து சோதோமிலிருந்தும் இரக்ஷிக்கப்பட்டது அற்ப வேலையோ? இஸ்ரவேலர் எகிப்திலிருந்து விடுதலைபெற்றதும், சாத்ராக் முதலியவர்கள் அக்கினியிலிருந்து இரக்ஷிக்கப்பட்டதும் எவ்வளவு இன்பமாயிருக்கிறது. இயேசு பாவிகளை இரக்ஷித்த வேலை அற்ப வேலையோ? இதின்பொருட்டே 'அதிசயமானவர், ஆலோசனைக்காரர், வல்லமையுள்ள ஆண்டவர், நித்திய பிதா, சமாதானப் பிரபு'[3] என்னும் சிறந்த நாமங்களைத் தரித்துக்கொண்டிருந்த தேவன், தமது சர்வ மகத்துவங்களுடன் இந்நாமங்களையும் களைந்து இயேசு-ரக்ஷகன் என்னும் நாமத்தைத் தரித்து,[4] இன்று போலொத்த ஒரு ஞாயிறில் கும்புகள்கூட, குருத்தோலைகள் வீச, ஒசன்னா என்னும் கீதங்கள் தொனிக்க, சாந்த இராஜராகக்

---

[1] யூதா 3 வ. [2] யாக். 5:20. [3] ஏசா. 9:6. [4] மத். 1:21.

கழுதை வாகனமேறி அப்பால் இரக்ஷண்ய அரசராக முட்கிரீட மணிந்து சிலுவையின்மேல் சிம்மாசனபதியானார். அந்த ஊழியத்தைச் சிரசுமேல் தாங்குகிறவர்களும், அவர்களால் இரக்ஷிக்கப்பட்ட சபையாரும் அவரைப் போல தங்கள் தங்கள் நிலைமையிலும் பணிவிடையிலும் இயேசுகளாய் இரக்ஷகர்களாயிருக்கிறார்கள்.

உத்தம போதகன் முதலாவது தன்னையே இரக்ஷித்துக் கொள்ளுகிறான். தன்னை இரக்ஷித்துக் கொள்ளாத அநேகர் தேவஊழியங்களைச் செய்யலாம். வைத்தியரிலும் நோயாளிகளுண்டு. பரி. பவுல் இந்தச் சத்தியத்தை உணர்ந்தவராய் ''மற்றவர்களுக்குப் பிரசங்கம்பண்ணுகிற நான்தானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு என் சரீரத்தை ஒடுக்குகிறேன்''[1] என்று சொன்னார்.

தன்னை இரக்ஷித்துக் கொள்ளுகிறவன் தன் மந்தையின் ஆடுகளையும் இரக்ஷித்துக் கொள்ளுகிறான். கிறிஸ்துவின் மந்தையைச் சேர்ந்த மேய்ப்பனுக்கும், ஆடுகளுக்கும் பல ஆபத்துக்கள் நேரிடுவதுண்டு. கெர்ச்சிக்கிற சிங்கமாகிய பிசாசு இன்னும் சாகவுமில்லை, அவனுக்குச் சாவுமில்லை. அவன் உயிரோடே புதைக்கப்பட வேண்டியவன்.[2] அவன் இத்தனை வருஷம் தேவனுடைய ஆடுகளைத் தின்றும் இன்னும் திருப்தியடையவில்லை. கொழுத்ததும் விழிப்புள்ளதுமான சில ஆடுகளை அவன் பிடிக்க இயலாதபோது, வேற்றுமையான உபதேசம் என்னும் காற்றை அந்த மந்தையின் மேல் வீசப்பண்ணி, அதை வியாதிப்படவும், தன் சுய போசனத்தை ஒறுக்கவும் செய்வதால், மெலியவைத்து, அது சோர்பிலிருக்கையில் தன்னிஷ்டம்போல் விழுங்கி வருகிறான். இப்படியே பக்திமான்கள் அநேகர் நஷ்டமடைந்து, தங்கள் மந்தையையும் நஷ்டப்படுத்துகிறார்கள்.

உத்தம ஊழியக்காரனோ தன் மந்தையை நன்றாய்க்காத்துக் கொள்ளுகிறான். இயேசு 'நானே நல்ல மேய்ப்பன்; நல்ல

---

[1] 1 கொ. 9:27. [2]வெளி. 20:1, 2.

மேய்ப்பன் ஆடுகளுக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிறான்; கள்ள மேய்ப்பனோ ஓடிப்போகிறான். அப்போது ஓநாய்கள் ஆடுகளைப் பீறிச் சிதறடிக்கும்'[1] என்கிறார். தாவீது என்னும் மேய்ப்பன் தன் மந்தையின் குட்டிகளைத் தூக்கும்படி ஒருதரம் வந்த கரடியையும், மறுதரம் வந்த சிங்கத்தையும் அடித்துக் கொன்று, தன்னையும் தன் மந்தையையும் இரக்ஷித்துக் கொண்டான்.[2] நாம் நமது மந்தையைப் பெருகச்செய்யும் விஷயத்தில் எத்தனாகிய யாக்கோபின் எத்துவாளித்தனங் களைப் பிரயோகிக்கலாகாது. அவன் தன்னயத்தைநாடி விபரீத மான முறைகளைக் கையாடினான்.[3] நாம் தன்னயத்தை நாடிப் பல உபதேசமாகிய குழப்பங்களை அவர்களுக்குமுன் போட லாகாது. ஏனெனில் நாம், நமது பிரதான மேய்ப்பர் வெளிப் படும் நாளில் பல நிறப்புள்ளியுள்ள ஆட்டுமந்தையைக் காட்ட வேண்டியவர்களாயிராமல் 'கறைதிரை முதலியவைகள் ஒன்று மில்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபை யாக'[4] நமது மந்தையைத் தேவனுக்குமுன் நிறுத்த வேண்டிய வர்களா யிருக்கிறோம். ஆதலால் மாயமான தாழ்மை,[5] மாய மான தந்திரம்,[6] கபடமுள்ள இருதயம்,[7] தேவபக்தியின் வேஷம்[8] முதலிய மோசமான களைகள் அவர்கள் மனதில் உண்டாகாதபடி உங்கள் ஊழியத்தால் அவர்களை இரக்ஷித்துக் கொள்ளுங்கள்.

எசேக்கியேலின் காலத்து தேவஊழியர் தங்கள் வசம் ஒப்புவிக்கப்பட்ட சபைகளை இரக்ஷிக்கிறவர்களாயிராமல் பட்சிக்கிறவர்களாயும் சிதறடிக்கிறவர்களாயுமிருந்தார்கள்.[9] கிறிஸ்து சபையின் ஊழியரோ தங்கள் மந்தையின் பாலையுண் ணப் பாத்தியப்பட்டவர்களாயினும், தங்கள் மந்தையைக் கிறிஸ்து வின் பாடுகளாகிய கல்வாரி மலைப்புல்லுகளாலும், பரிசுத்த ஆவியாகிய ஜீவ நதியாலும் போஷித்து, அவர்கள் கிறிஸ்து

---

[1] யோவா. 10:11, 12, 15. [2] 1 சாமு. 17:34, 35. [3] ஆதி. 30:37-40. [4]எபே. 5:27. [5]கொலோ 2:23. [6]கொலோ. 2:8. [7]அப். 2:46. [8]2 தீமோ. 3:5. [9]எசே. 34:2-10.

வினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும் வரையும்'[1] வளர்த்து 'பலத்தின்மேல் பலமடைந்து தேவ சந்நிதியில் காணப்படும்படி'[2] செய்ய வேண்டியது.

கடைசியாகச் சகோதரரே பிரசங்க வாக்கியத்தில் **'எச்சரிக்கையாயிருங்கள்'** என்று வரும்பதத்தை உங்கள் ஊழியத்தில் மறக்க வேண்டாம். இது நமது இரக்ஷகருக்கும் பரி. பவுலுக்கும் பிரியமான வார்த்தையாயிருக்கிறது. அவசரமான சமயங்களில் இந்தப் பதத்தை வழங்குகிறார்கள். இது ஒரு சிறிய கட்டளை யாக மாத்திரமல்ல, கடிந்து கொள்ளுதலுடன் கலந்த கட்டளை யாயுமிருக்கிறது. இவ்வார்த்தையை நமது ஆண்டவர், பதி மூன்று வெவ்வேறு சமயங்களில் வழங்கியிருக்கிறார். அதில் தமது ஊழியத்தின் சம்பந்தமாயும் உபதேசத்தின் சம்பந்தமாயும் ஏழு தரம் சொல்லுகிறார்[3] பரி: பவுல் இந்த வார்த்தையைப் பதினெட்டுச் சமயங்களில் உபயோகிக்கிறார். அதில் ஏழு தடவை ஊழியத்தின் சம்பந்தமாயும், உபதேசத்தின் சம்பந்தமா யும் வழங்கியிருக்கிறார்.[4] இந்த எச்சரிப்புகளின் மொத்தமெல் லாங்கூடி, உன்னையும் உன் உபதேசத்தையுங் குறித்து எச்ச ரிக்கையாயிரு. உன் மந்தையைக் குறித்து எச்சரிக்கையாயிரு, உன் மந்தையைக் கலைக்கிறவர்களையும், கொள்ளைகொண்டு போகிறவர்களையும் குறித்து எச்சரிக்கையாயிரு என்பதுதான்.

தாவீது தன் குமாரனாகிய சாலொமோனைப் பார்த்து, 'இப்போதும் எச்சரிக்கையாயிரு; பரிசுத்த ஸ்தலமாக ஒரு ஆலயத்தைக் கட்டுவதற்குக் கர்த்தர் உன்னைத் தெரிந்து கொண் டார்'[5] என்று சொன்னான். சகோதரரே, நீங்களும் நானும் கிறிஸ்துவாகிய அஸ்திபாரத்தின்மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு கர்த்தருக்குள் பரிசுத்த ஆலய மாய்க் கட்டப்படுவதற்குத்[6] தெரிந்து கொள்ளப்பட்டிருக் கிறோம். எச்சரிக்கையுடன் அந்தப் பரிசுத்த கட்டடத்தின்

---

[1] எபே. 4:11. [2] சங். 84:7. [3] மத். 7:15; 10:17; 16:6; 24:4. மாற். 12:40; லூக். 11:35; 17:3. [4] அப். 20:28; உரோ. 16:17; பிலி. 3:2; கொலோ. 2:8; 2 பேது. 3:17; கலா. 5:15; 1 தீமோ. 4:16. [5] 1 நாளா. 28:10. [6] எபே. 2:20.

வேலையை நடத்திவருவோமாக. மனுஷர் செய்யச் சொல்லும் *மாதிரியின்படியல்ல, கர்த்தரும்* அவருடைய அப்போஸ்தலரும் காட்டிய மாதிரியின்படி அந்த ஆலயத்தைக் கட்டிவருவோமாக. மோசே கூடாரத்தை உண்டுபண்ணுகையில், மலையிலே உனக்குக் காண்பிக்கப்பட்ட மாதிரியின்படியே நீ எல்லாவற்றையும் செய்ய எச்சரிக்கையாயிரு'[1] என்று சொல்லப்பட்டது. கிறிஸ்துவாகிய ஒரே அஸ்திபாரத்தின்மேல் அவரவர் கட்டுகிற விதத்தைக் குறித்து எச்சரிக்கையாயிருக்க வேண்டியது. அந்த அஸ்திபாரத்தின்மேல், மரம் புல் வைக்கோல்களால் அல்ல, பொன் வெள்ளி விலையேறப்பெற்ற கல் இவைபோன்ற[2] சிறந்த தளவாடங்களாகிய உபதேசங்களால் நமது ஆவிக்குரிய மாளிகையை எடுப்பிப்போமாக. நமது கட்டட சம்பந்தமான 'ஒருவனும் தேவனுடைய கிருபையை இழந்துபோகாதபடிக்கும், யாதொரு கசப்பான வேர் (விஷப்பூண்டு) முளைத்தெழும்பி கலக்கமுண்டாக்குகிறதினால் அநேகர் தீட்டுப்படாத படிக்கும்... எச்சரிக்கையாயிருப்போமாக'.[3]

இந்த எச்சரிப்பின் பிரகாரம் நாம் நடந்துவரும்படி கிறிஸ்துவை நமது அரசனாக மனதில் கொலுவேற்றுவதே சரியான வழியாயிருக்கிறது. இன்றுமுதல் சிலநாட்களாய் அவர் நமது இரக்ஷண்ய அரசராக விளங்கின வரலாற்றையே தியானிப்போம். இன்று கோவேறு கழுதையின்மேல் சாந்த இராஜாவாய் விளங்குகிறவர்[4] பஸ்காபந்தியில் தாழ்மை இராஜாவாயும்[5] பிலாத்துவின் அரண்மனையில் பொறுமை இராஜாவாயும்,[6] சிலுவையின்மேல் அன்பின் இராஜாவாயும்,[7] விளங்கிக் கடைசியாக ஈஸ்தர் திருநாளில் மரணத்தையும் பாதாளத்தையும் ஜெயித்து வெற்றி சிறந்த நித்திய இராஜாவாக[8] விளங்குவதைத் தியானிப்போம். இவரை அவரவர் தன் சொந்த இராஜாவாக இருதயங்களில் முடிசூட்டிக் கொலுவேற்றி, இவருடைய சித்தத்

---

[1]எபி. 8:5. [2]1 கொ. 3:10, 11,12. [3]எபி. 12:15, 16. [4]மத். 21:4. [5]யோவா. 13:4, 5. [6]1 பே. 2:23. [7]லூக். 23:34. [8]வெளி. 1:18.

தின்படி நமது ஊழியங்களை நிறைவேற்றும்போது நாமும் வாழுவோம், நமது உபதேசமும் பழுதுபடாது; நமது உபதேசத்தைக் கேட்பவர்களும் ஆத்தும வாழ்வுகளை அடைவார்கள்.

'உன்னைக் குறித்தும், உபதேசத்தைக் குறித்தும் எச்சரிக்கையாயிரு; இவைகளிலே நிலைகொண்டிரு. இப்படிச் செய்வாயானால் உன்னையும், உபதேசத்தைக் கேட்பவர்களையும் இரக்ஷித்துக் கொள்வாய்.'

# 7-ஆம் அதிகாரம்

## அவர் எழுதின புஸ்தகங்கள்

கிறிஸ்தவர், இந்துக்கள், மகம்மதியர் யாவருக்கும் பிரயோசனமாக சீரிய செந்தமிழில் லேசாய் விளங்கத்தக்கதாய் சொற்சுவையும் பொருட்சுவையும் பொருந்தி வாசிக்கிறவர்களின் மனதைக் கவர்ந்து கொள்ளத்தக்கதாய் இவர் எழுதிய பிரபந்தங்கள் அநேகம். பொறுப்பான அநேக வேலைகளுடன் யாவரும் வியக்கத்தக்க விதமாய் இத்தனை பிரபந்தங்களை எவ்விதமாய் எழுதி முடித்தாரென்று அநேகர் ஆச்சரியத்துடன் கேட்கிறார்கள். இவர் உயர்ந்த சர்வகலாசாலைகளில் வாசித்தவருமல்ல, தமக்குக் கையளிக்கப்பட்ட வேலையை அரை குறையாய்ச் செய்கிறவருமல்ல. புஸ்தகங்களெழுதுவதில் சபைவேலையைக் கவனியாமல் விட்டார் என்று ஒருவர் சொல்லத்துணியார். இவரைப்பற்றி மேல் அதிகாரிகளுக்குள் நன்கு மதிப்பும் இவர் பேரில் சபையாருக்கிருந்த அன்பும் பாசமும் இவ்வளவவ்வள வென்று சொல்லுதலரிது. கனம் ஜே. பார்ட்டன் ஐயர் (Rev. J. Barton, M.A.) இவரைப்பற்றி எழுதியிருக்கிறதாவது:

"முன்பு சென்னபட்டணத்தில் மக்டானல்ட் ஐயர் கையின் கீழ் விசாரணை உபாத்தியாயராகவும் அதன்பின் உதகமண்டலத்தில் சுதேச குருவாகவுமிருந்த சாமுவேல் பவுல் ஐயர் சிறந்த உதவி விசாரணைத் தலைவராயிருக்கிறார். இப்பொழுது அவர் சுதேச சர்ச் கவுன்சலுக்குப் பிரதி அக்கிராசனாபதியாக நியமிக்கப்பட்டிருக்கிறார். இச்சில்லாவின் வடபாகத்திலுள்ள மிஷன் ஆசாமிகள் குருக்கள் முதலானவர்களுடைய வேலையை மேல் விசாரணை செய்து அதைப்பற்றி எனக்குத் தெரிவிப்பது அவருடையவேலை. சரியானபடி சொல்ல வேண்டுமானால் அவர் என்னுடைய கண்கள். நான் நம்பிக்கை

வைக்கக்கூடியவரும் அதிக சாமர்த்தியமுள்ளவருமான அப்பேர்ப்பட்ட ஒருவர் அந்த இடத்தில் இருக்கிறார் என்னும் எண்ணம் என் மனதுக்கு மிகுந்த ஆறுதலைக் கொடுக்கிறது.'' (Church Missionary Intelligencer and Record, July 1890, page 542.)

**''அவர்கள் நிமித்தம் தமிழ்ச்சபை முழுவதும் துக்கித்துப் புலம்புகிறதென்று சந்தேகமறச் சொல்லலாம்''** என்று திருநெல்வேலி சீ.எம்.எஸ். டிஸ்திரிக்ட் கவுன்சலின் முதலாளியான கார் ஐயர் (Rev. E.S. Carr, M.A.) பவுல் ஐயர் மரித்தவருஷ ரிப்போர்ட்டில் எழுதுகிறார்.

இவர் தமக்கடுத்த வேலைகளில் இவ்வளவு ஜாக்கிரதையுள்ளவராயிருந்தும், தமிழ்ச் சபையின் விர்த்தியைக் கருதி, தான் இளைப்பாறும் நேரங்களில், இவர் எழுதிய தியானங்களையும், சரித்திரங்களையும், கதைகளையும், மற்றும் பிரபந்தங்களையும் கவனிக்கும்போது இவர் இவ்விஷயத்தில் விசேஷித்த வரம் பெற்ற மகான் என்றே சொல்லவேண்டும். 'கிறிஸ்துவின் அன்பு என்னை நெருக்கி ஏவிற்று' என்று பரிசுத்த அப்போஸ்தலன் சொல்லுகிறது போல அந்த அன்பே பலவீனனாகிய தன்னையும் பலப்படுத்தினதென்று பவுல் ஐயர் சொல்லுகிறார். 'பூர்வகாலத்து பக்தர் பலவீனத்தில் பலங்கொண்டதும், யுத்தத்தில் வல்லவர்களானதும், நிந்தைகளையும், கட்டுகளையும், அடிகளையும், காவல்களையும் அநுபவித்ததும், கல்லெறிகளைத் தாங்கினதும், கடல் மோசங்களைத் தாண்டினதும் எதினாலே? இந்த அன்புக் கயிற்றுப் பலத்தால் அல்லவா? அவர்கள் குறைவையும், உபத்திரவத்தையும் துன்பத்தையும் அனுபவித்ததும், உலகவாழ்வை அவர்கள் புறக்கணித்ததும், வனாந்தரங்களிலேயும், மலைகளிலேயும், குகைகளிலேயும், பூமியின் வெடிப்புகளிலேயும் அவர்கள் ஒதுக்கிடம் தேடினதும் எதினாலே? இந்த அன்பின் கவர்ச்சியாலன்றோ?' (தெளிவான பிரசங்கங்கள். பக்கம் 89).

சுயமாய் புஸ்தகங்கள், சிறு சங்கியைகள், ஒற்றைத்தாள் பிரதிகள் எழுதுவதிலும், சன்மார்க்க புஸ்தக சங்கத்தார், கிறிஸ்து மத கல்வியபிவிர்த்தி சங்கத்தார், கிறிஸ்தவ கலைஞான சங்கத்

தார். சர்ச்சுமிஷன் சங்கத்தார் ஆகிய இவர்கள் வேளாவேளை களில் மொழிபெயர்க்கும்படி கொடுக்கும் புஸ்தகங்களைத் தமிழில் எழுதுவதிலும் இவருக்கு மிகுந்த அவாவும் விசேஷித்த வரமும் இருந்தது.

**'புகைவண்டி', 'தீபாவளி', 'மகாமகம்'** என்பன போன்ற இந்து மதஸ்தருக்கேற்ற பல ஒற்றைத்தாள் பிரதிகளையும், **'வாழைப்பழக் கதை', 'ஓநாய்க் கதை', 'இராட்சதன் கதை'** என்பன போன்ற சிறுவருக்கேற்ற அநேக சிறுகதை புஸ்தகங் களையும், **'வேதசித்தாந்தப் பிரமாணங்கள்', 'ஜெப புஸ்தக சரித்திரம்' 'ஜெப புஸ்தகத் திறவுகோல்'** முதலிய வேதபாட மாணாக்கருக்கேற்ற வியாக்கியான புஸ்தகங்களையும், வேத சரித்திர வரலாறுகளைத் தமிழ் கிறிஸ்தவர்கள் நன்றாய் வாசித்து அறிந்துகொள்ளும்படியான **'வேதபுருஷர்', 'வேதஸ்திரீகள்' 'இயேசு கிறிஸ்துவின் ஜீவியம்'** முதலிய வேதசரித்திரப் பிரபந்தங்களையும், **'குடும்ப ஜெபம்' 'துக்கசாகரத் தோணி', 'வியாதிப்படுக்கைத்தோழன்'** முதலிய குடும்ப பக்தி வளர்ச்சிக்கேற்ற புஸ்தகங்களையும், முப்பது லட்சம் தமிழ் முகம்மதியரின் இரட்சிப்பைக் கருதி எழுதிய **'பாவமில்லாத தீர்க்கதரிசி', 'இயேசுவையா, முகம்மதுவையா யாரை நம்பு வாய்?' 'இஸ்லாம்மார்க்கம்'** முதலிய முகம்மதியருக்கேற்ற புஸ்தகங்களையும், தமிழ் கிறிஸ்தவர்கள் வீடுகளில் வாசிக்கும் படியான **'பரதேசியின் மோட்சபிரயாணம்', சத்தியநாதன் அம்மாளுடைய 'சகுணா', 'கமலம்'** முதலிய கல்பனாலங்கா ரம் பொருந்திய பிரபந்தங்களையும், **'என் இராஜா', 'ராஜதயா ளம்', 'ராஜகட்டளை'** என்பன போன்ற பக்திக்குரிய அன்றா டக வாசிப்புக்கேற்ற தியான புஸ்தகங்களையும், ஒவ்வொரு கிறிஸ்தவனும் நமது அருமை இரட்சகருடைய அன்பின் ஆழம், நீளம், உயரம் இன்னதென்று ஒருவாறு அறியத்தக்க விதமாயும், 'பாதகர் மண்டலத்திலுள்ள படுபாவி'களுடைய கடின இருதயங்களை உடைக்கத்தக்கவிதமாயும், பக்திவிநயமா

யும், மன எழுப்புதலுக்கேற்ற விதமாயும் எழுதப்பட்டிருக்கும் **'ஆத்துமநேசரின் அங்கமகத்துவம்', 'தியான ஆலயம்' 'தியான சோலை'** முதலிய தியானப் புஸ்தகங்களையும், இன்னும் பற்பல விஷயங்களைப்பற்றி அவரால் எழுதப்பட்ட அநேக பிரபந்தங்களையும் பார்க்கும்போது, பவுல் ஐயர் மரித்தும் இன்னும் பேசுகிறார் என்று மெய்யாகவே சொல்லலாம். தமிழ் கிறிஸ்தவர்களுக்குள்ளே இவருடைய புஸ்தகமில்லாத வீட்டைக் காண்பதரிது. இவர் எழுதிய ஒவ்வொரு புஸ்தகத்தைப் பற்றியும் விவரித்துச் சொல்லப் புகுந்தால் அவருடைய சரித்திரத்தைக் காண்பிக்கும் இச்சிறு புஸ்தகம் வெகுவாய் விரிந்து போம்.

தானே சொந்தமாய் எழுதின புஸ்தகங்களில், **ஆத்துமநேசரின் அங்கமகத்துவம், தியான ஆலயம், தியான சோலை, இயேசுகிறிஸ்துவின் ஜீவியம், வேத ஸ்திரீகள், வேத புருஷர் (3 பாகங்கள்), தெளிவான பிரசங்கங்கள், ஜெபபுஸ்தக சரித்திரம், ஜெபபுஸ்தக திறவுகோல், வேத உதாரணத்துடன் வேதமார்க்கப் பிரமாணம், கூடாரமும் தேவாலயமும், வியாதிப் படுக்கைத் தோழன், துக்கசாகரத் தோணி** ஆகிய இவைகள் மிகவும் விசேஷித்தவைகள்.

இவர் மொழிபெயர்த்த ஏராளமான புத்தகங்களுள் **பரதேசியின் மோட்ச பிரயாணம், கமலம், சகுணா, இஸ்லாம் மார்க்கம், இங்கிலாந்து திருச்சபைச் சரித்திரம், என் இராஜன், இராஜதயாளம், இராஜகட்டளை, குடும்பஜெபம், ஜெஸிக்காளின் ஜெபம், ஆயாளும் துரைசானியும், காலை மணி, சிறுதலையணை, குழந்தை ஞானஸ்நானம், கர்த்தருடைய ஜெபப்பிரசங்கம்** ஆகிய இவை மிக்க அருமையானவை.

மேலும் மிஷன் கூட்டங்களில் இவர் அநேக அருமையான பிரபந்தங்கள் எழுதி வாசித்திருக்கிறார். அவைகளில்:—

1880-1890 வரையும் பத்துவருஷத்துக்குள்ள திருநெல்வேலி சர்ச்சுமிஷன் சபையின் ஏற்றத்தாழ்ச்சி, திருநெல்வேலி சபையின் சரித்திரம், சுயஆதரவு, சர்ச்சுமிஷன் முதலாம் நூற்றாண்டின் மரண சாசனம், தாலி, திருநெல்வேலி சபையில் ஜாதி வித்தியாசம், வடதிருநெல்வேலித் தேவரும் தேவதைகளும் ஆகிய இவைகள் வாசிப்பவருக்கு அறிவையும், உபதேசத்தையும் கொடுக்கத்தக்க சிறந்த உபந்நியாசங்கள்.

கடைசியாகக் கனம் மர்டாக் துரையவர்களின் விருப்பப்படி **'கிறிஸ்துவைப்போல் ஜீவித்தல்'** என்னும் பேருள்ள ஒரு அருமையான புஸ்தகத்தை சுயமாய் எழுத ஆரம்பித்தார். இதை எழுத சுமார் ஆறுமாதகாலமாய் அதற்கு வேண்டிய ஆதாரங்களைத் தேடி, அதன்பேரில் ஆழ்ந்தயோசனை செலுத்தியிருந்தார். ஆனால் அதை எழுத ஆரம்பித்தவுடனே திடீரென்று வியாதிப்பட்டு கர்த்தருடைய ராஜ்யத்துக்குள் பிரவேசித்தார். ஆரம்பித்த புஸ்தகம் முற்றுப்பெறாமல் மேசையின் மேல் விடப்பட்டிருந்தது.

இவர் எழுதிய புஸ்தகங்கள், திராக்ட்டுகள் முதலியவற்றின் ஜாபிதாவை இத்துடன் சேர்த்திருக்கிறோம்.

## 1. சுயமாய் எழுதின புஸ்தகங்கள்

| | |
|---|---|
| ஜெபபுஸ்தக சரித்திரம் | ... 1875 |
| ஜெபபுஸ்தகத் திறவுகோல் | ... 1876 |
| வேதசித்தாந்தப் பிரமாணங்கள் மேல் வியாக்கியானம் | ... 1877 |
| ஆத்துமநேசரின் அங்கமகத்துவம் | ... 1878 |
| வேதஸ்திரீகள் | ... 1879 |
| வேதசாஸ்திர வினாக்கள் | ... 1881 |
| வேதபுருஷர் Vol. I (பழைய ஏற்பாடு) | ... 1887 |
| வேதபுருஷர் Vol. II (பழைய ஏற்பாடு) | ... 1888 |

| | | |
|---|---|---|
| தேவாலயமும் கூடாரமும் | ... | 1888 |
| வேதபுருஷர் Vol. III (புதிய ஏற்பாடு) | ... | 1890 |
| தெளிவான பிரசங்கங்கள் | ... | 1891 |
| இயேசுகிறிஸ்துவின் ஜீவியம் | ... | 1894 |
| தியான சோலை | ... | 1895 |
| தியான ஆலயம் | ... | 1896 |
| வியாதிப் படுக்கைத் தோழன் | ... | 1898 |
| துக்கசாகரத் தோணி | ... | 1898 |

## 2. மொழிபெயர்த்த புஸ்தகங்கள்

| | | |
|---|---|---|
| ஆங்கிலேய திருச்சபைச் சரித்திரச் சுருக்கம் | ... | 1873 |
| ஆயாளும் துரைசானியும் | ... | 1873 |
| சூரியோதயம் | ... | 1876 |
| சித்திரக்கதைகள் | ... | 1880 |
| பரதேசியின் மோட்ச பிரயாணம் | ... | 1882 |
| பாலர் பாடங்கள் | ... | 1884 |
| இரண்டாம் புஸ்தகம் | ... | 1884 |
| ஜெசிக்காளின் முதலாம் ஜெபம் | ... | 1884 |
| கற்பனையின்மேல் கற்பனை | ... | 1884 |
| ராஜதயாளம் | ... | 1885 |
| குடும்ப ஜெபத்துணை | ... | 1885 |
| ராஜகட்டளை | ... | 1886 |
| என் ராஜா | ... | 1886 |
| காலைமணிச்சத்தம் | ... | 1886 |
| சிறுதலையணைகள் | ... | 1886 |
| மோட்ச ஏணி | ... | 1888 |
| ஜீவதண்ணீர் | ... | 1891 |
| இந்திய கிறிஸ்தவர்களின் குடும்ப ஜெபங்கள் | ... | 1896 |
| சட்டதிட்டம் (Revised) | ... | 1896 |
| கமலம் | ... | 1896 |
| சகுணா | ... | 1898 |

| | | |
|---|---|---|
| கர்த்தருடைய ஜெபம்-பிரசங்கங்கள் | ... | 1898 |
| இஸ்லாம் மார்க்கம் | ... | 1898 |
| இயேசுவின் அன்பான வார்த்தைகள் (4 பாகங்கள்) | ... | 1898 |
| சர்ச்சுமிஷன் சங்கத்தின் நூறுவருஷச் சரித்திரப் பொழிப்பு | ... | 1899 |
| குழந்தை ஞானஸ்நானம் | ... | 1899 |

## 3. சுயமாய் எழுதின சிறு புஸ்தகங்கள்

| | | |
|---|---|---|
| மோட்சத்தையும் நரகத்தையும் கண்டது யார்? | ... | 1867 |
| களவுபோன பிள்ளை கதை | ... | 1870 |
| பூமிசாஸ்திரம், சென்னபட்டணம் | ... | 1873 |
| மோசேயின் சரித்திரம் அல்லது இடையன் அரசனானகதை | ... | 1875 |
| நீலகிரிஜில்லா பூமிசாஸ்திரம் | ... | 1875 |
| நற்கருணைத்தோழன் | ... | 1875 |
| இராட்சதன் கதை | ... | 1875 |
| வாழைப்பழக் கதை | ... | 1875 |
| தன்னை விற்றவன் கதை | ... | 1875 |
| தம்பியைக் கொன்றவன் கதை | ... | 1875 |
| ஒரு மந்திரி கதை | ... | 1876 |
| தைப்பொங்கல் | ... | 1876 |
| ஆயுதபூசை | ... | 1876 |
| தீபாவளி | ... | 1876 |
| ஏவாள் - ஆதித்தாய் | ... | 1879 |
| எஸ்தர் ராணி | ... | 1879 |
| கன்னிமரியம்மாள் | ... | 1879 |
| சாராளின் சரித்திரம் | ... | 1879 |
| மஹாமகம் | ... | 1897 |
| எச்சரிக்கையாயிரு, நிலைத்திரு | ... | 1899 |
| திருநெல்வேலி சபையின் வளர்ச்சி | ... | 1899 |
| சுய ஆதரவு | ... | 1900 |

## 4. மொழிபெயர்த்த சிறு புஸ்தகங்கள்

| | |
|---|---|
| சிறுவர்க்கு நற்செய்தி | ... 1869 |
| ஜமீன்தாரையும் சமுசாரியையும் பற்றியகதை | ... 1871 |
| இராஜபூஷணம் | ... 1871 |
| ஆட்டுக்குட்டிகதை | ... 1871 |
| தமிழ் முதற்புஸ்தகம் - பதவுரையும் பொருளுரையும் | ... 1871 |
| குஷ்டரோகி சுகமானகதை | ... 1872 |
| முதல் மனுஷன்கதை | ... 1872 |
| ஓநாய்க்கதை | ... 1872 |
| செவப்புத்தாவணி | ... 1872 |
| திராட்சப்பழக்கதை | ... 1872 |
| கிருஷ்ணன்கதை | ... 1872 |
| பிள்ளையார்கதை | ... 1872 |
| கெட்ட குமாரன்கதை | ... 1872 |
| திரு அவதாரச்சரிதை | ... 1872 |
| கைதிகளுக்கு நல்லாலோசனை | ... 1873 |
| கடைக்காரருக்குச் சொல்லும் நல்லாலோசனை | ... 1873 |
| பிறனைக்கொன்றவன் கதை | ... 1873 |
| கல்விப்பயன் | ... 1873 |
| வாழைப்பழம்தின்கிற புதுவகை | ... 1873 |
| நீருற்றும் மேகமும் | ... 1873 |
| சூரிய ஒளியை வரவிடு | ... 1873 |
| பூர்வபாஷை | ... 1873 |
| இராமனுடைய படப்புஸ்தகம் | ... 1873 |
| சின்னத்திருடன் கதை | ... 1873 |
| சண்டைக்காரிகள் கதை | ... 1873 |
| சீர் அழிந்த பிள்ளை கதை | ... 1873 |
| பொய்யர் அகப்பட்ட கதை | ... 1873 |

ஒரு புஷ்பத்திற்காகப் பிராணனை
இழந்தவன் கதை ... 1873
வெள்ளாட்டுக்கதை ... 1873
நன்றாய் உத்தரவு சொன்ன பிள்ளைக்கதை ... 1873
பாலர் ஜெபங்கள் ... 1873
ஆண்பெண் பிள்ளைகள் கதை ... 1873
சுத்தத்தின் பிரயோஜனம் ... 1873
சுத்த ஜலத்தின் பிரயோஜனம் ... 1873
அரசனைப்போல் குடிகள் ... 1873
யோசேப்பின் சரித்திரம் ... 1874
பகையை வெல்லும் மருந்து ... 1875
விடுதலைபெற்ற குருவிகள் கதை ... 1875
கிரயத்துக்கு வாங்கப்பட்டவன் கதை ... 1875
பையன்கள் கதை ... 1875
பெண்பிள்ளைகள் கதை ... 1875
பாடசாலைப்பிள்ளைகள் கதை ... 1875
பாம்புக்கதை ... 1875
பூர்வ இங்கிலாந்து ... 1875
அடையாளங்களின் புஸ்தகம் ... 1875
சித்திரப்படக் கதைகள் ... 1875
கதாசரம் ... 1875
பாலிய இரத்த சாட்சிகள் ... 1875
முத்து வியாபாரி கதை ... 1875
தக்கராமன் கதை ... 1876
செங்குள்ள ராட்சதன் கதை ... 1876
இராஜகுமாரனாகும் வகை ... 1876
எஸ்தர் இராணியின் சரிதை (Pictorial series) ... 1876
தானியேலும் சிங்கமும் ... 1876
யோசேப்பின் சரித்திரம் ... 1876

| | | |
|---|---|---|
| மோசேயின் சரித்திரம் | ... | 1876 |
| சாலமோனின் சரித்திரம் | ... | 1876 |
| மோட்ச பிரயாணி | ... | 1876 |
| யோனா தீர்க்கதரிசியின் சரிதை | ... | 1876 |
| வேதத்திலுள்ள மிருகங்கள் | ... | 1876 |
| பாலர் ஆராதனை | ... | 1884 |
| மிஷன் லித்தனி | ... | 1888 |
| சாவால் ஜீவன் | ... | 1889 |
| உயிரோடு புதைக்கப்பட்ட பிள்ளை | ... | 1889 |
| எஸ்தர் | ... | 1892 |
| ரூத் | ... | 1892 |
| இயேசு கிறிஸ்துவின் ஜீவியம் | ... | 1892 |
| தேவாலய அஸ்திபார ஆராதனை | ... | 1896 |
| பஸ்காவும் ஈஸ்தர் நற்கருணையும் | ... | 1896 |
| பிள்ளை இன்னும் சிலநாள் தாமதிக்கலாம் | ... | 1896 |
| ஞானத்தாய் தகப்பன்மார் | ... | 1896 |
| நாம் தேவனுடைய பிள்ளைகளா? | ... | 1896 |
| பெரிய வெள்ளிக்கிழமை | ... | 1896 |
| மேலே, மேலே, மோட்சத்துக்கு நேரே | ... | 1896 |
| சுவிசேஷத்தின் உண்மை (மகமதியருக்காக) | ... | 1897 |
| பாவமில்லாத நபி | ... | 1897 |
| இயேசுகிறிஸ்து | ... | 1897 |
| இயேசு கிறிஸ்துவின் பாடுகளும் உயிர்த்தெழுதலும் | ... | 1897 |
| இயேசுகிறிஸ்துவைப்பற்றிய தீர்க்கதரிசனங்கள் | ... | 1897 |
| முகம்மது | ... | 1897 |
| தேவனுடைய நாமங்கள் | ... | 1897 |
| சத்திய இஸ்லாம் | ... | 1897 |

இயேசுவோ மகமதுவோ யார் நாம்
நம்பத்தக்கவர் ... 1897
கிராமசுகாதார விளக்கம் ... 1897
பயங்கரமனிதன்.
அன்புக் கதைகள்.
புதையல் தேடுதல்.
சுடர்விளக்கு.
அரசனையும் வேலைக்காரனையும் குறித்த கதை.
தவச உற்சவ ஆராதனை.
தவச உற்சவ கீதங்கள்.
ஸ்திரீகளுக்குரிய மரியாதை.
தேவாராதனையிலிருக்க வேண்டிய ஒழுக்கம்.
ஒழுக்கம்.
கடைசித் தருணம்.
நான் கோவிலுக்குப் போகிறதில்லை.
பரிசுத்த வேதாகமமும் மனைவியின் சகோதரியும்.
திடப்படுத்தல்.
லெந்துநாட்கள்.

## 5. ஒற்றைத்தாள் பிரதிகள்

புகைவண்டி.
மங்களவாக்கு.
எல்லாம் ஒன்றல்ல.
இருவழி நாட்டம்.
வீண்சாக்குப்போக்கு.
புயல்காற்று.
தராசுநிறை.
நீ ஜெபம் செய்கிறாயா?
கள்ளரூபாய்.

நாமம் போடுதல்.
மணியா பதரா?
உனக்குவயதென்ன?
புகைவண்டிச்சீட்டு.
இரண்டுவீடுகள்.
நீர் என்னைப் பார்க்கிற தேவன்.
சங்கிலி உபமானம்.
மதிகெட்ட படவுக்காரன்.
கங்காதீர்த்தம்.
எருதும் அதின் எஜமானும்.
நடக்கப்படித்தல்.
நன்றாய் முடிவது எல்லாம்நன்றே.
ஒரே மத்தியஸ்தர்.
வெள்ளை அங்கி.
இனிமேல்.
தீபாவளி உற்சவம்.
பொங்கல்.
மஹாமகம்.

## மகமதியருக்காக

(1) உண்மையான மார்க்கம் எதுவென்று தேடுவது நம்முடைய கடமை.
(2) இஞ்சிலைப்பற்றி கோரான் சொல்வதென்ன?
(3) பாவமன்னிப்பைக் கேள்.
(4) பாவமில்லாத நபி.
(5) இயேசுகிறிஸ்து.
(6) இயேசுவா, மகமதுவா யாரை நம்புவாய்?
(7) பரலோகத்திலிருக்கிற நம்முடைய பிதா.
(8) மோட்சத்துக்குப் போகும் சரியானவழி.

# 8-ஆம் அதிகாரம்

## அவரைப்பற்றி மற்றவர்கள் கொடுத்த சாக்ஷி

பவுல் ஐயருடைய மரணசெய்தியைக் கேள்விப்பட்டவுடன் அவருடைய சிநேகிதர், இனத்தார், அவருடன் பழகின ஐரோப்பியர் முதலானவர்கள் எழுதின துக்க கடிதங்கள் அனந்தம். அவைகள் ஒவ்வொன்றிலும் அவருடைய குணாதிசயங்களைப் பற்றி எழுதியிருக்கும் எல்லாவற்றையும் இச்சிறு புஸ்தகத்தில் சேர்ப்பது அசாத்தியம். ஆகிலும் சில முக்கியமான கடிதங்களிலுள்ள சில பாகங்களை மாத்திரம் இங்ஙனம் வரைவது வாசிப்பவர்க்குப் போதுமானதென்று நம்புகிறோம்.

I. மகாகனம் ஜெல் அத்தியக்ஷரவர்கள் 1900-ஆம் வருஷம் மார்ச்சு மாதம் 16-ஆம் தேதி எழுதின அன்பான கடிதத்தில் பின்வருமாறு சொல்லுகிறார்கள்:—

''கடந்த ஞாயிற்றுக்கிழமை உம்முடைய கணவர் மரித்துப் போனதைப்பற்றிய அறிவிப்பை நான் மிகுந்த துக்கத்தோடு வாசித்தேன். அவருடைய சமுகமும், அவருடைய ஆலோசனையும், அவருடைய சுகமும் அகன்றுபோய்விட்டதால், உமக்குண்டாயிருக்கும் துக்கத்திலும் துயரத்திலும் நான் உம்மோடுகூட அனுதாபப்படுகிறேன். இயேசுகிறிஸ்து மரித்தோரை விட்டெழுந்திருந்திருக்கிறார். அவருடைய அன்பான பக்தியுள்ள ஊழியக்காரர்களில் உம்முடைய கணவரும் ஒருவரென்பது உமக்குத்தெரியும். இப்போது அவருடைய ஆவி சகல பாவப்பாரமும் சங்கடமும் நீங்கி, அருமை இரட்சகரின் சந்நிதானத்தில் ஒளியையும் சமாதானத்தையும் அனுபவித்துக் கொண்டிருக்கிறது. அவருடைய சரீரம் மகிமையையும் சாவாமையையும் தரித்துக்கொள்ள உயிர்த்தெழுதலுக்குக் காத்துக் கொண்டிருக்கிறது.''

II. மகாகனம் மார்ளி அத்தியக்ஷர் 1900-ஆம் வருஷம் மார்ச்சு மாதம் 12-ஆம் தேதி அனுப்பிய கடிதத்தில் பின்வருமாறு எழுதுகிறார்.

"அனேக வருஷங்களாக நான் அறிந்தவரும், மதிப்பும் நம்பிக்கையுமுள்ளவருமாயிருந்த சிநேகிதனை நான் இழந்து போனேனே என்று துக்கிக்கிறேன். அவர் எடுத்துக் கொள்ளப்பட்டது பெரிய நஷ்டம்."

III சங்கை பொருந்திய ஆர்ச்சு டீக்கன் எல்விஸ் ஐயர் எழுதிய கடிதத்தில்,

"கனம் S. பால் ராவ்சாஹிப் ஐயரின் மரணத்தைப்பற்றி கேள்விப்பட்டு நான் மிகவும் துக்கப்படுகிறேன். அநேக வருஷங்களாக நான் அவரை அறிவேன். என்னுடைய அன்னியோன்னிய சினேகிதனாகவும், என்னுடைய உடன் சகோதர குருவாகவும் அவரை மதித்து வந்தேன். அவர் மரணம் பெரிய நஷ்டம். அவரைப் போல வேலைபார்க்க, அவருடைய ஸ்தானத்திற்கு வரத்தக்க ஆள் ஒருவருமில்லை" என்று சொல்லுகிறார்.

IV. கனம் இ. எஸ். கார் ஐயர் இவருடைய மரணத்தைப்பற்றி எழுதும் போது,

"அது நம்மெல்லாருக்கும், தமிழ்ச்சபைக்கும் சஞ்சலத்தைக் கொடுக்கக்கூடிய பெருநஷ்டம். அவருடைய இடத்தை நிரப்புவது மகாவருத்தமென்று காண்கிறோம்" என்கிறார்.

V. கனம் இ. எ. டக்ளஸ் ஐயர் 1900-ஆம் வருஷம் மார்ச்சு மாதம் 13-ஆம் தேதி பின்வருமாறு எழுதுகிறார்.

"கடைசியாக அத்தியட்சருடைய கூட்டத்தில் நான் அவரைக் கண்டபோதும், அச்சமயத்தில் அவர் வழக்கம்போல தீர்க்கமும் உற்சாகமுமாகச் செய்த பிரசங்கத்தைக் கேட்டபோதும், கடைசிநாளில் பரமராஜாவின் சந்நிதி முன் நான்போய் நிற்கும் வரையில் அவரைத் திரும்பக் காணக்கூடாதிருக்குமென்று கிஞ்சித்தேனும் எண்ணவில்லை. நாம் அவரை இழந்துவிடத்தக்க ஸ்திதியிலில்லை. அவர் மேன்மையான சற்குணமும், அனேக விஷயங்களில் மற்றவர்களை வழி நடத்தக்கூடிய சிறந்த தன்மையும் உடையவராயிருந்தபடியால், அவருடைய ஸ்தானத்துக்குத் தகுந்த ஆள்கிடைப்பதரிது. புஸ்தகங்கள் எழுதுவதில் அவருக்கிருந்த மேலான வல்லமை எங்களெல்லாராலும் அதிசயிக்கப்படத் தக்கதாயிருந்தது. அவருடைய மரணத்தால் இந்திய திருச்சபை வறுமையடைந்தது என்று சொல்லலாம்."

## VI. C.M.S. சுதேசப் போதகர்களில் ஒருவர் எழுதுகிறதாவது:—

"கனம் S. பவுல் ராவ்சாஹிப் ஐயரவர்களின் எதிர்பாராத ஜல்தி மரணத்தைப்பற்றிக் கேள்விப்பட்டு, மிகவும் துக்கப்படுகிறோம். கடைசியாக நாங்கள் அவர்களைப் பாளையங்கோட்டையில் பார்த்தபோது, இனிமேல் அவர்களை இந்தப் பூலோகத்தில் சந்தித்துக்கொள்ள முடியாதென்ற எண்ணம் எங்களுக்குச் சற்றெனினுமுண்டாக வில்லை. அவர்களை இழந்து போனதை என்னவென்று சொல்ல? அவர்களுடைய இனத்தாருக்கு மாத்திரமல்ல, பொதுவாகக் கிறிஸ்தவர்களெல்லாருக்கும் இது பெரிய நஷ்டம், டிஸ்த்ரிக்ட்டு சர்ச்சுக் கவுன்சிலுக்கும் மற்றுங் கூட்டங்களுக்கும் பெரிய நஷ்டமே. ஆலோசனை கேட்க விரும்பும் யாவருக்கும் இது மிகுந்த அங்கலாய்ப்பே. அவர்களுடைய சாயலை நாம் திரும்ப ஒருபோதும் காணமுடியாது. பூமியில் அவர்களுடைய அமிர்தசப்தம் அமர்ந்துபோயிற்று. தீவிரமாயும், தாராளமாயும் எழுதும் அவர்களுடைய இறகுகள் புறம்பேகிடக்கின்றன. பெரும் பிளப்புண்டாக்கப்பட்டிருக்கிறது. அதை நிரப்பக்கூடியது யார்? அவர்களைப்பற்றிய ஞாபகம் ஒருபோதும் மறந்து போகக்கூடியதல்ல. இந்தப் பரமயாத்திரையில், கிறிஸ்தவர்களின் பிரயோஜனத்திற்கென்று அவர்கள் எழுதியிருக்கும் ஏராளமான புஸ்தகங்களினாலே, அவர்கள் பெயர் தலைமுறைகளுக்கும் நிலைத்திருக்கும். மேலான ஊழியத்திற்கென்று பரம எஜமான் அவர்களைத் தம்மண்டையழைத்துக் கொண்டார். மகிமையிலே நாம் ஒருவரையொருவர் கண்டு சந்திக்கும் அந்த நாளுக்குக் காத்திருக்கிறவர்களாய் அவர்களுடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து செல்வோமாக."

## VII. S.P.G. சுதேசப் போதகர்களில் ஒருவர் எழுதுகிறதாவது:

"கனம் பால் ஐயரவர்கள் மரணத்தைப்பற்றிக் கேள்விப்பட்டு மிகுதியும் துக்கப்படுகிறோம். இது இனசனத்தாருக்கும், சுயதேசத்தாருக்கும் சுதேசக் குருக்களுக்கும், எல்லாக் கிறிஸ்தவர்களுக்கும் சகல விஷயத்திலும் பெரும் துக்கமாயிருக்கிறது. அவர்களுடைய மரணம் சடிதியானதென்று தோன்றுகிறது. பாளையங்கோட்டையில் கடந்த மாதம் கூடிய டையோசிசன் கான்பிரன்ஸ் கூட்டத்தில் அவர்கள் பேசியவிதத்தை நான் நினைக்கும்போது, என்னவென்று சொல்ல? அவர்களுடைய மரணத்தினால் சுயாதீன சுபாவமுள்ள குருவையும், தெளிவாய்ப் போதிக்கும் உண்மையுள்ள போதகரையும், சாதுரியப் பிரசங்கியையும், சுயபாஷையில் பாண்டித்தியமுள்ள நல்ல படிப்பாளியையும், வெகு சமர்த்துள்ள மொழிபெயர்ப்பு வரையும் பெரிய வேதசாஸ்திரியையும், வியாக்கியாளியையும், சுதேசக் கிறிஸ்தவர்கள் இழந்து போனார்கள். இந்தியாவெங்குமுள்ள கிறிஸ்தவர்கள் யாவரும் அவர்களுடைய மரணத்தினிமித்தம் துக்கங் கொண்டாடுவார்கள். ஆயினும், அவர்கள் தங்கள் ஜீவியத்தில் நல்லபோராட்டம் பண்ணி, ஓட்டத்தை முடித்து, இப்போது பரம எஜமானிடம் சமாதானமாய் இளைப்பாறுகிறார்கள் என்பது மிகவும் ஆறுதலானது."

VIII. புரோபேசர் சா. சத்தியநாதன் எம்.ஏ.எல்.எல்.டி அவருடைய மரணத்தைப் பற்றி பின்வருமாறு எழுதுகிறார்:—

''அவருடைய சடுதியான மரணசெய்தி என்னைத் திடுக்கிடப்பண்ணிற்று. ஏனென்றால் இரண்டு மாதங்களுக்கு முன்தான் அவரை நல்லசுகத்தோடும், மலர்ந்தமுகத்தோடும் பார்த்தேன். அவர் என்னுடைய நல்ல சிநேகிதரில் ஒருவர். அவருடைய வல்லமை, விடாமுயற்சி, சாமாத்தியம், முதலிய நற்குணங்களுக்காக அவரை மிகுந்த மதிப்புடன் எண்ணிவந்தேன். ஒவ்வொரு நல்விஷயத்திலும் அவர் அனேக சமயங்களில் எனக்கு உதவி செய்திருக்கிறார்.''

IX. அட்வோகேற்று சத்தியயோசேப்பு நாடார் M.A.M.L, எழுதுவது:—

''கனம் ஐயரவர்கள் மரித்துப் போனார்கள் என்ற வதந்தி எங்கள் இருதயங்களைப் பிளந்தது. எங்கள் கண்களுக்குமுன் நின்றாப்போல் இருக்கிறது. மலைபோல சிலநாளைக்கு முன்தான் எங்கள் வீட்டிற்கு வந்திருந்தார்கள். இவ்வளவு நாளைக்குள் போய் விடுவார்களென்று நாம் ஒருவராவது நினைக்கவில்லை. நமது கிறிஸ்துமார்க்க ஐக்கிய கூட்டத்துக்கு ஒரு பலத்த தூணாயிருந்த இந்த தேவமனுஷனாகிய நமது ஐயர் நம்மைவிட்டு நீங்கியது அவர்களுக்கு லாபமேயானாலும், நமக்கு எவ்வளவு சஞ்சலத்தையும், துன்பத்தையும் கொடுக்கிறதாயிருக்கிறது. அவர்கள் தங்கள் கிரீடத்தைப் பெற்றார்கள்.''

X. ஸ்ரீ எ. இக்னேஷியஸ் B.A., சப்ரிஜிஸ்ற்றார் எழுதுகிறதாவது:—

''கனம் S. பால் ராவ்சாஹிப் ஐயரவர்களின் துக்கப்படத்தக்க மரணத்தில், உங்களுக்கு நேரிட்டிருக்கும் துயரமான நஷ்டத்தைப் பற்றி நாங்கள் மிகவும் துக்கப்படுகிறோம். அவர்கள் இப்பூமியிலிருந்தபோது இந்த ஜில்லாவிலுள்ள இந்திய சபைக்கு ஒரு பலத்த தூணாகவும், அபூர்வ அலங்காரமாகவும் இருந்தார்கள். சுதேசக் கிறிஸ்தவர்களாகிய நாம் அவர்களில் ஓர் பக்தியுள்ள குருவையும், ஊக்கமுள்ள சாதுரியப் பிரசங்கியையும், ஞானமுள்ள ஓர் ஆலோசனைக்காரனையும், ஓர் சுயசிந்தையுடையவரையும், தமது முன்னறிவினாலும், அப்பியாசத்தினாலும், கிராமச் சபைகளை ஒழுங்குபடுத்தும் ஞானவானையும், தூய்மையும், மாதுரியமும் நேர்த்தியுமான தமிழ் நூலாசிரியரையும் இழந்துபோனோம். வட திருநெல்வேலி மிஷயோனில், அழிபடக்கூடாத அடையாளத்தை நன்மைக்கென்று அவர்கள் பின்வைத்துப் போயிருக்கிறார்கள்.

''பால் ஐயர்'' என்னும் அவர்களுடைய பெயர் வடதிருநெல்வேலியிலுள்ள கிறிஸ்தவர்கள், கிறிஸ்தவர்களல்லாத மற்றவர்களாகிய யாவருடைய வாயிலும் வழங்கும் அருமையான பழக்கச்சொல்லாய் இருக்கிறது. தமக்கு அன்பான தம்முடைய நேசதாசனை, அழுகையின் பள்ளத்தாக்கிலிருந்து கண்ணீரற்ற பரம இராஜ்யத்திற்கு எடுத்துக்கொள்வது நலமென்று நமது பரமபிதாவின் சித்தமாய் இருந்திருக்கிறது.''

உதகமந்து.

## XI. 1900 ஆம் வருஷம் ஏப்ரல் மாதம் 6-ஆம் தேதி சாக்ஷியா புரத்தில் வசிக்கும் சங்கையுள்ள பிரியமான பவுலையரவர்கள் அம்மாளுக்கு உதகமந்து C.M.S. சபையார் எழுதும் ஆறுத லான நிருபம் என்னவென்றால்:—

"தங்கள் நேசபர்த்தாவாகிய கனம் பவுல் ஐயரவர்கள் சடுதியாய் இம்மையை விட்டுப் பிரிந்து கர்த்தரிடம் குடியிருக்கப் போய் விட்டார்களென்னும் துயர சங்கதியைக் கேட்டு விசனப்பட்டோம். அவர்கள் எங்கள் நடுவில் சுமார் ஒன்பது வருஷமிருந்து தங்களின் விசாரணைக்குட்பட்ட சபையை உண்மையோடும் ஜாக்கிரதையோடும் போதித்து நடத்தி வந்ததை நாங்கள் ஒருபோதும் மறக்கமாட்டோம். அருமையான அந்தப் போதகரவர்களை நாங்கள் ஞாபகம் பண்ணத்தக்கதான பல விஷயங்களுண்டு. இவ்விடத்திலிருந்து ஐயரவர்களும் நீங்களும் திருநெல்வேலிக்குப்போன பின்பும், அவர்கள் இவ்விடத்துக் கிறிஸ்தவர்கள் மேலுள்ள பக்ஷத்தினால் ஒருக்கால் எங்களைச் சந்தித்து அருமையான பிரசங்கம் செய்து கர்த்தருக்குள் எங்கள் நற்காரியங்களுக்கு எழுப்பிவிட்டார்கள். இப்போது அவர்களின் வெகு பிரயோஜனமான வேலையிலிருந்து ஆண்டவர் தம்மிடம் அழைத்துக் கொண்டது நமக்கு வெகு துயரமாயினும், அவர்கள் தங்கள் அனேக விதமான போராட்டத்திலிருந்து இளைப்பாறுகிறார்கள் என்பது ஆறுத லாயிருக்கிறது. அவர்கள் கடைசிமுடிவைப்பற்றிய விருத்தாந்தங்களை பேப்பர்களில் வாசித்து போதனையும், ஆறுதலுமடைந்தோம். சர்வவல்ல தேவன்தாமே தமது உன்னத ஆறுதலை உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும் நிறைவாய் தரும்படி பிராத்திக்கி றோம்."

இங்ஙனம்
தங்களின் அன்புள்ள பிள்ளைகளாகிய
**உதகமந்து C.M.S. சபையார்**

## XII. திருநெல்வேலி ஜில்லா C.M.S. டிஸ்ட்ரிக்ட் கவுன்ச லைச் சேர்ந்த 1900-ஆம் வருஷம் சுதேசசங்க ரிப்போர்ட்டில் இவருடைய மரணத்தைப்பற்றி எழுதியிருப்பது:—

"இந்த ஆலோசனை சங்கத்துக்கும், பொதுப்பட தமிழ்ச் சபைகளுக்கும் இவர் களின் மரணத்தால் உண்டான நஷ்டம் இம்மட்டென்று சொல்லக்கூடாது." "ஜனங்கள் உற்சாகமடைய ஆவிக்குரிய எழுப்புதலான கூட்டங்கள் வைத்து நடத்துவதற்கு ஏதுவாக **தவச உற்சவம்** ஏற்படுத்தி அது சித்தியடைவதற்காக இவர்கள் எடுத்துக்கொண்ட பிரயாசை இவ்வளவு அவ்வளவென்று சொல்லமுடியாது. இவர்களுடைய அபூர்வத்திற மையும் ஆழ்ந்தபுத்தியுமே இது ஒருவாறு அனுகூலமடையக் காரண மாயிற்று.

சென்னை மிஷனெரி கான்பிரன்ஸ் கூட்டங்களுக்கும், அலகபாத்து கான்பிரன்ஸ் கூட்டத்துக்கும் திருநெல்வேலிச் சபையில் தெரிந்து கொள்ளப்பட்ட பிரதிநிதிகளில் இவர்களும் ஒருவர். கவுன்சல் சம்பந்தமான பற்பல கூட்டங்களிலும் இவர்கள் முக்கியமானவர்களாயிருந்தார்கள். இப்பேர்ப்பட்ட கூட்டங்களிலெல்லாம் இப்பொழுது அவர்களில்லாதது வெறுமையாய்த் தோன்றுகிறது. நமது சபைகளில் மாத்திரமல்ல எங்கும் அவர்கள் புகழ்படைத்தவர்கள் தான். அவர்கள் நிமித்தம் தமிழ்ச்சபை முழுவதும் துக்கித்துப் புலம்புகிறதென்று சந்தேகமறச் சொல்லலாம்.''

**''செம்மையானவனைப் பார்த்திரு, அந்த மனுஷனுடைய முடிவு சமாதானம்'' (சங். 37:37).**

**''நேர்மையாய் நடந்தவர்கள் சமாதானத்துக்குள் பிரவேசித்து தங்கள் படுக்கைகளில் இளைப்பாறுகிறார்கள்.''**
**(ஏசா. 57:2)**

**''பரலோகத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகக் கேட்டேன். அது கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள், இது முதல் பாக்கியவான்கள் என்றெழுது. அவர்கள் தங்கள் பிரயாசங்களை விட்டொழிந்து இளைப்பாறுவார்கள். அவர்களுடைய கிரியைகள் அவர்களோடே கூடப்போம்.''**
**(வெளி. 14:13)**

---

## சாமுவேல் பவுல் ஐயர் எழுதிய பிற நூல்கள்

| | | |
|---|---|---|
| கர்த்தருடைய ஜெபம் | .. | ரூ. 40.00 |
| தியான ஆலயம் | .. | ரூ. 65.00 |
| தியானச் சோலை | .. | ரூ. 25.00 |
| மோட்சப் பிரயாணம் | .. | ரூ. 50.00 |
| உங்களோடு ஒரு நிமிடம் | .. | ரூ. 15.00 |
| ஆத்துமநேசரின் அங்கமகத்துவம் | .. | ரூ. 24.00 |
| புதிய ஏற்பாட்டுப் புருஷர் | .. | ரூ. 90.00 |

CLS

**SAMUEL PAUL IYER VAZHKAI VARALARU**

**By S.G. DANIEL**

**விலை ரூ. 30.00 (இந்தியாவில் மட்டும்)**